ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணார்யசரித்திராம்ருதம்.

கொச்சிச் சீமையைச் சேர்ந்த

சித்தூர் என்ற சித்புரி

வேதசாஸ்திரபாடசாலை ட்ரஸ்டி

ஸத்தர்மரத்ந

பிரம்மஸ்ரீ R. சுப்பிரமணிய ஐயரவர்களால்

இயற்றப் பட்டது.

சித்தூர்.

All Rights Reserved.

1928.

Printed at the
Krishna Electric Printing Works,
PALGHAT.

உள்ளுறை.

I.	முகவுரை	...	...	
II.	முன்னுரை	...	...	

நூல்.

–o–

1	ஆத்மஸ்வரூப விவரணம்.		...	1
2	மாயாஸ்வரூபம்.	...	...	7
3	ஆத்ம விசாரம்.	....	....	14
4	ஆத்மவியாபகத்வம்.	....	....	17
5	ஜன்மரஹஸ்யம்,	...	....	28
6	சரித்திராரம்பம்.	...	....	36
7	ஞானம்.	....	...	44
8	ஞானத்தை அறியுமாறு.		...	49
9	ஞானியின் இயல்பு.		...	58
10	ஞானி கர்மி தாரதம்மியம்.		...	64
11	உதாஸீனபாவம்.	...	....	69
12	சரித்திரத்தொடர்ச்சி. I.		...	74
13	பிரம்மநிஷ்டர் இயல்பு.		...	79
14	பிம்பப்பிரதிபிம்பபாவம்		...	87

15	சரித்திரத்தொடர்ச்சி. II.	....	100
16	ஈச்வரதத்வம். ...	...	104
17	ஜீவபரமாத்மைக்யம்	...	111
18	மோக்ஷப்பிராப்தி. ...	...	117
	பின்னுரை. ...	....	125
	மேற்கோள்விளக்கம்....	...	127

பிரம்மஸ்ரீ C. V. கிருஷ்ணையர்

முகவுரை.

கொச்சிச்சீமையைச் சேர்ந்த சித்தூர் தெற்குக்கிராமத்தில் வேதசாஸ்திர பாடசாலை நடத்திக் கீர்த்திபெற்ற, தர்மசீல தர்மரத்ந பிரம்மஸ்ரீ C. V. கிருஷ்ணையர் அவர்கள் சமீபத்தில் ஸ்ரீசைல யாத்திரை சென்று திரும்பி வருகையில் பல்லாவரத்தில் (S. I. Ry.) சிவபதமடைந்தார். இவர் கோயம்புத்தூரில் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்திருந்தோர் குடும்பத்தின் வழிவந்தவர். இவர் தகப்பனார் வன்னியப்பையர் என்பவர் இவ்வூரிலேயே முனிஸீப்பாயிருந்தவர். கோயம்புத்தூரிலே பிறந்தவரும் கொச்சிச்சீமையில் முதன் முதல் திவான் பதவி வகித்தவரும் மஹாகீர்த்திமானுமாகிய பிரம்மஸ்ரீ நஞ்சப்பையர் அவர்கள் பரம்பரையில் அவர்க்கு நெருங்கிய பந்துத்வ முறையுள்ள ஸீதாலக்ஷ்மியம்மாள் என்ற பெண்ணை ஸ்ரீமான் கிருஷ்ணையர் விவாஹம் செய்து கொண்டுஇவ்வூரிலேயே வந்து வாழ்வாராயினர். அவர்க்கு இரண்டு பெண்குழந்தைகளே பிறந்தனர். அவர்களுள் மூத்தமகளை இப் புஸ்தக ஆசிரியர் விவாஹம் செய்துகொண்டார். இளைய மகள் சகலசௌபாக்யங்களோடும் இப் பொழுது வாழ்ந்து வருகின்றனள். அவர்கள் மேன் மேலும் செழித்து வாழ்ந்துவர இறைவன் அருள் புரிக.

ஸ்ரீகிருஷ்ணார்யசரித்திராமிருதம் என்னும் இவ்வுபந்யாஸம் வேதசாஸ்திரபாடசாலையில், பிரம்மஸ்ரீ கிருஷ்ணையரவர்கள் விதேக கைவல்யமடைந்து இரண்டு மாதங்களின்

பிறகு அவர் ஞாபகார்த்தமாக நடத்திய வித்வத்ஸபையில் சென்னைப் பட்டணம் ஹைகோர்ட் வக்கீல் பிரம்ம ஸ்ரீ T. R. ராமசந்திரையர் அவர்கள் அத்தியக்ஷதையின் கீழ் வாசிக்கப் பட்டது. திரும்பவும் ஒரு வருஷத்தின் பின் பாடசாலையில் நடந்த அத்வைத சபையில் சற்று விரிவாக வாசிக்கப் பட்டது. இப்போது புஸ்தகரூபமாக்கப்படுவதால் ஆங்காங்கு பல விஷயங்கள் சேர்க்கப்பட்டன.

சரித்திரப்பகுதிகளாயுள்ள அத்தியாயங்களில் அவருடைய சரித்திரத்தின் முக்கியாம்சங்கள் ஒருவாறு தெரிவிக்கப்பட்டுள்ளன. அவர் இளமைப் பருவ வாழ்க்கை லௌகிகவியவகாரங்கள் முதலியவற்றை இங்கு விவரிக்கவில்லை. ஆத்மாநுபவ திருஷ்டி மிகுந்திருந்த அவர் சரித்திரத்தில் கேவல லௌகிக விஷயங்கள் அதிகமாய் விளக்கப் படுவது பொருத்தமில்லையென அவை சுருக்கிக்கூறப் பட்டன. ஆயினும் இரண்டொன்று இங்கே கவனிக்கத் தக்கனவாம். சித்தூர் தெற்குக் கிராமத்தில் உள்ள சிவாலயத்துக்கும் ஸ்ரீராமாலயத்துக்கும் அவரால் நேர்ந்துள்ள திருப் பணிகள் இக்காலத்தில் மிகவும் பாராட்டத் தக்கனவாய் உள்ளன.

இவர் மிக்க தர்மகுணசீலராய் விளங்கி வாழ்ந்து வருவதையறிந்து இன்புற்ற சிருங்கேரிமடம் ஜகத்குரு ஸ்ரீ சிவாபிநவ ஸச்சிதாநந்த ந்ருஸிம்ம பாரதீஸ்வாமிகள் அவர்கள் "தர்மசீல" என்ற பட்டத்தை அநுக்ரஹபூர்வமாய் உதவியருளினார். வைதிக சித்தையூட்டுவதே கடப்பாடாய்க்கொண்ட பாரத தர்ம மஹாமண்டல மஹாசபையார், இவர்க்கு "தர்மரத்ந" என்ற விருது கொடுத்தனர். இப்படிக் கீர்த்திமிக்கவராய் வாழ்ந்த இவர் 1855-ம் வருஷம் பிறந்து 1926-ம் வரு

ஷம் வரை உலகில் வாழ்ந்தனர். இந்த எழுபது வருஷகாலத்தில் பிற் பகுதியாகிய முப்பத்துமூன்று வருஷம் இந்தச் சித்தூர் வேதசாஸ்திர பாடசாலை நிர்வாகத்தில் இவரால் கழிக்கப் பட்டன.

பாடசாலை நிர்வாகவிஷயத்தில் இவர்க்கு சமானமாக இனி ஒருவர் ஏற்படுவது அரிதென்றே சொல்ல வேண்டும். வித்யார்த்திகள் வித்யாபிவிருத்தியை மேற்பார்ப்பதோடு நில்லாமல் இவர் அவர்களது தேகசௌக்யத்துக்கு வேண்டிய பலவித முயற்சிகளையும் அவ்வக்காலங்களிற் செய்து வந்ததும் பாராட்ட உரியதாம். இப்பொழுதும் பாடசாலைக் கட்டிடத்தில் பலவகையான மருந்துச் செடிகள் வேண்டும் போது உதவும் படி வளர்ந்து வருகின்றன. இந்தப் பாடசாலையில் உள்ள சௌக்கியங்கள் வேறு எங்கும் காண்பதரிது. இதுவே இவர் ஔதார்யகுணத்துக்கும் பெரியதோர் ஞாபகச்சின்னமாம்.

இந்த மஹான் உலகவாழ்வைப் பற்றி விசாரிக்கப் புகுவோமாயின் மிகவும் விரிவாகும். அவரிடம் இருந்த சிறந்த குணங்களின் பலரூபமாக நாம் அறியத் தக்க விஷயங்களே இப் புஸ்தகத்தில் விசாரிக்கப் படுகின்றன. வேத சாஸ்திர பாடசாலையை இந்நூலாசிரியரிடம் ஒப்பிக்கும் போது கொடுத்த சாஸனத்தில் கீழ்க்காணும் விஷயம் கவனிக்கத்தக்கது. "பலவித காரணங்களால் ஹிந்துமத தர்மநாசமும், அதர்ம வர்த்தனையும் ஆவதன் நிமித்தம் நம்முடைய ஸநாதனதர்மம் காலக் கிரமத்தில் நஷ்டமாய்ப் போகும்படி இடையூறுகள் ஏற்பட்டிருப்பதால் சக்தியாநுஸாரணம் அவற்றைப் பரிகரிப்பதற்கு மார்க்கம் உண்டாக்கவேண்டுமென்றுள்ள உத்தேசத்

தோடு சுமார் இருபத்தெட்டு வருஷங்களுக்கு முன்பு, நான் சித்தூர் தெற்குக் கிராமத்தில் வேதசாஸ்திர பாடசாலையொன்று ஸ்தாபித்து நடத்தியதில் அது ஈச்வராநுக்கிரகத்தில் இப்போது ஒருவித புஷ்டியாய் நடந்துகொண்டு வருகிறது." இந்த வாக்கியத்திலிருந்து அவர் வாழ்க்கையின் நோக்கம் விளங்கும். சரித்திரத்தோடு வேதாந்த விஷயங்களைக் கலந்து எழுதியிருப்பதால் ஒவ்வொன்றும் பிரத்யேகமாய் விளங்கும்படி அத்தியாயங்கள் பிரித்து எழுதப் பட்டிருக்கின்றன. வேதஸாரமாகிய பகவத் கீதையைப் போல் பதினெட்டு அத்தியாயங்களில் அமைந்த இப் புஸ்தகம் தர்மசீலராகிய ஸ்ரீ கிருஷ்ணையர் சரித்திரத்தோடு ஞானமிருதத்தையும் கலந்து தெளிவாகவும் சுருக்கமாயும் விளக்குவதால் 'ஸ்ரீகிருஷ்ணார்ய சரித்திராமிருதம்' என்ற பெயரால் வழங்கப் படுகிறது. இது ஒரு புண்ணிய புருஷருடைய சரித்திரம் என்றவளவில் நின்று விடாமல் அவர் சரித்திரத்தால் நாம் அறிதற்குரிய ஆத்மானுபவசிந்தனைக்குரிய விஷயங்களையும் விளக்குவதால் ஸகலராலும் பிரியத்தோடும் படித்து இன்புறத் தக்கதாயிருக்கும் என்பதே இதை எழுதியவர் கருத்தாகும்.

இப் புஸ்தகத்தில் மேற்கோளாகக் கொடுக்கப் பெற்றுள்ள கீதாவாக்கியங்கள் (18-11) என எண்ணாற் குறிக்கப் பட்டுள. முதல் எண் அத்தியாயத்தையும் இரண்டாவது எண் சுலோகத்தையும் குறிக்கும். கீதாவாக்கியங்களும் கீதாபாஷ்ய வாக்கியங்களும் நூற்றிருபது இடங்களில் மேற்கோளாகக் கொடுக்கப்பட்டுள. அநேக உபநிஷத்துக்களிலிருந்தும் சில புராணங்களிலிருந்தும் வந்திருக்கும் மேற்கோள்களும் அவ்வப் பெயரால் குறிக்கப் பட்டுள. உபநி

ஷேத்துக்களின் பெயர் வரிசையும் பிற குறிப்புகளும் மேற்கோள்விளக்கம் என்ற பகுதியில் நன்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. பகவத்கீதா சங்கரபாஷ்யமும், ஸ்ரீதரீயவ்யாக்யானமும், ஐதரேயோபநிஷத்பாஷ்யமும், பிரகதாரண்யக பாஷ்யமும் எடுத்தாளப்பட்டுள்ள இடங்களில் முறையே (கீ—பா) (ஸ்ரீ—பா) (ஐ—பா) (பி—பா) என்ற குறிகளாற் காட்டப் பட்டுள்ளன. இவற்றின் தமிழ் உரை வி. குப்பு சாமி ஐயர், த. வெ சுந்தரராஜசர்மா, நா. சு. ராஜாராமையர் என் போர் வெளியிட்ட உரைகளைத் தழுவியதாம். பிரமசூத்திர சங்கரபாஷ்யத்திலிருந்தும் சில இடங்களில் மேற்கோள்கள் காட்டப் பட்டுள: அவை (ஸூ—பா) என்ற குறியால் தெரிவிக்கப் பட்டுள. இதற்குரிய தமிழ் உரை சென்னையில் உள்ள ஆர்யமத ஸம்வர்த்தனீ பத்திராதிபர் பிரம்ம ஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் மொழிபெயர்ப்பைப் பின்பற்றியதாம்.

இவ் வுரையாசிரியர்களுக்கும், இப்புத்தகத்தை அச்சிடும் விஷயத்தில் ஒப்பு நோக்குதல் முதலிய பலவித உதவிகளைப் புரிந்த சித்தூர் வேத சாஸ்திரபாடசாலை அத்யாபகர் பிரம்ம ஸ்ரீ K. R. ராமா சாஸ்த்ரிகள் அவர்களுக்கும், பொள்ளாச்சி முனிஸிபல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரம்ம ஸ்ரீ நா. கனகராஜையர் அவர்களுக்கும் இந்நூலாசிரியரின் மனமார்ந்த வந்தன உபசாரமொழிகள் உரியனவாம்.

இப்புத்தகத்தின் உறை பச்சை நிறமாக போடப் பட்டிருப்பதிலும் ஒரு உத்தேசம் உண்டு. பச்சை நிறம் மங்களகரமானது. முக்கியமாக நெற்பயிர் நன்கு பயன் தரும்

என்பதை தெரிவிப்பதும் பச்சை நிறமே. நெல் கருப்பிடிக்கும்போது பசுமையாய் இருக்கவேண்டுமென்பதை 'சொல்லருஞ்சூற் பசும்பாம் பின்றோற்றம் போல் மெல்லவே கருவிருந்தீன்று.' என்று திருத்தக்கதேவரும் கூறினர். நெல்விளைவால் ஸர்வ ஜீவராசிகளுக்கும் க்ஷேமாபிவிருத்தி உண்டாகி ஒவ்வொருவருக்கும் மனவமைதி தோன்றுவதால் உலகைசமாதானம் உண்டாகிறது. சுபிக்ஷம் இல்லாத தேசத்தில் சமாதானம் இருப்பதில்லையல்லவா? இதனுல் மங்களகரமானதும் சுபிக்ஷத்தைத் தெரிவிப்பதும் சமாதான லக்ஷியத்தை விளக்குவதுமாகிய பசுமை நிறம் இப் புத்தக உறைக்கு அமைந்திருப்பது உலகைசமாதானத்தை முழு நோக்கமாயுடைய உள்ளுறைக்குப் பொருத்தமானதென்றே புலப்படும்.

இப்புத்தகம் விரைவில் அச்சிடப்பட்டதால் சில எழுத்துப் பிழைகள் நேர்ந்துள. பிழை திருத்தம் ஒன்று பின்னே சேர்க்கப்பட்டுளது. அதை கவனித்துத் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

இப்புத்தகத்தில் ஸ்ரீமத் பகவத் கீதையிலிருந்தும் **125** சுலோகங்களும் உபநிஷத்துக்கள், புராணங்கள் முதலிய கிரந்தங்களிலிருந்து **175**-ம் இப்படியாக சுமார் **300** சுலோகங்களும் ஆங்காங்கு எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன.

ஸர்வ லோகங்களுக்கும் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் மங்களம் உண்டாகக் கடவது.

லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து,

ஸ்ரீ:

முன்னுரை.

ஸதாசார சீலர்களே!

சித்புரி வேதசாஸ்திர வித்தியாசாலை என்று பிரசித்தி பெற்ற இப் பாடசாலையின் தர்மகர்த்தாவாயிருந்து விதேக கைவல்யமடைந்த தர்மசீல, தர்மரத்ந பிரம்ம ஸ்ரீ C. V. கிருஷ்ணையர் அவர்களை எல்லாரும் நன்றாய் அறிந்தவர்களே. அவருடைய மரணம் சம்பவித்துவிட்டது. அந்தப் புண்யசீலரின் பூத தேகம் மறைந்ததாயினும் கீர்த்தி சரீரம் என்றும்நிலையாய் நிற்கும். அத்தன்மையுள்ள பெரியவரை நாம் ஸ்மரித்து நன்றி பாராட்டுவதற்காக இந்த சபை சேர்ந்திருக்கிறோம்

அவரை ஸ்மரிப்பது என்றால் ஸாமாந்யமாய் உலக ஜனங்கள் சொல்வது போல நினைப்பதும் துக்கிப்பதும் அன்று. அவர் தன் ஜன்மாவை ஞானசம்பாதனத்திற்காகவே செலவழித்தாராகையால், நாம் அவரை ஞானமார்க்க அநுகுணமான முறையாலேயே ஸ்மரிப்பது பொருத்தமாம். ஞானமார்க்கத்தைப் பற்றிச் சொல்வதென்றால் ஞானமிருதம் என்று சொல்லப்படும். அது கேட்பவர்க்கும் அவ்விதம் இருக்கவேண்டுமே.

'𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑌮𑍍' (10-18)

(இ-ள்) அமிர்தத்தைக் கேட்கின்ற எனக்குத் திருப்தியில்லை.

இவ்விதம் கேட்கக் கேட்கத் தெவிட்டவில்லை என்றும் மேன்மேலும் கேட்கவேண்டும் என்றும் சொல்லப் பட்ட ஞானமிருதரூபமாகிய உபதேசம், பகவத்வாக்யமானதாலும் அது வாஸ்தவத்தில் அமிருதமயமாகவே இருந்ததாலும் இவ்வாறு சொல்லப்பட்டது பொருத்தமே. ஆனால் விஷய மே தெரியாமலும் தெரிந்த சொற்பவிஷயத்தையும் சரிவரச் சொல்வதற்குப் போதுமான திறமையில்லாமலும், இருக்கிற என்னைப் போன்ற வொருவன், அமிருதப் பிராயமாய் இருப் பதற்கு விரோதமாய் விஷரூபமாகவே தோன்றும்படி செய் துவிடக் கூடும்.

நன்கு விசாரித்தறியாமல் அவ்வித வாதங்களுள் யாதா னும் ஒன்றை உண்மையெனக் கொள்ளுகிறவன் புருஷார்த் தம் பெறுதவன் ஆவதுடன் அநர்த்தத்தை (பந்தத்தை) அடைவான். (ஸ-ு-பா)

ஞானசம்பந்தமான இவ்விஷயம் என்வாக்கிலே பிறப்ப தால் அப்படித் தோன்றுமோ என்ற சந்தேகம் உண்டாகி றது. ஏனெனில், விஷயத்தை ஒருவன் தவறுகச் சொல்ல உலகத்திற் பிறர் அதனைக் கிரகித்துச் சரி யென்று அதன்படி நடந்தால் தீமை அடைகிறுர்கள் அல்லவா? ஆகையால் விஷம் என்று கூறுவதும் பொருத்தமே.

ஆனல் தான் பேசும் விஷயத்தை அறியாமலே பேசுப வன் பேச்சையும் கேட்கவேண்டும். அறிந்தவர்கள் பேசுவ தைக் கேட்பது பொதுவில் உலக சுபாவமேயாம். அவ்வி தமாகிலும் அறிவு நிரம்பாதவர் பேச்சையும் கேட்டுச் சிலகா லங்களில் ஆனந்தப் படுவதுண்டு. அது எவ்வண்ணமென் றல், பக்திச் சுவை சொட்டப் பரமபாகவத சிகாமணிகளான

ஸத்புருஷர் பகவத்கதாப்பிரசங்கம் செய்கிறார்கள். சில பாலர்களும் தம் சக்திக் கேற்றபடி கதாப்பிரசங்கம் செய்கிறார்கள். அறிவு நிரம்பப் பெறாத இந்தப் பாலர்களின் பிரசங்கத்தில் தோஷம் இருந்தாலும் அதைக் கவனிக்காமல் ரசத்தையே அநுபவிக்கிறோம். பகவத்கதை எவர் வாயால் வரினும் மனத்தைக் கவர்ந்து ஆனந்தம் தருவதே.

'ஹரிகதாம்ருதை: ஸ்தாவரஜங்கமாத்மகை: பகவத்பக்திவிசேஷை: நரம்ருககிம்புருஷாமரகிந்நராப்ஸரோரககணாந் ஸம்மோஹயந்நாகத:' (நாரத)

இ—ள் ஸ்தாவரஜங்கமரூபமான பகவத்பக்தி விசேஷங்களைத் தெரிவிக்கிற ஹரிகதாப்ரசங்கங்களினாலே நர நிருக கிம்புருஷ அமர கிந்நர அப்ஸர உரக கூட்டங்களை மோகிக்கச் செய்து கொண்டு (நாரதர்) வந்தார்.

ஸ்தாவர ஜங்கமரூபமாகிய பகவத்பக்தி விசேஷங்கள் எவையெனில், மனத்தால் தியானிப்பது ஸ்தாவர பக்தியென்றும் வாக்கால் ஸ்தோத்தரிப்பதும் காயத்தால் வணங்குவதும் ஜங்கமபக்தியென்றும் கூறப்படும்.

ஹரிகதாமிருதம் எல்லார் மனத்தையும் கவர்வது இதனால் அறியப்படும்.

வித்தையில் பாலன் நான். இங்கு விவரிக்க எடுத்துக்கொண்ட விஷயமோ, ஞானம். நான் என்பதைக் கடைசியில் வைத்ததிலும் உத்தேசம் ஒன்று உண்டு. அது அகங்காரமாகையால் கடைநிலத்து வைத்து அகற்றப்படத்தக்கதே ஏனென்றால், அது கேடுதியைச் செய்ததாம்.

'அஹங்காராந்ந ச்ரோஷ்யஸி ।' (18–58)

இ—ள் அகங்காரத்திஞற் கெடுவாய்.

ஆகையால் அகங்காரம் அகற்றப் படவேண்டியதே. அது பிரம்மநிஷ்டனையும் விடுவதன்று, நான் பிரம்ம நிஷ்டை செய்கிறேன், மற்றவர்களால் இப்படிச் செய்யக் கூடுமா?'
(கீ—பா)

என்று அவனையும் நினைக்கச் செய்யும். அவ்விதமே அது விரக்தனையும் விடுவதில்லை.

'தான் விரக்தன் என்ற அகங்காரத்தை' (கீ-பா-ஸ்ரீ)

அது இவ்வித வலிமை உடையது. அதனுல் அது ஒழிவதே மோக்ஷமாகிறது.

'ஈஹமம்க்ரு தியஷ்டா யஸ்ய
நஷ்டா ஹவதி தஸ்ய வை!'
தேஹஸ்வி ஹவேஞஷ்டு:' (யோக)

இ—ள் எவனுக்கு அகங்காரம் அழிந்து போகிறதோ, அவனுடைய தேகமும் அழிந்துபோகிறது

'எப்பொழுது நான் அந்த லக்ஷ்யத்தில் மனதை நிறுத்தி யிருக்கிறேன் என்ற அகம்பாவமும் கூட நழுவிப்போகுமோ அப்பொழுது பகவத்வஸ்து ஸ்வாநுபவத்திஞல் சிந்தியமே யாய்விடும்.'

ஆகையால் அகங்காரம் ஒழிய வேண்டும் என்ற நோக்கத்துடன் மஹாவித்வான்கள் பலர் கூடியிருக்கும் இம் மஹா சபையில் இவ்விஷயம் சொல்லப் படுகிறது. பாலர்கள் கதை பிரசங்கம் கேட்கப்பட்டு ஆனந்தம் தருவது போல, இதுவும் கேட்கப்படுமென்று நம்புகிறேன். குற்றமுள்ள சொற்களே பேசினும் குழந்தைகள் மழலைச் சொல்லைக் கேட்டு உலகம் மகிழும், அது போலவே, ஞானவிஷயத்தில் பாலப்பிராயத்தில் இருக்கும் எனது இச்சொற்களைக் கேட்பதும் பெரியோர்க்குப் பொருத்தமானதே.

உ

சிதம்பரம்,
27—12—28.

ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்.

பாலக்காடு சித்தூர் வேத சாஸ்திர பாடசாலை டிரஸ்டி மகா-ா-ாஸ்ரீ R. சுப்பரமணிய அய்யர் அவர்கள் இயற்றிய "ஸ்ரீ கிருஷ்ணார்ய சரித்திராமிருதம்" என்கிற புஸ்தகத்தை நாங்கள் பார்வையிட்டோம். அதில் தர்மசீல, தர்மரத்ன என்கிற பிருதுகளுக்கு அனுகுணமாக, தன்னுடைய வாழ்நாள் பூராவையும் நடத்திவந்த (காலஞ்சென்ற) பிர்ம்மஸ்ரீ C. V. கிருஷ்ணய்யர் அவர்களுடைய சிறந்த குணங்களைப் பற்றி தெளிவான தமிழ்நடையில் சாஸ்திரம் யுக்தி அனுபவம் இவைகளை அனுசரித்து எழுதியதைப் பார்க்க, நேரில் வெகு நாள் அந்த தார்மிகர்களுடன் பழகிய எங்களுக்கு அளவில் அடங்காத சந்தோஷமுண்டாகிறது. இவர்களது சரித்திரத்தை ஒட்டி ஷை புஸ்தகத்தில் எழுதப்பட்ட சாஸ்திர சம்பந்தமான விஷயங்களும் மிக திருப்திகரமாக இருக்கின்றன.

மஹாமஹோபாத்யாய
(Sd.) சி. தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர்,
பிரின்ஸ்பால்,
ஸ்ரீ மீனாக்ஷி சம்ஸ்கிருத காலேஜ்,
சிதம்பரம்.

வேதாந்த விபூஷண, சாஸ்திர ரத்னாகர, மஹோபதேசக
(Sd.) க. ச. கிருஷ்ண சாஸ்திரிகள்,
பிரின்ஸ்பால், சம்ஸ்கிருத காலேஜ்,
மைலாப்பூர், சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணார்ய சரித்திராமிருதம்.

முதல் அத்தியாயம்.

ஆத்மஸ்வரூப விவரணம்.

பரமாத்மா இந்தப் பாஞ்ச பௌதிகமான சரீரத்திலே பிரவேசித்திருப்பது எதற்காக? தன் ஸ்வரூபம் உள்ளபடி விளங்குவதற்காகவே. இக்கருத்து நன்கு விளங்குவதற் பொருட்டே பின்வரும் பிரமாணம் வழங்கும்,

"ஸ்வம் ஶரீராத்ம வநுஹைதைநழ" (மைத்ரா)

(இதன்–பொருள்) "தன்னுடைய சரீரத்திலேயே இந்த ஆத்மாவை அறியவேண்டும்."

மேலும் இக்கருத்தைவிளக்கவே,

"ஆத்மா, எப்பொழுதும் காரிய காரண ஸங்காதமாயிருக்கிற சரீரத்தில் ஸம்பந்தப்பட்டுக் கொண்டே தெரியப் படுகிறான்" (பி–பா) என்ற வாக்கியமும் உளது. அதனால் "ஒருவன் முக்தி பெறுதற்கு சரீரமே முதற் கருவி" (கீ–பா) என்று விளங்கும். இதே உண்மையைத் தெரிவிக்க,

"நாஸ்தி ஹொஜ்யம் வரயகூ ஷதஃ" (வரா)

"தன்னைக் காட்டிலும் போக்யவஸ்து வேறில்லை" என்ற பிரமாணமும் உளது.

பரமாத்மா என்ன செய்கிறான்? மாயையை ஸ்வீகரிக்கிறான்.

"ஸத்வவாஜ்யம் பரஹூ
ஸவிஜ்யாஸபலம் ஹவதி" (மஹாநா)

(இ-ள்) "ஸத்பத வாச்சியமான பிரம்மமானது அவித்தையுடன் கூடியதாகிறது"

அதனால் விளையும் பயன் என்ன? பிரபஞ்சம் தோன்றுகிறது.

"ஊயாஊத்ரஜிஷம் தெதழ" (மாண்)

(இ-ள்) "இந்தத்துவைதம் (பலவாய்த்தோற்றுவது) மாயா மாத்திரமே"

மாயை விலகினால் என்ன ஆகிறது? பிரபஞ்சம் தோற்றுவதில்லை.

"ஊயா தக்ஷாயஉவிஷயெ
நெஸ்வாகூம் ந ஜீவதா" (வரா)

(இ-ள்) மாயையும் அதன் காரியமும் நசித்துப்போனால் ஈச்வரத்வமும் இல்லை; ஜீவத்வமும் இல்லை.

இதனால், 'ஜீவேச்வர பேதம் விலகியும் அதற்குக் காரணமான ஆத்மா இருக்கிறான்' என்பது விளங்கும்.

"ஸவஉகூவ்நாயிஷ்டாநம் வா ஸத்யெ" (ஸர்வஸா)

(இ-ள்) ஸர்வ கற்பனைக்கும் அதிஷ்டானமாய் (இருப்பிடமாய்) இருப்பது ஸத்யம்.

இஃது ஒரு காகிதத்தில் விகாரத்தைக் கொடுக்கும் எழுத்து அழிந்தும் காகிதம் இருப்பதுபோலாம். இதனால் 'பேதத்துக்குக் காரணமான மாயை உபாதி விலகியும் ஆத்மா இருக்கிறான்' என்று விளங்கும்.

,, உவாயிவிழயெ ஬ுஹெ஼வ
஬ுஹூவிக ஬ுயழ '' (ஆத்மோ)

(இ-ள்) உபாதி நசித்ததும் பிரம்ம வித்தானவன் தான் பிரம்மமேயாகிறான்.

இதுகாறும் கூறிய பிரமாணானுசாரமாகிய விஷயங்களால், பரமாத்மா தன் ஸ்வரூபத்தை வெளிப்படுத்துவதற்காக தேகேந்திரியாதி ரூபமாகிய மாயா ஸ்வரூபத்தை ஸ்வீகரிக்கிறான் என்பதாகிறது.

' அவர் நாமரூபங்களாக ஆகாவிடில், நிருபாதிக ரூபமாயும் பிரஞ்ஞானகனமாயும் இருக்கின்றவர் எப்படி அறியப்படுவார்? (பிரஹத்-பா)

பிரபஞ்சம் மாயையானதால் தேகமும் மாயையே.

,, தெஹஸ஥ாவி ஬ுவஞுகவாக '' (நாதபிந்து)

(இ-ள்) 'தேகமும் பிரபஞ்ச மானதால்'
என்ற, மேற்கோள் கவனிக்கத்தக்கது. தேகமும் உற்பத்தி நாசமுடைமையால் மாயாஸ்வரூபம் ஆகிறது.

,, க்ஷர ஸவ஬ூதாணி ஹ௦தாநி '' (16—16)

(இ-ள்) க்ஷரம் என்பது எல்லாப் பொருள்களும்.

இங்குக்கூறிய பிரமாணங்களால் தேகம் பிரபஞ்சம் என்பவை ஒன்றென்பதும் அவை மாயாமயம் என்பதும் அழியும் தன்மையன வென்பதும் விளக்கப்பட்டன.

ஆத்மஸ்வரூபம் தெரிவதற்கு ஏன் மாயையை உணர வேண்டும் என்றால், மாயையில்லாமல் ஸ்வரூபம் மாத்திரம் இருந்தால் அது அறியப்பட்டது என்று சொல்லக்கூடாமையால் மாயையைப்பற்றிய உணர்ச்சி வேண்டியதே. ஏனென்றால், மாயையென்ற அந்யபதார்த்தம் இல்லாதபொழுது ஆத்மஸ்வரூபம் ஒரு பொருளேயாகி, அறிபவன் அறியப்படும் பொருள் என்ற பேதம் இல்லாமற் போய் விடுகிறது. இரண்டு வஸ்துக்கள் இருந்தால் அன்றி உணர்ச்சி உண்டாவதில்லை என்பது இதனால் விளங்கும்.

,, யத்ர ஹி த்வைதமிவ பவதி
ததிதர: இதரம் பச்யதி '' (பிரகத்)

(இ-ள்) " எவ்விடத்தில் துவைதம் போல் இருக்கிறதோ, அதில் ஒருவன் மற்றொருவனைப்பார்க்கிறான்."

அதனால் ஜாக்ரதவஸ்தையில் பிரபஞ்சத்தோற்றம் உணர்ச்சிக்கு ஏதுவாகிறது. அதே உணர்ச்சி ஆத்மாவைத் தெரிவிக்கிறது. ஏனெனில் ஆத்மா

,, புத்திக்ராஹ்யம் '' (6—2)

(இ—ள்) 'புத்தியால் கிரகிக்கத்தக்கது.' என்று சொல்லப்படுகிறது. புத்திஎன்பது ஜாக்ரதவஸ்தையே. இதனால் ஜாக்ரதவஸ்தையின் அறிவே அறிவென்பதாம் என்று விளங்கும்.

,, யதாவதேவ புத்த்யர்தம்
ஜகஜ்ஜாக்ரதி பச்யதே '' (வரா)

(இ-ள்) ஜாக்ரத் அவஸ்தையில் எந்த ஜகத்தைப் பார்க்கிறானே, அந்த ஜகத்தை வாஸ்தவமாக புத்தியினாலறிகிறான்.

அவ்வவஸ்தையில் ஆத்மா எவ்விதம் அறியப்படுகிறான்? முகம் தெரிவதற்கு, அழுக்கற்ற கண்ணாடி வேண்டியிருக்கிறதல்லவா? அதுபோலவே களங்கமற்ற புத்தியில் ஆத்ம பிரதிபிம்பம் ஏற்படுகிறது.

"யயாாZஉமெஉ தயாதூநி" (கடம்)

(இ-ள்) "கண்ணாடியில் எவ்விதம் பிரதிபிம்பித்த ஸ்வாத்மாவைக் காண்கிறானோ, அவ்விதமே நிர்மல புத்தியில் ஸ்வாத்மாவைப்பார்க்கிறான்."

இதனாற்கண்ணாடி போல் சுத்த புத்தியில் ஆத்மபிரதிபிம்பம் ஏற்படும், களங்கமற்ற புத்தியே ஆத்மாவைக் கிரகிக்கும் தகுதியுடையதாம்; என்பன, விளங்கும்.

"ஸ-ஜெ ஜாதவி தமெவொூவ
ஸ்வாதூஜ்ஞாநம் ப்ரகாமதெ" (யோக)

(இ-ள்) மனஸ் சுத்தமானால் அவனுக்கு ஸ்வாத்ம ஞானம் பிரகாசிக்கும்.

இதனாற் கண்ணாடியில் ஸத்வாம்சம் அதிகம் இருப்பது போல, அந்த ஸத்வாம்சம் மிகுந்த புத்தியிலேயே ஆத்மப் பிரதிபிம்பம் ஏற்படுகிறதாகிறது. ஏனென்றால், கண்ணாடியைப் போன்ற ஸ்வச்சவஸ்துவே பிரதிபிம்பத்தை உண்டாக்கத்தக்கது. "ஸகல வஸ்துக்களிலும். என்னுடைய சைதன்யப் பிரகாச ஸ்வரூபம் இருந்தபோதிலும ஸத்வாம்சத்தை அதிகமாக உடைய சூரிய சந்திர அக்னிகளில் என் சைதன்யப் பிரகாசம் அதிகம் என்று அறியத்தக்கது. அதெப்படி என்றால், மரம் சுவர் முதலியவைகளில் முகம் தெரியாவிட்டாலும் கண்ணாடியில் அதன் தாரதம்யப்படிக்கு முகம் தெரிவது போல் ஆகும்." (கீ-பா)

அதன்றேல் அது உண்டாவதில்லை. ஸத்வகுணம் நிர்மலம் உடையதே.

"தத்ர ஸத்வம் நிர்மலத்வாத்" (14—6)

(இ—ள்) "அவற்றுள் சத்வகுணம் மாசற்றதாகையால்,"
என்ற பிரமாணத்திற்கிணங்க ஸத்வகுணம் மாசற்றிருப்பதனாலேதான் பிரதிபிம்பத்தை உண்டாக்கத் தக்கதாயிருக்கிறது. இதனாலேயே உபதேசங்களும் ஸத்வகுணத்தில் நிலைக்கும்படி உபதேசிக்கப்படும்.

"நித்யஸத்வஸ்த:" (2—45)

(இ—ள்) "எப்பொழுதும் ஸத்வத்திலே நிற்பவனாகவும்"
என்று ஸத்வகுணத்தின் சிலாக்கியதையும் அதுவே ஞான காரணமாயிருப்பதும் ஆத்மஸ்வரூப ஞானத்துக்கும் மாயையை அறிந்து ஒழிவதற்கும் உதவியாயிருப்பதும் தெரிவிக்கப்பட்டது,

——:0:——

இரண்டாம் அத்தியாயம்

மாயாஸ்வரூபம்

—:o:—

சுத்த அசுத்த புத்தி யென்பது என்ன? அசுத்த மானது காமத்தோடு கலந்தது. சுத்தம் அதினின்று நீங்கியது.

“அஶுத்தம் காமஸங்கல்பம்
ஶுத்தம் காமவிவர்ஜிதம்” (அமிர்)

(இ—ள்) அசுத்தம் காமத்தோடு கலந்தது. சுத்தம் காமத்தினின்று நீங்கியது. இதனால் அசுத்த புத்தியில் ஆத்மா பிரகாசிப்பதில்லை,

“நைநம் பஶ்யந்த்யசேதஸ:” (15—11)

(இ—ள்) புத்தி திருந்தாத அவிவேகிகள் இவனைக் காண்பதில்லை.

புத்தியென்பது மாயையின் ஸ்வரூபம்.

“புத்திரூபம் ப்ரஹ்மஶக்திரேவ ப்ரக்ருதி:” (நிரா)

(இ—ள்) புத்திஸ்வரூபமாகிய பிரம்மத்தினுடைய சக்தியே ப்ரகிருதி (மாயை)

அது கண்ணாடியைப்போல் ஆத்மாவின் வேறானது.

"புத்தெஸ்ஸாக்ஷிதயா ஸ்தித்வா" (சுக)

(இ—ள்) 'புத்திக்கு ஸாக்ஷியாயிருந்து.' இங்கு ஸாக்ஷி என்னும் பதம் ஆத்மா வேறு என்பதை விளக்கும்.

இதனால், மாயை, ஆத்மாவில் புஷ்பத்தில் நிறம் பொருந்தியிருப்பது போல் ஒட்டி யிருப்பதில்லையென்று புலப்படும். மாயை அவ்வாறு ஒட்டியிருக்குமாகில்,

"மாயா சாநாதிரந்தவதீ" (ஸர்வஸா)

(இ—ள்) "மாயை அநாதி முடிவுடையவள்" என்றதற்கேற்ப, முடிவுள்ளதால் ஆத்மாவும் அவ்விதமே முடிவுள்ளதாக நேரிடும். ஏனெனில் புஷ்பத்தினின்று நிறம் வேறுபட்டிருப்பதன்று. தவிர, நிறம் குணமாகையால் விகாரமுடையது. அது மோக்ஷத்திற்கு ஹானி ஆகிறது. அதனால் அதைப்போதிக்கும் கிரந்தங்களும் வியாஜம் என்றே சொல்லநேரும். இங்குக் கூறிய காரணங்களால் மாயை ஆத்மாவுக்கு விசேஷணம் என்று கொள்வது தகுதியன்று. "ஆகவே இந்த விசேஷணம் ஞானி அஞ்ஞானி இவர்களுடைய எண்ணங்களின் பேதத்தைக் குறித்து நிற்கின்றது வெண்மை நிறமான தன்மையானது பாலோடு சேர்ந்திருப்பதுபோல் செய்பவனும் செய்விப்பவனும் இருக்கும் தன்மை ஆத்மாவோடு ஒற்றித்திருக்கலாம் என்று சந்தேகம் உண்டாகாதிருக்கும்பொருட்டு," (கீ—பா) இவ்வாறு எடுத்து விளக்கப்பட்டது.

மாயை ஆத்மாவில் விசேஷணமல்லவென்ற உண்மையை உணராதிருந்தால் ப்ரம்மதத்வ விஷயத்தில் மயக்கமுண்டாம்.

"இந்திரிய மனோபுத்திகளில் ஆத்மதர்சிகளுக்கு, பிரம்மத்தையும் உபாதியையும் வேறுபடுத்தி அறியாமையாலும், புத்தியாதிகள் விதிதங்களானதாலும் பிரம்மத்தை அறிந்தேன் என்ற பிராந்தி உண்டாகலாம். (கேந—பா)

இதனால் மாயை ஆத்மாவில் உபாதியே என விளங்கும்

விசேஷணம் என்பது புஷ்பத்தின் நிறம்போற் பிரிபடாமல் ஸ்வரூபத்திற்பிரவேசித்திருப்பது. அதனாலேதான் மாயை அவ்விதம் ஆத்மாவோடு சம்பந்தித்திருப்பதாய்க் கொள்வது தகுதியன்று.

உபாதி என்பது இன்னது, என்று பின்வருமாறு விளக்கப்படும்.

"எது தன் தன்மையை வேறொன்றினிடத்து இருப்பதாகத் தோற்றுவிக்கிறதோ, அது உபாதி" எனப்படும்.

மாயை ஆத்மாவில் விசேஷணமில்லையென்றால், வேறு எவ்விதம் கொள்ளலாம் எனில் உபாதி என்று கொள்வதே தகுதியாம். "நூல் வஸ்திரம் இவைகளுக்கிருப்பதுபோல் ஸமவாயம் அதாவது நீக்கமின்றி ஒற்றித்து நிற்றல் என்னும் சம்பந்தமும் சொல்லக்கூடாது" (கீ—பா)

"யதா ஜபாகுஸுமஸந்நிதாநாத் ஸ்படிகே ரக்தஸ்படிகப்ரதீதி:
ததபாவே ஶுத்தஸ்படிகப்ரதீதி: ப்ரஹ்மணோ(அ)பி மாயோபாதிவஶாத் ஸகுணவிஶிஷ்டத்வப்ரதீதி: உபாதிவிலயாத் நிர்குணநிரவயவத்வப்ரதீதி: ।" (மஹா)

2

(இ—ள்) "செம்பருத்திப்பூவின் ஸமீபத்திலிருக்கிற ஸ்படிகமானது ரக்தவர்ணமாய்க் காணுகிறது. அது ஸமீபத்தில் இல்லாவிட்டால் ஸ்படிகம் சுத்தமாகவேயிருக்கிறது. பிரமத்துக்கும் மாயோபாதியால் ஸகுணம் வேறுபோற்காணுதல் முதலிய தோற்றங்கள் உண்டாகின்றன. உபாதி நசித்தால் நிர்க்குணம் அவயவமற்றிருத்தல் முதலிய தோற்றங்கள் உண்டாகின்றன."

இதனால் ஆத்மாவில் மாயை விசேஷணம் எனக்கொள்வது சரியன்று. ஏனென்றால் ஸமீபத்திலிருக்கும் செம்பருத்திப்பூ ஸ்படிகத்தின் ஸ்வரூபத்தில் பிரவேசிப்பதில்லை ஸமீபம் என்ற காரணத்தால் பிரவேசித்தது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. அது ஸ்படிகத்தில் தோற்றமே யல்லது வாஸ்தவத்தில் விகார மன்று என்பது செம்பருத்திப்பூ விலகுகையால் தெளிவாகிறது. இதுபோல் மாயாரூப உபாதியால், ஆத்மாவிற் கர்த்ருத்வப் பிராந்தி உண்டாகிறது. அது வாஸ்தவத்தில் இல்லை என்ற அறிவே கர்த்ருத்வ நிவர்த்தியைத்தருவதாகிறது.

ஸ்படிகத்தில் விகாரத்தோற்றம் அநித்யம். அதற்குப் பூ காரண மாகுமே யன்றி ஸ்படிகமே யன்று. ஏனென்றால் போவது வருவது பூ, அது அதற்கு விகாரம். இதனால் விகாரப்படுவது மாயை; ஆத்மாவன்று.

"தீவிக்ரியா விகாராணாம்
ஸாக்ஷிணம் நிர்விகாரிணம்" (முக்தி)

இ—ள் "புத்தியினுடைய அநேக விகாரங்களுக்கு சாக்ஷியாயும் விகாரமற்றவனாயும்" (இருக்கிறான்)

புத்தி என்பது மாயையின் அம்சம்.

'யோ யோநிம் யோநிமதிதிஷ்டத்யேகஃ' (சுவே)

(இ—ள்) "எவர் மூலப் பிரகிருதியாகிய மாயை யிடத்திலும் பின்ன பின்னப் பிரகிருதி யாகிய மாயை யிடத்தும் இருக்கிறாரோ॥"

இதனால் ஆத்மாவில் மாயை, உபாதி விசேஷணம் என்ற பேத அறிவு, ஞானி அஞ்ஞானி என்ற பேதத்தைத் தருவதாகிறது.

'குணேப்யஶ்ச பரம் வேத்தி'

(இ—ள்) "குணங்களுக்குப் புறம்பாக அறிகிறான்."

ஞானிஉபாதியாய்ப் பார்க்கிறான். அஞ்ஞானி விசேஷணமாய்ப்பார்க்கிறான். அதாவது மாயையும் ஆத்மாவும் இன்னதென்று தெரியாமல் மயங்கி ஒன்றை மற்றொன்றாகவும் இரண்டையும் ஒன்றாகவும் உணர்கிறான் என்பதாம். மாயை வேறன்று என்ற எண்ணமே கர்த்ருத்வபுத்தியாகிறது."அதாவது மாயை ஆத்மாவின் விசேஷணம் எனக்கொள்ளப் படுவதே கர்த்ருத்வ புத்தியாகிறது. இப்படி விசேஷணமாய்க் கொள்ளப்படும்போது ஆத்மாவுக்கே இன்மை என்ற தோஷம் உண்டாகிறது. அது பேதபுத்தியைத் தருவதாகிறது. பின்னமாய் நினைத்தாற் காமம் உண்டாகிறது. அதனாற் கர்மமும், கர்மபலனும் உண்டாகின்றன. அப்பொழுதுதான் ஸம்ஸாரித்வம். இது அவித்யையின் காரியம்". (பி—பா) மாயை வேறல்ல என்று நினைப்பதே கர்த்ருத்வ புத்தியாம். கர்த்ருத்வ புத்தி என்பது, தான் நினைப்பதும் செய்வதும் ஆகிய எல்லாம் தன் சுகப்பிராப்தி துக்க நிவர்த்தியின் பொருட்டே என்பதாகிய எண்ணம்.

'ஸாவத்ஸவஸாஸ்ரயஃ ததத்த்பா தேஹாஞ்
கரதிஸாஷு கத-ா' ஸர்வ

இ—ள் சுகதுக்க புத்தியினை அனுசரித்து அததனிச்சையினாலே தேகாந்தக் கிருதிமான் கர்த்தா.

ஒவ்வொருவனும் இவ்விதமே செய்தபோதிலும் தன்னுடைய சுகதுக்கத்திற்குக் காரணம் முற்றிலும் தன் ஸ்வாதீனத்தில் இருப்பதன்று எனக்காண்கிறான். அதனால் தனக்கு அந்யமான வஸ்துவில் நிவர்த்தியைத் தேடுகிறான். அந்ய வஸ்துவைத் தேடுவது என்றால் அது ஒரு அபேக்ஷையாகிறது. அதனால் அது ஸ்வாதீனமற்றதன்மையைக் கொடுக்கிறது.

'ஹ்ராமயஷு ஸவ-ஹூதாநி' 18–61

இ—ள் "எல்லாப் பிராணிகளையும் ஆட்டிவைக்கிறான்" அப்பொழுது அவசனாகிறான். இதுமாயையின் காரியம்.

இதனால் ஒருவனிடத்தில் மற்றொருவனுக்கு ஒன்று கொடுக்கும்படி இரண்டு பழங்களைக் கொடுக்கையில் அவைகளில் சிரேஷ்டமானதைத்தனக்குவைத்துக் கொள்ளுகிறான். இது விசாரத்தால் நிவர்த்திக்கக் கூடியது

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே
ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ । 3–19

இ—ள் "விருப்பு வெறுப்புகள் ஒவ்வொரு இந்திரியத்தினுடைய விஷயத்திலும் அமைந்துள்ளன."

இதனால் ராகத்வேஷங்கள் கிரமமாகக் குறைபடுவது கர்த்ருவத்வ நிவர்த்திக்கு ஏதுவாகிறது என விளங்கும்.

'𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿
𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾'

(இ—ள்) "இந்திரியங்கள் எவனுக்கு வசத்தில் இருக்கின்றனவோ அவனுக்கு ஞானம் நிலைத்தது"

இதனால் அடக்கமுடையவன் க்ஷேமத்தை அடைகிறான். இதனால் ஒவ்வொருவனும் என்ன செய்யவேண்டும்? "ஆகவே சிரேயோ மார்க்கத்தை இச்சிப்பவன் சாஸ்திரீயமாகிய விவேக புத்தியினால் நல்லவற்றைத் தெரிந்து செய்தலும் தீயவற்றை அறிந்து தவிர்தலும் தான் புருஷப்ரயத்னத்தால் ஆகக்கூடியது (கீ—பா)

இவ்விதத்தால் தன்குற்றத்தைத்தானே ஆராய்வது பந்த நிவர்த்தியைத்தருவதாகிறது.

'𑌯𑌥𑌾 𑌸𑍁𑌨𑌿𑌪𑍁𑌣𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑌰𑌦𑍋𑌷𑍇𑌕𑍍𑌷𑌣𑍇 𑌰𑌤𑌃 𑌤𑌥𑌾 𑌚𑍇𑌨𑍍𑌨𑌿𑌪𑍁𑌣𑌃 𑌸𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑍋 𑌨 𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌤 𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌤𑍍' (வரா)

(இ—ள்) நல்ல புத்திசாலியாயிருக்கிறவன் பிறருடைய தோஷத்தைக் கண்டு பிடிப்பதில் சந்தோஷம் அடைவது போலத்தன் குற்றத்தைக் கண்டு பிடிப்பானானால் எவன்தான் பந்தத்தினின்று விடுபடமாட்டான்?

இதனால் தோஷநிவர்த்தியே பந்தநிவர்த்தியாகிறது

மூன்றும் அத்தியாயம்.

ஆத்மவிசாரம்.

——:o:——

புகைக்கு அக்நி காரணமாய் இருப்பதுபோலவே ஆத்மா பிரபஞ்ச மாயைக்கு ஸாக்ஷிமாத்திரமாய் இருப்பதாய் அறியலாம். காரியகாரணங்களாகிய புகை அக்னி என்ற இரண்டும் ஒரே காலத்தில் விலக்ஷணமாய்ப் புலப்படுகின்றன. அவ்வண்ணமே பிரபஞ்சத்தைப்போல் அதற்குக்காரணமான ஆத்மாவும் ஜாக்ரதவஸ்தையில் எட்டக்கூடியவன் என்று ஆகிறதல்லவா? அகண்டாகாரமாகிய ஆத்மாவில் ஒரு சிறு பகுதியாய் அடங்கிய பிரபஞ்சம் அவ்வாத்மாவைத் தனக்குள் அடக்குமோ?

'வஞீகூுத ஸூாவயவெவரஸஂவுதழ' (நாரத)

(இ—ள்) (ஆத்மா) பஞ்சீகிருதமாயிருக்கிற தன்னுடைய அவயவங்களாலே மறைக்கப்படாதவன்.

மறைக்கப்படாத பொருள் வெளிப்படையாய் விளங்க வேண்டும். ஆகையால் பிரபஞ்ச வுணர்ச்சி நிலையிலேயே ஆத்மா எட்டக்கூடியவன் என்று ஆகிறது. இதுவே ஆத்மாவின் பிரத்யக்ஷ ஞானம் என்று சொல்லப்படும்.

'வுதூக்ஷாவமஜழ' 9–2

(இ—ள்) பிரத்யக்ஷமான உணர்ச்சியையுடையது. (பிரத்யக்ஷத்தால் அறியப்படுவது) என்பது.

ஆனால் உலகத்தில் அவ்விதம் பரமாத்மஸ்வரூபம்காணப் படவில்லையே. ஏன்? ஒவ்வொருவரும் ஐஹிக விஷயத்தில் அவரவர்க்கு ஏதேது பிரியமாகத்தோற்றுகிறதோ அதற்கு உரிய உபாயத்தை நாடி அதனை சாதித்துக்கொள்ளுகிறார்கள் அல்லவா? அதுபோலவே அறிதற்கரியதாகிய ஆத்மாவை அறியவும் பிரயத்னம் வேண்டும் அன்றோ?

'ஸ யதாகாமோ பவதி தத்க்ரதுர் பவதி' (பிரகத்)

(இ—ள்) அவன் எதை விரும்புகிறானோ அதைச்செய்ய வேண்டியவன் ஆகிறான்.

ஆத்மாவைப்பற்றிய உணர்ச்சியும் அதுபோலவே தக்க முயற்சியால் சித்திக்கக்கூடியதே. இதற்கு உபாயம் யாது? சதாவிசாரம் செய்வதேயாம்.

'ஸதா விசாரரூபோऽஹம்' (மைத்)

(இ--ள்) எப்பொழுதும் விசாரரூபனாயும் இருக்கிறேன்.

இதனால் ஆத்மா விசாரரூபன் என்பது தெரியவரும்.

இதனால் ஆத்மா விசாரத்தால் அறியக்கூடியவன் என்பதாம். விசாரம் புருஷப்பிரயத்னத்தினால் ஆகக்கூடியது.

பௌருஷப்ரயத்நஸாத்யவேதாந்தச்ரவணாதி (முக்தி)

(இ—ள்) "புருஷப்பிரயத்னத்தினால் சாத்தியமாகும் வேதாந்த சிரவண முதலியவை".

இதனாலும் ஆத்மா ஜாக்ரதவஸ்தையில் எட்டக்கூடியவன் என்று சொல்லப்பட்டது. அவ்வவஸ்தையிற் பிரபஞ்சம்

தோற்றுவதால் அதுவே சிருஷ்டியாகிறது. சிருஷ்டி என்பது மாயையின் ஸ்வரூபம். அதனால் மாயையை ஆசிரயித்தே ஸ்வரூபம் தெரியவேண்டியதாகிறது. ஏன் என்றால், மாயையின்றி உணர்ச்சியேற்படுவதில்லையென்று சொல்லப்பட்டது. மாயை ஸ்வரூபத்தை மறைப்பதில்லையென்றும் விளக்கப்பட்டது. மாயையை ஆசிரயித்து ஸ்வரூபம் தெரிந்துகொள்வோம் என்றே கொள்ளலாம். அது எவ்விதமாகத்தெரிந்தது அதில் விகாரமில்லையென்று தெரிந்தது.

‘ அவிகாரய–ஃ: ’ (2–25)

(இ—ள்) விகாரப்படுவதன்று.

விகாரம் இருவகைப்படும். விகாரம் என்பதும் நாசம் என்பதும் ஒன்றே. உலகத்தில் காணப்படுகிற இரண்டுவித நாசமும் ஆத்மாவுக்குக்கிடையாது. அவ்விரண்டு விகாரங்களையும் இந்த தேகத்தில் அறியலாம். சரீரஞ்சாம்பலாய்ப் போய் மறைவதுபோன்ற நாசம் ஒன்று. சரீரம் உயிரோடிருக்கும்போதே வியாதி முதலியவற்றால் வேறுவகையாய் மாறுவதொன்று”. ஆத்மா இவ்விரண்டுவித விகாரங்களையும் அடையமாட்டான்; நாசமுமற்றவன் (கீ—பா)

நான்காம் அத்தியாயம்.

ஆத்மாவின் வியாபகத்வம்.

—— :O:——

ஆத்மா ஸூக்ஷ்மத்துக்கெல்லாம் ஸூக்ஷ்மமாய்ப் பிரகாசிப்பதால் விகாரப்படாதது என்று அறியப்படும்.

'ஸூக்ஷ்மாச்ச தத்ஸூக்ஷ்மதரம் விபாதி' (முண்ட)

இ—ள் "அது ஸூக்ஷ்மத்துக்கெல்லாம் ஸூக்ஷ்மமாகச் சோபிக்கிறது." ஆனால் அணுவுக்கும் அணுவாகச் சொல்லப்படுவது.

'அணோரணீயாம்ஸம்' (8–9)

இ—ள் அணுவைக்காட்டிலும் அணுவாய் இருக்கிறது.

இதனால் பிரமஸ்வரூபமே அணுவோ என்று மயங்கக் கூடாது. அதன் ஸூக்ஷ்மத்தன்மையைத் தெரிவிக்கும் பொருட்டே இவ்வாறு கூறப்பட்டது. அணு மாயாமயமே. ஆத்மஸ்வரூபம் அணுவன்று

'அநணு' (பிரகத்) அணுவுமன்று.

அது ஸூக்ஷ்ம மானதாற் பூரணமானதே.

ஸர்வவ்யாபி ஸர்வஸாக்ஷீ I (மைத்)

இ—ள் சகலத்திலும் பூர்ண ஸ்வரூபனாயிருக்கிறேன். அதனாற் பிரிபடாமல் ஒன்றாகவே யிருக்கிற தன்மையும் அறியப்படும்.

‘ குவ௰ஸ ஊவாடஷூி ’ (வரா)

(இ—ள்) அகண்டமாய் (இடைவிடாமல்) இருக்கிறேன். ஆகாசம் வாயு முதலியவைபோன்ற ஸூக்ஷ்ம வஸ்துக்கள் ஸ்வபாவமாகவே வியாபகமுள்ளவை யல்லவா? பூரணமானதால் ஸமமானது; ஸமமானதால் குறைபாடில்லாதது. குறைபாடு என்பது ஸங்கல்பரூபமான மாயையின் குற்றம். அது காமரூபம்.

ஸ௰கஒுவுஹவாநு காஊாநு (6–26)

(இ—ள்) நினைப்பைப் பிறப்பிடமாய்க் கொண்ட ஆசைகள். காமமே, குரோதத்துக்குக் காரணமானதால், அதுவே பேத புத்தியைத் தாங்கி யிருப்பது எனப்படும்.

காஊாக ஂ௵ொயொஂஹிஜாயதெ । (2–62)

(இ-ள்) ஆசையினின்றும் கோபம் உண்டாகின்றது. ஆத்மா ஸங்கல்பமற்றவன். ஆனதால் மாயையின் குற்றம் இல்லாதவனாகிறான்.

‘ ஸ௰க ஒுஙஹிதொஷூஹழ ’ (மைத்)

(இ-ள்) சங்கற்பமற்றவனாயிருக்கிறேன்.

அதனால் ஆத்மா எல்லாவற்றிற்கும் ஆதாரம் ஆனாலும் ஒன்றிலும் ஒட்டாதவன் என்பதாயிற்று.

குஸக்தஂ ஸவ௫ஹரவைவ । (13–14)

(இ-ள்) “எல்லாவற்றையும் தாங்குவதாயினும் ஒன்றினும் பற்றற்றது.

ஆத்மா குணசம்பந்தமற்றதால் ரூபமில்லாதது. அதாவது கலப்பில்லாமல் ஒரேவிதமாய் இருப்பது.

'𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌸𑌦𑍈𑌕𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑍍' (மைத்)

(இ—ள்) "எப்போதும் ஒரே ரூபமுள்ளவனாயிருக்கிறேன்." எனப்படுவதால் ஆத்மா பிறவஸ்துக்களைப்போல் ஸ்வரூபம் மாறுவதில்லை. ரூபமற்றதால் எல்லையற்றது. குணசம்பந்தமற்றதால் அஃ இருளன்று. இருளுக்கு மேற்பட்டது. கடந்தது.

'𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌤𑍀𑌤𑌮𑍍' (அக்ஷி)

(இ-ள்) அவித்யையாகிற அந்தகாரத்தை அதிக்ரமித்தது.

இதன் கருத்து என்னவெனில், ஆத்மப்ரகாசம் அஞ்ஞான இருளுக்கு அடுத்து அப்பால் உள்ளது என்பதே.

'𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍' (8–9)

(இ-ள்) இருட்டிற்கு அப்பால் உள்ளவன்.

அதாவது:— ஒரு வஸ்து இருக்கிறது, அல்லது இல்லை என்று அறிவதற்கு மட்டும் போதுமான பிரகாசம். ஏனென்றால், அதுவே ஸுகம் மேற்கொண்ட நிலையாகிறது.

'𑌸𑍁𑌖𑌮𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌮𑍍' (6–21)

(இ-ள்) 'முடிவில்லாத இன்பம்'

இதன் தத்வமென்னவெனில், எதிலும் மிதமே ஸுகமான நிலையென்பதே. பின் வரும் வாக்யம் இதனைத் தெரிவிக்கும்.

'யுக்தாஹாரவிஹாரஸ்ய' (6–17)

(இ-ள்) சரியான உணவும் விநோதமுமுள்ளவனுக்கு.

இது ஸுகோஷ்ணம் என்று உலகில் சாதாரணமாய் வழங்கும் சொல்லாலும் அறியப்படும். இவற்றைப்போல ஆத்மப்ரகாசம் ஸுகப்ரகாசமென்பதே அறியப்படும். இதுவே ஆத்மப்ரகாசம். அதனால் ஆத்மா இல்லையென்று சொல்பவனும் நினையாமலே அவ்விதம் சொல்பவனாகிறான். ஏனென்றால், ஒரு வஸ்து இல்லையென்று தீர்மானப்படுவதும் பிரகாசத்தை அபேக்ஷித்தே ஆகிறது.

'ந ப்ரகாஶோऽஹமித்யுக்தி:
யத்ப்ரகாஶைகபந்தநா ।' (வரா)

(இ-ள்) "நான் ப்ரகாசமில்லையென்ற சொல்லானது எந்த ப்ரகாசத்தால் உண்டானதோ"

இந்த ப்ரமாண வாக்யத்தால் எந்த வஸ்துவும் இல்லை என்று தீர்மானிப்பதற்கும் ப்ரகாசம் அவசியம் வேண்டுவதாகிறது. இருளில் ஒருவித வஸ்துவைத் தேடுவதென்பது ஸ்வபாவமில்லையல்லவா? ப்ரகாசமின்றி இல்லையென்று சொல்வதற்கு ஆவதில்லை. ஆகையால் இல்லையென்று சொல்வதிலும் ப்ரகாசமிருக்கிறது. இதனால் ஆத்மா ஸ்வப்ரகாசனென்று அறியலாம்.

'தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி' (கடம்)

(இ-ள்) 'இந்த ஸகலஜகத்தும் பரமாத்மாவினுடைய ப்ரகாசத்தால் விளங்குகிறது.

இதனால், "ஆத்மா இருக்கிறதென்ற பிரசித்தி இல்லாவிடில் எல்லா லோகமும் நான் இல்லையென்றே அறியவேண்டிவரும். இவ்விதம் எவனொருவன் மறுக்கிறானோ அவனது பிரத்யகாத்மரூபமாக அது இருப்பதே அதன் காரணமுமாகும்" (ஸ—௧—பா) இதனால் அங்ஙனமே ஆத்மாவை மறுப்பதும் பின்ன அறிவும் மாயையின் விகாரத்தாலாவது என்று அறியலாம்.

ஒரு புஸ்தகத்தில் விஷயம் ஒன்றுமில்லையென்று சொல்பவனும் அதைப்பார்த்து அறிந்திருப்பவனே. அதுபோலவே ஒருவஸ்து இல்லையென்பதும் தேடிப்பார்த்தே சொல்லவேண்டியதாகிறது. இருளில் தேடுவது இயல்பன்று என்றும் சொல்லப்பட்டது. அதனால் அது பயனற்றது. ஒரு வஸ்து இல்லையென்று சொல்வதற்கும் பிரகாசம் அவசியம் வேண்டுவதே என்பது இதனால் விளங்கும். அதனால் இல்லையென்ற அறிவைத் தரும் பிரகாசமே ஆத்மப்பிரகாசம் ஆகிறது. இக்காரணத்தால் இல்லையென்பவனும் ஆத்மாவிற்கந்நியனல்லன். அவனும் தன் ஸ்வரூபத்தை அறியாமலே அறிந்தவனாகிறான்.

ஏனென்றால்,

"ஒரு வஸ்துவை என்றைக்கும் பாராமலும் கேட்காமலும் இருக்கையில் இல்லையென்று மாத்திரம் எப்படிச்சொல்லக்கூடும்? (கீ—பா) இவ்வாறு சொல்வது பொருந்தாது என்பது" "ஒரு பொருளின் உணர்ச்சியிருந்தாலன்றியில் அப்பொருள் இல்லையென்னும் உணர்ச்சி வாராது." (கீ—பா) என்ற நியாயத்தால் விளங்கும். அதனால், அழிவற்றதும் இருக்கிறது என்று சொல்லப்படுவ

தும் இல்லையென்று சொல்லப்படுவதும் இதற்கு வேறான தும் எல்லாம் நீரே" (கீ—பா) என்ற பிரமாணத்தைக் கொண்டு உண்டு என்பதும் இல்லையென்பதும் ஆத்மாவே யென்ற உண்மையை யறிவதால் இல்லையென்று கூறுபவனையும் "இல்லையென்று கற்பிப்பது எதனால் என்று" (பிரச்—பா) வினவில், அவன் அதற்குத்தக்க விடை கூற வேண்டியவனாகிறான்.

இங்கு இவ்விஷயத்துக்குப் பொருத்தமாக நான்கு மேற்கோள்கள் கிரமமாகச் சந்தர்ப்பத்திற்குப் பொருந்துமாறு காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

இக்கருத்தை வெளியிட மேற்கோள்களே வேண்டியளவு விளக்கமாயும் சுருக்கமாயும் அமைந்துள்ளன. இதனால் ஆத்மா இல்லையென்பவனும் ஆத்மாவை அறிந்தவனே. அதனால் எல்லோரும் ஆத்மாவை அறிந்தவர்களே. ஆகினும் ஆத்மா உள்ளபடி அறியப்படுவதில்லை.

'யான இல்லை' என்று ஒருவனுக்கும் தோன்றுகிறதில்லை. ஆதலால் ஆத்மா இருக்கிறது என்பது எல்லோருக்கும் விளங்குகிறது. ஆனால் நித்யமுக்தனாய் இருப்பதாக எல்லோருக்கும் விளங்குவதில்லை." (விசாரசாகரம்)

இதுவே

'அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம்' (5–15)

(இள்) 'அறிவு அறியாமையால் மூடுண்டு கிடக்கிறது' என்று கூறப்பட்டது.

விசாரக்குறைவினால் அவ்வறிவு மூடப்பட்டிருக்கிறது என்பதே. அது ராஜ்யகாரியத்தில் கவனம் அற்றிருக்கும்.

ஒரு அரசனை அவன் மந்திரி அரசநீதி காட்டி வற்புறுத்தி அரசியலுக்கு உதவச் செய்வது போல் அஞ்ஞானத்தில் மூடுண்ட அறிவை நல்வழிப்படுத்திக் குருபதேசத்தால் உண்மையுணரச்செய்வதாம்.

'ஸ்புடம் குரூபதிஷ்ட மஹாவாக்யபதை: ப்ரபோதித:' (சுகர)

(இ-ள்) 'குருவினால் செவ்வையாய் உபதேசிக்கப்படுகிற மஹாவாக்யபதங்களினால் விழித்துக்கொண்டேன்'

அறியாமலே அறிந்தவன் என்பது பொருந்தாததாகத் தோன்றுகிறதேயெனில், அவ்வாறன்று. ஒருவன் தேசாந்திரம் போய்ப் பல வருஷங்கள் கழிந்து திரும்பிவரும்போது அவனிடம் மிகவும் பழகி நண்பனாய் இருந்தவொருவன் அவனைக்கண்டதும் இன்னான் என அறியக்கூடாமல் மயங்கிப் பிறகு பழைய ஞாபகம் தூண்டப்பட்டதும் அறிந்துகொள்கிறான். அறிந்த ஒருவனே அறியாதவனானதால் இங்கு இவன் அறியாமல் அறிந்தவன் எனப்படுவன். பிறகு ஞாபகம் வந்ததும் அவனே நன்கு அறிந்துகொள்ளப்படுகிறான்.

'ஸ்ம்ருதிர்லப்தா' (18-73)

(இ-ள்) நினைவு கூர்வது அடையப்பட்டது'

இதனால் இல்லையென்பவனும் துவேஷிக்கத் தக்கவனல்லன் என்றாகும்.

'ஆத்மபரதேஹேஷு' (16-18)

இ-ள் 'தமது சரீரங்களிலும் பிறரது சரீரங்களிலும் உள்ள' (ஆத்மா)

அதனால் அது பிரகாசத்தின் முன்னிலையிற் கண்ணை மூடுவது போலவாம். கண்ணை மூடின போதிலும் பிரகாசம் இருக்கிறது. இதனை எப்படி அறியலாமெனில் திறந்தவுடன் தெரிகிறதல்லவா? அதைக் கொண்டறியலாம். இதனாலே தான்,

'வஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ:' (15–10)

இ–ள் 'ஞானக்கண்ணுடையோர் காண்கிறார்.' என்றும் பிரமாணம் உள்ளது.

ஆனால் இப்பேதம் இருப்பது அறியப்படவேண்டும். கண் மூடுவதுபோல் அது விகாரம் அடைவதில்லை. அதனால் சாந்த சித்ததத்தில் அது நிலைத்து நிற்கிறது. அதே காரணத்தால்,

அவ்யயம் = கெடாதது.

எனப்படுகிறது. இதனாலேயே,

'ஜ்ஞாநதீபேந பாஸ்வதா'

இ–ள் 'ஒளிர்கின்ற ஞானவிளக்கைக் கொண்டு (அறியப்படும்)

ஆனால் அந்த ஆத்மாவின் ஸ்வரூபம் என்னவெனில் ஒரே விதமான சைதன்யம் என்பதே.

'சைதந்யஸ்யைகரூபத்வாத்' (யோக)

இ–ள் 'சைதன்யம் ஒரே ரூபம் ஆனதால்.''

‘சைதன்யத்தின் வியாபகம் ஸ்வபாவமாகவே எல்லையற்றதால் எங்கும் உள்ளது.

‘𑌆𑌕𑌾𑌶𑌮𑍇𑌕𑌂 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂’ (ருத்ரஹ்ருதய)

இ-ள் ‘ஸம்பூர்ணமாயிருக்கிற ஒன்றான ஆகாசம்.’

என்பதற்கிணங்க ஆகாசம் ஸகலவஸ்துக்களில் உள்ளும் புறம்பும் தொடர்ச்சியறுமலே வியாபித்திருப்பது போல ஆத்மா எங்குமுள்ளதாலும் ஸூக்ஷ்மத்தன்மையாலும் அத்தகைய ஆகாசம் முதலிய பூதங்களின் உள்ளும் புறம்பும் இடையறாது வியாபித்திருக்கிறான். இக்கருத்தை

‘𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂’ **(13–15)**

இ-ள் ‘பூதங்களுக்கு வெளியில் இருப்பது உள்ளும் இருப்பது.’

என்ற வாக்யமும் தெரிவிக்கும். இதனால் இதரவஸ்துக்கள் ஆகாசத்திற்குள் அடங்கியிருந்தபோதிலும் அதின் வியாபகம் பாதிக்கப்படாதது போல், ஆத்மாவும் பூதபேதங்களின் ஸ்திதியால் பாதிக்கப்படுவதில்லையென்று அறியலாம்.

‘𑌯𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍
𑌆𑌕𑌾𑌶𑌂 𑌨𑍋𑌪𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑍇𑌹𑍇
𑌤𑌥𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑍋𑌪𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥’ **13–32**

இ-ள் ‘எல்லாவற்றிலும் உள்ள ஆகாசமானது நுண்மையினால் கறைப்படுத்தப் படாதவாறு போல் சரீரத்தில்

எங்கும் உள்ள ஆத்மா எதனுலும் கறைப்படுத்தப் படுவ தில்லை. ஆகாசத்தை அளாவி யிருப்பதால் ஆத்மா மாயா ஸ்வரூபமான ஆகாசத்திலும் வியாபகமானது.

‘ விஷ்டப்யாஹமிதம் க்ரு த்ஸ்ந
வகாம்ஶேந ஸ்திதோ ஜகத் ।’ (10–42)

இ—ள் ‘யான் இப்பிரபஞ்சம் முழுமையும் ஒரு அம் சத்தினலே தாங்கிநிற்கிறேன்.’

இதனல் இப்பிஞ்சம் ஆத்மாவின் ஒரு அம்சம் மட்டும் ஆனதால், ஆத்மா அதிலும் வியாபித்திருக்கிருன் என்று கும். இதனல் ஆத்மாவில் மாயை வியாபித்திருப்பது சமுத்திரத்தில் ஒரு துளி அமைந்திருப்பதற்கு சமமாகும் என்று அறியத்தக்கது. உள் வெளி என்ற பேதம் உள்ள வஸ்துக்களுக்கே ஆதாரம் இருக்கக்கூடும். அவ்வித பேதம் அற்றதால் ஆதாரமற்றது.

‘ அநாதாரோஹமஸ்மி ’ (மைத்)

(இ-ள்) ‘ஆதாரமற்றவனுயுமிருக்கிறேன்.’

அதனல் ஆத்மா ஆகாசாதி ஸகல வஸ்துக்களின் உள் ளும் புறம்பும் ஒரு மாதிரியே வியாபித்திருக்கிருன் என்ப தாயிற்று.

‘ நைநேந கிஞ்சு நாநாவ்ருதம்
நைநேந கிஞ்சு நாஸம்வ்ருதம் ।’ (பிரகத்)

இ—ள் ‘இவரால் ஒன்றும் உள்ளே புகப்படாமல் இருக்கவில்லை. வெளியிற்சூழப்படாமலுமிருக்கவில்லை.

மேலும் ஆத்மா ஸர்வவியாபகமாய் (எங்குமுள்ளதாய்) சலனமற்றது. சைதந்யம் ஸ்வபாவமாகவே வியாபகமுடையதல்லவா?

'யதா மநஸி சைதந்யம்
பாதி ஸர்வத்ர ஸர்வதா ।
யோகிநோऽவ்யவதாநேந
ததா ஸம்பத்யதே ஸ்வயம் ॥' (அன்ன)

இ—ள் 'யோகியினுடைய மனதில் எப்போது இடைவிடாமல் சைதந்யம் விளங்குகிறதோ, அப்பொழுது தான் சைதன்யமேயாய் விடுகிறான்.'

நிர்க்குணமாதலின் அவிகாரியுமாம். அது இன்னும் எவ்விதம் விளங்குகிறது?

'சிந்மாத்ரம் ஸர்வகம் நித்யம்
ஸம்பூர்ணம் ஸுகமவ்யயம் ।' (வரா)

இ—ள் 'சின்மாத்திரமாயும் எங்கும் பரவியதாயும் நித்யமாயும் சம்பூர்ணமாயும் சுகரூபமாயும் நாசமற்றதாயும் (இருக்கிறது).'

ஐந்தாம் அத்தியாயம்.

ஜந்மரஹஸ்யம்.

வாயு ஆகாசத்தில் தங்கியிருந்தாலும் அதினின்றும் வேருகவே இருக்கிறது. அது போலவே ஸகலப்ரபஞ்சமும் ஆத்மாவில் அடங்கியிருந்தாலும் ஆத்மா ஆகாசம்போல் வேருகவே இருக்கிருன்.

‘யதாகாசஸ்திதோ நித்யம்
  வாயு: ஸர்வத்ரகோ மஹாந் |
ததா ஸர்வாணி பூதாநி
  மத்ஸ்தாநீத்யுபதாரய ||’ (9–6)

இ–ள் ‘எங்கும் செல்லுகிற பெரிய காற்றுனது, எப்போதும் ஆகாசத்தில் அடங்கியிருப்பது போலவே எல்லாப்பொருள்களும் என்னிடம அடங்கி யிருக்கின்றன. என்று அறி’

ஆகாசத்தில் தங்கியிருக்கும் வஸ்துக்கள் விகாரம் அடைவது ஆகாசத்தைப் பாதிப்பதில்லை. அதுபோலவே வஸ்துக்களின் விகாரத்தால் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை. ஆகாசதிருஷ்டாந்த மூலமாகவே ஆத்மாவை அறிய முயல வேண்டும். ஸூக்ஷ்மத்தால் ஸூக்ஷ்மத்தை கிரகிக்கலாம். ஆத்மா ஸூக்ஷ்மரூபன் என்பதைப் பின் வரும் பிரமாணத்தால் அறியலாம்.

'ஸர்வேவாகாஶரூபோஸி' (தேஜோ)

(இ—ள்) 'நீயே ஆகாசரூபமாயிருக்கிறாய்.'

இதனால் ஆத்மா தன் சூக்ஷ்மத்தன்மையொன்றினாலேயே விகாரமற்றவனாகிறான் என்பதும் தெரிகிறது. அதே தன்மையால் ஆத்மா அறிதற்கரியவனாயுமிருக்கிறான்.

'ஸூக்ஷ்மத்வாத் ததவிஜ்ஞேயம்' (13–15)

இ—ள் 'அது நுண்மையானதால் அறிதற்கரியது.'

அக்னிக்கு உஷ்ணம் சுபாவமாவது போலவே ஆத்மாவுக்கு விகாரமற்ற நிலையே ஸ்வபாவமாம். அதனால் ஈச்வரனது சர்வசக்தியும் ஒருங்கே சேர்ந்தாலும் அது விகாரப்படக்கூடியதன்று என விளங்கும்.

'விநாஶமவ்யயஸ்யாஸ்ய
ந கஶ்சித் கர்துமர்ஹதி' (2–17)

இ—ள் 'நிலைதிரியாத இதற்கு ஒருவராலும் அழிவு செய்ய இயலாது.'

'ஆத்மாவுக்கு நாசத்தை உண்டாக்க ஈச்வரனாலும் கூட முடியாது ஏனெனில் ஆத்மா 'பிரம்மம்' ஆத்மஸ்வரூபத்தில் விகாரமில்லையென்பது தெளிவானதாய்க் கூறப்பட்டது. இவ்விதம் அறிந்தவனுக்கு வேறு அறியவேண்டியது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை ஏனென்றால். ஸ்வரூபத்தில் விகாரமில்லையென்று தெரிந்ததும் கர்த்ருத்வம் அழிந்து போகிறது. கர்த்ருத்வமே ஸ்வரூபத்தில்

விகாரம் உண்டாவது போல் தோற்றுவிக்கிறதற்குக் காரணம் 'க்ரியையானது எதில் பொருந்துகின்றதோ அதை விகாரப்படுத்தாமல் தன் ஸ்வரூபலாபத்தை அடைவதில்லை. ஆகவே ஆத்மாவானது க்ரியையினால் விகாரத்தை அடையுமானால் அதுபோழ்து ஆத்மாவுக்கு அநித்யத்வம் ஸம்பவிக்கும்'. (ஸ-ெ-பா) ஏனென்றால்,

ஒரு ஜலபாத்திரத்தில் தோன்றும் சூரியப்ரதிபிம்பம் அப்பாத்திர ஜலத்தின் சலனத்தால், வாஸ்தவத்தில் சலியாதிருக்கும்போதே, சலிப்பதாய்த் தோன்றுகிறது. அது போலவே ஆத்மவஸ்துவிற் கர்த்ருத்வம் இல்லையாயினும் மாயையின் மூலமாய் அது இருப்பதாய்த் தோன்றுகிறது. கர்த்ருத்வம் இல்லையானால் கர்மபந்தம் ஒழிகிறது. இது பிரத்யக்ஷம், கர்மத்தினால் தேகம் வருகிறது,

'கஉ-ஃணா ஜெஹஉாவ்ஹொதி' பிரகந்நாரதபுராணம்

இ-ள் 'கர்மத்தினால் தேகம் உண்டாகிறது.'

அதனால் கர்த்ருத்வத்துடன் கர்மபந்தம்விலகவே வேறு தேகம் வருவதில்லை. அதாவது இத்தகைய ஞானம் படைத்தவனுக்குப் புனர்ஜன்மா ஏற்படுவதில்லை. ஜன்மா துக்கஹேதுவே.

'ஜந்மம்ருத்யுஜராவ்யாயி
ஃதுஃவதொஷாநுஉபஶ்நம் ।' 13–8

இ-ள் பிறப்பு, இறப்பு, மூப்பு பிணி, துன்பம், என்றவற்றிலே தீமையை உணர்தல்.

இவ்வாறு உணரும் உணர்வே துக்கநிவர்த்திக்குக் காரணம் ஆம். அதுவே அறிவின் முடிவான பயனல்லவா? அதனால் ஆத்மாவில் கர்த்ருத்வம் இல்லையென்றறிந்தவன் அறியவேண்டியது வேறொன்றுமில்லை.

ஜன்மா துக்கரூபம் என்று சொல்லப்பட்டது. அது அவ்விதமே. அதனால் சாஸ்திரங்கள் அதன் நிவர்த்தியைச் சொல்கின்றன. ஆகிலும் அது முற்றிலும் துக்கமயமுமாகாது. ஏனென்றால், ஞானம் உண்டாகிய ஜன்மா துக்கஹேதுவன்று. ஆனால் அவ்வித ஜன்மா லபிப்பது அருமையென்று கூறலாமேயெனில், அருமையாயினும் அப்படி வாய்க்கும் பிறப்பு துக்கமில்லையென்றே கூறவேண்டும்.

'𑌅𑌥𑌵𑌾 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍇𑌵
𑌕𑍁𑌲𑍇 𑌭𑌵𑌤𑌿 𑌧𑍀𑌮𑌤𑌾𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍍𑌧𑌿 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌤𑌰𑌂
𑌲𑍋𑌕𑍇 𑌜𑌨𑍍𑌮 𑌯𑌦𑍀𑌦𑍃𑌶𑌮𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌂
𑌲𑌭𑌤𑍇 𑌪𑍌𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌕𑌮𑍍 ।' (6-42)

இ-ள் அல்லது ஞானிகளான யோகிகளாகவே உள்ளவர்களுடைய வம்சத்திற் பிறக்கிறான். இப்படிப்பட்ட பிறப்பு எதுவோ. அது கிடைப்பது உலகத்தில் மிகவும் அரிதன்றோ! அவன் முந்தின ஜன்மத்தில் உண்டான ஞானக்கூட்டுறவை அங்கே பெறுகிறான்.

இதனால் ஞானமார்க்கத்திற் பிரவிர்த்தி பயனற்றதாகாமல் ஒரு காலத்திற் பயனையே தருகிறது.

'அநேகஜந்மஸம்ஸித்த:
தததோ யாதி பராம் கதிம் ।' (6-45)

இ-ள் பலஜன்மங்களாலே பரிபக்வத்தை அடைந்தவனாய் அதனால் உயர்ந்த கதியைப் பெறுகிறான்.

இதனால் ஜன்மா துக்கஹேதுவானாலும் அதன் நிவர்த்தியை ஞானத்தால் அடையலாம். அதனால் ஞானி ஜன்மாவை வெறுப்பதில்லை. ஆகிலும் இது ஆத்மாநுபவத்தின் ஸ்வபாவத்தை விளக்க ஞானிகளால் சொல்லப்படுவதாய் கிரகிக்கத்தக்கது.

அவ்வநுபவம் எத்தன்மையது?

'ஸ ப்ரஹ்மயோகயுக்தாத்மா
ஸுகமக்ஷய்யமஶ்நுதே ।' (5-21)

இ-ள் பிரம்மத்திலே சமாதி கூடிய மனத்தினனாய் குறைவில்லா இன்பத்தினை அநுபவிக்கிறான்.'

அல்லது ஸம்பத்துள்ள குடும்பத்திற் பிறக்காமல் அவர்களினின்று வேறுபட்ட ஞானிகளாகிய யோகிகளாயுள்ள தரித்திரர் வீட்டிலே பிறக்கிறான். இப்படி தரித்திரரான குலத்திலே பிறப்பது என்பது முர்தினதை உத்தேசித்துப் பெறுவதற்கு மிகஅரிதானது, மிக துர்லபமானது. (கீ-பா)

இதனால் ஞானத்துடன் ஏற்படும் வறுமை துக்கஹேதுவாவதில்லை. அவ்விதமானால் ஞானமும் துக்கரூபமாய் விடும். அது அவ்விதமன்று. அது ஞானத்தின் சிறப்பியல்பாலாவது. அச்சிறப்பியல்புதான் யாதோவெனில்,

'ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம்
பவித்ரமிஹ வித்யதே ॥' (4–48)

இ-ள் 'ஞானத்துக்கு சமமாகத் தூய்மையைச் செய்வது இங்கு இல்லை'.

அங்ஙனமே ஞானம் ஒன்றன்றி உயர்ந்தசெல்வம் முதலிய எதுவும் துக்கநிவர்த்தியைத்தருவதன்று. ஏனென்றால் இந்திரபதவியும் துக்கத்தினின்று ஒழிவடைகிறதில்லை.

'ந ஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்யாத்
யச்சோகமுச்சோஷணமிந்த்ரியாணாம் ।
அவாப்ய பூமாவஸபத்நம்ருத்தம்
ராஜ்யம் ஸுராணாமபி சாதிபத்யம் ॥' (2–8)

இ-ள் உலகிலே பகைவர் அற்றதாய்ச் செழித்திருக்கும் ராஜ்யமும் தேவர்களுக்குத்தலைவனாய் இருத்தலும், கிடைக்கப்பெற்றாலும், இந்திரியங்களைத் தீபோல் அழற்றுகின்றதான என் துயரத்தைப் போக்குவது இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. (இந்திரபதவியைப் பெற்றாலும் என் துயரம் தீருமாறில்லை).

இதனால் துக்கநிவர்த்திக்கு ஞானமொன்றே மார்க்கமாயுளது. வேறொன்றுமில்லையென்று விளங்கும். அதனால் ஞானமேற்பட்டும் துக்கம் இருக்குமாயின் அது ஞானமாவதன்று. ஏனென்றால், சுகம் நிலைகொள்வதே ஞானமாகிறது. இதனால் ஞானத்துடன் ஏற்படும் பிறப்பு துக்கஹேது அன்று என்று விளங்குவதால் அது வெறுக்கத்தக்கதன்று என்று ஏற்பட்டது.

‘𑌅𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑍌𑌘𑌮𑌯𑌂
𑌜𑍍𑌞𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌂 𑌜𑌗𑌤𑍍 ।’ (வரா)

இ-ள் ‘அஞ்ஞானிக்குத் துக்கமயமாயிருக்கிற ஜகத் ஞானிக்கு ஆனந்தமயமாயிருக்கிறது.’

தேகேந்திரியாதிரூபமான மாயையை ஆசிரயித்து ஆத்மஸ்வரூபம் தெரிந்ததாய்ச் சொல்லப்பட்டது. நாம் ஸூக்ஷ்மவஸ்துக்களின் ஸ்வரூபம் தெரிவதற்காக அணுதரிசினி போன்ற கண்ணாடிகளை உபயோகிப்பது போலவே ஸூக்ஷ்மவஸ்துவைக் கிரகிப்பதற்கு ஏற்பப் புத்தியைப் பயிற்சி செய்துகொள்ளவேண்டும்.

‘𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑍍𑌯𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 ।’ (கடம்)

இ-ள் ‘இந்த ஆத்மா சூக்ஷ்மதர்சிகளால் குசாக்கிரம்போற் சூக்ஷ்மபுத்தியாற் பார்க்கக்கூடியவன்.

இவ்விதம் சூக்ஷ்மவஸ்துவின் ஞானம் அனுபவித்து இன்பம் அடைந்தவனுக்கு தேகம் இருக்கிறது. அதைப்பற்றி அவன் செய்தற்குரியது என்ன? அது இருந்தாலும் சரியே இல்லாமற்போனாலும் சரியே. அதாவது இருக்கவேண்டும் என்றும் பிரார்த்தனையில்லை. போகவேண்டும் என்றும் இல்லை.

‘𑌨𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑍇𑌤 𑌮𑌰𑌣𑌂
𑌨𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑍇𑌤 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 ।’ (நாரத)

இ-ள் மரணத்திற்காக சந்தோஷப்படக் கூடாது. ஜீவிதத்துக்காக சந்தோஷப்படக்கூடாது.

ஏன் அவன் இவ்விதம் இருக்கவேண்டுமெனில், தேகத்தை அடைந்ததின் பலன் சித்தித்துவிட்டது. அதனால் இந்த தேகம் இளநீரை கிரகித்தபிறகு எறியப்படும் ஓடு போலவேயாம்.

ஆருவது அத்தியாயம்.

சரித்திராரம்பம்.

மேலே சொல்லிய ஞானிகளின் நிலைமைக்கேற்றவிதமாகக் காலம் செலுத்தி வந்தார், தர்மசீல தர்மரத்ந பிரம்ம ஸ்ரீ **C. V.** கிருஷ்ணையரவர்கள். அவருடைய சரீரம் மறைந்து விட்டது. இது விஷயமாக நமக்கு ஏற்பட்டிருக்கும் துக்கத்தை வெளியிடுவதற்காக இந்த சபை சேர்ந்திருக்கிறோம் துக்கத்தை வெளியிடுவது எதன் பொருட்டென்றால், அவ்வாறு வெளியிடுவதால் மனதுக்கு ஆறுதல் உண்டாகிறதா கையால் அவ்வாறுதலாகிய அமைதியைப்பெறவேண்டியே வெளியே சொல்லிக்கொள்வது உலகசகஜம். குழந்தைகள் விளையாடுகையில் ஒன்றுக்கொன்று கலகம் ஏற்பட்டு அதைப் பெரியவர்களிடம் கூறிச் சமாதானம் அடைகிறார்களல்லவா? அது போலவே துக்கத்தை வெளியிடுவதில் மனதுக்கு ஆறுதல் ஏற்படுகிறது. தவிர மரணத்தில் துக்கம் என்ன?

‘ஜாதஸ்ய ஹி த்ருவொ ம்ருத்யு:
த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச ।
தஸ்மாதபரிஹார்யேऽர்தே
ந த்வம் ஶோசிதுமர்ஹஸி ॥’ (2–27)

இ-ள் பிறந்ததற்கோ இறப்பு நிச்சயம். இறந்ததற்

கோ பிறப்பு நிச்சயம். ஆதலின் தவிர்க்க முடியாத விஷயத்தில் நீ துயர்ப்படுதல் தக்கதன்று.

இதன் கருத்து என்னவெனில், தவிர்க்கக்கூடாத விஷயத்தில் துக்கப்படுவது ஒருபயனையும் தருவதன்று என்பதே. இவ்விதம் சொல்லப்படுகிறபோதிலும், துக்கநிவர்த்திக்கு ஞானம் ஒன்றே மார்க்கமாயுளது என்பது விளக்கப்பட்டது. அவ்விதம் இருந்தபோதிலும் துக்கம் எக்காரணத்தாலும் பரிகரிக்கப்படவேண்டியதே, அதையேன் அவ்விதம் அமர்த்தவேண்டும்.?

'த்யஜ ஶோகம் மஹாப்ராஜ்ஞ
ஶோகஸ்ஸர்வவிநாஶந: ।' (வரா-பு)

இ-ள் 'ஓ புத்திமானே! துக்கத்தை விட்டுவிடு, துக்கமானது ஸர்வத்தையும் நாசஞ்செய்யத்தக்கது.'

பிரமஸ்ரீ கிருஷ்ணையர் மரணம் சம்பவித்துவிட்டது என்று சொல்லப்பட்டது. அதனால் விளைந்த பயன் என்ன? இந்தப் பாடசாலை வித்யார்த்திகளுக்கு தாயார் தகப்பனார் குரு இன்னும் என்னென்ன உறவாயிருக்கலாமோ அவை எல்லாமாயிருந்தவர் அவர் ஒருவரே. இப்பொழுதோ அந்த உறவின் முறை இல்லாமற்போய்விட்டது. இந்தவூர் மஹாஜனங்களுக்கு இதனாலென்ன? இத்தன்மை யுள்ள ஒரு மஹாபுருஷனுடைய அவஸானகாலத்தில் அவருடைய முகதரிசனம் தங்களுக்குக் கிடைக்காமற்போயிற்றே என்ற தாபம் ஏற்பட்டது. நான் என்னவானேன்? என்னிடம் இப்பொழுது பிரகாசம் என்பதே இல்லை. பிரகாசகாரணமாயிருந்தவர் தேகம் ஒழிந்ததும் இருந்த சிறிதளவு பிரகாச

மும் போய்விட்டது. அதாவது நான் ஒன்றும் இல்லாமற் போய்விட்டேன். இனி அவருடைய குணங்களிற் சில வற்றைப்பற்றி இங்கே கவனிப்போம்.

காமத்தை ஒருவன் ஜயித்துவிட்டான் என்பது மரணம் வரை நம்பக்கூடாது என்று பொதுவாய்ச் சொல்லப்படுகிறது.

'ஶக்நோதீஹைவ ய: ஸோடும்
ப்ராக் ஶரீரவிமோக்ஷணாத் ।
காமக்ரோதோத்பவம் வேகம்
ஸ யுக்த: ஸ ஸுகீ நர: ॥' (5-23)

இ-ள் 'சரீரம் நீங்கிப்போவதற்கு முந்தி எவன் இங்கேயே காமம் கோபம் என்றவற்றால் உண்டாகும் விசையைப் பொறுக்கக்கூடுமோ அவன் யோகி; அந்த மனிதனே சுகி.'

'இதில் மரணத்தை எல்லையாகக்குறிப்பதனால் அது பரியந்தம் காமத்தையும் க்ரோதத்தையும் அடக்கிவிட்டோம் என்றும் நம்பக்கூடாது என்பது கருத்து.—' (கீ-பா)

ஒருவன் விஷயத்தில் முடிவான அபிப்ராயம் சொல்வது அவன் மரணத்தின் பிறகே தகுதியாம் என்று இதனால் அறியலாம்.

பிர்மஸ்ரீ கிருஷ்ணையருடைய மரணம் சம்பவித்துவிட்டபடியால் அவர் விஷயத்தில் முடிவான அபிப்ராயம் வெளியிடுவதில் தடையொன்றுமில்லை. அவர் எவ்விதம்

வாழ்ந்து வந்தார்? என்றும் ஒரேமாதிரியாய் இருந்து வந்தார். அவரிடம் மோகம் என்பது கிடையாது.

மோகம் என்பது என்ன? 'செய்யத்தக்கனவற்றையும் செய்யத் தகாதனவற்றையும் பற்றிய ஆராய்ச்சியின்மையே மோகம். (கீ-பா)

'எவ்வளவு காலம் அவனுடைய அந்தக்கரணம் காரிய அகாரியங்களைப் பகுத்தறிய சக்தியுள்ளனவோ, அவ்வளவு காலமேயன்றோ புருஷன் என்பது' (கீ-பா)

இதனால், பகுத்தறிவின்மை இவ்வாறு மதிக்கப்படுகிறது என்று அறியலாம்.

இது அவர் எவ்விதமாய்க் காலம் செலுத்திவந்தார் என்று அறிந்தவர்களுக்கெல்லாம் பிரத்யக்ஷமாய் தெரிந்த விஷயமே. அவருடைய ஆகாராதி நியமங்களை யோசிக்குங்கால் அவருடைய விரதத்தை மிகவும் கடுமையான விரதம் என்றே சொல்லவேண்டும்.

'ஸம்ஸிதவ்ரதா:' (4-28)

இ—ள் 'கடுமையான விரதமுடையவர்கள்'

என்றன்றோ மஹான்கள் சொல்லப்படுகின்றனர்?

ஒரு சமயம் மருந்து சாப்பிடும்பொழுது அது மிகவும் பழகியது என்று தோற்றியதாயினும், அதைச் சாப்பிட்டார். 'அதை உட்கொள்ளலாயா?' என்று கேட்டபொழுது, பழகியமருந்தை உட்கொண்டாமலென்ன, அந்த அளவுக்குத்தக்க

ஆகாரம் குறைந்து விடும்’ என்றார். மருந்தும் உணவும் ஒன்றென்று மதித்ததாய் இதனால் விளங்குகிறது. எல்லாப் பதார்த்தங்களும் தயாராய் இருந்தும் சிறிது நேரம் பொறுத்தே சாப்பிடுவது வழக்கம். இது பிரவிருத்திரூபமான ரஜோ குணத்தை அமர்த்துவதற்குத் தக்க உபாயமாய்க் கருதிவந்ததாய்த்தெளிவாகிறது.

‘ஶாந்தரஜஸமகல்மஷம்’ (6-27)

இ-ள் ரஜோகுணமொழிந்து பாபமற்று (வாழ்தல்)

தேகரக்ஷைக்கு ஸ்வல்பமான அன்னஜலரூபமான ஆகாரமே போதுமானது என்று அவர் சொல்வது வழக்கம். இதனால் அவர் ஆகாரம் கிரகித்துவந்தது இவ்வித எண்ணத்துடன் என்பது தெளிவாகிறது. அவர் இருக்குமிடத்தில் அவர் முன்னிலையிலேயே வைத்திருக்கும் நல்ல ருசியுள்ள மாம்பழம், வாழைப்பழம் முதலியவற்றையும் அவை அழுகிக் கெட்டுப் போம்படி பல நாள் வரை பாராமலே இருந்து விடுவார். அழுகியது கண்டால் ‘இவற்றை நான் இதுவரை கவனிக்கவில்லையே’ என்பார். இப்படி ஜிஹ்வேந்திரியத்தைத் தன் வசப்படுத்திய மஹாபுருஷனைக் காண்பது அருமையே அவர் கொள்கைப்படி :—

‘ஶாரீரம் கேவலம் கர்ம’ (4-21)

இ-ள் ‘சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டியகர்மாவே’ அவரிடமிருந்தது.

ஹிம்ஸாவிஷயத்தில் அவர் எவ்விதம் இருந்துவந்தார்?

கோபம் வந்த சமயத்தில் 'மூட்டுப்பூச்சியை நசுக்குவது போல் நசுக்கிவிடுவேன்' என்று சொல்வது சாதாரணவழக்க மல்லவா? இப்பூச்சிவிஷயத்தில் அவர் செய்தது என்ன? இரவெல்லாம் தூக்கமில்லாமல் அவஸ்தைப்படும்படி உபத்திரவிக்கும் சிறிய பிராணியாகிய மூட்டுப்பூச்சியைக்கூட அவர் தம் மனமறியக் கொன்றதில்லை. தமது படுக்கையில் மூட்டுப்பூச்சிகளைக் கண்டால் அவற்றை ஒவ்வொன்றாக அவை நோகா வண்ணம் பிடித்துச் சிறிய சீசா ஒன்றில் போட்டு வைத்திருந்து காலையிற் படுக்கையிலிருந்து எழுந்து வரும் போது கையோடு கொண்டுவந்து வெளியிலே அந்தப்பூச்சிகள் சுயேச்சையாய்ச் சஞ்சரிக்கும்படி விட்டுவிடுவார்.

தவிர ஹிம்சையை சஹிப்பதில் அவர் சமர்த்தராகவும் இருந்தார். சில சந்தர்ப்பங்களில் மிகவும் கடினமான வேதனையேற்பட்டிருந்த போதிலும் அதனால் பாதிக்கப் படாதவர் போலவே இருந்து வந்தார். அவர் ஐச்வர்யவந்தராயிருந்த போதிலும் அது சக்கரம் போல் சுற்றுவதே; ஒரு இடத்திலும் நிலைகொள்வதே இல்லையென்பதை அறிந்தவராகவே இருந்து வந்தார்.

'ஶ்ரீஃஶ்வயெ-ஶா ந கஸ்யசித்' (பாரதம்)

இ-ள் 'செல்வம் ஒருவனுக்கும் அடிமைப்பட்டதன்று'

இவ்விதம் செல்வம் ஒரு இடத்திலும் நிலைப்பதில்லையாதலாலும் ஆனால் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் அதைப் பொறுத்தே யிருப்பதாலும், அது நிலையற்றதால் அதனால் ஏற்பட்ட நிலைமையும் மதிப்பும் நிலையற்றனவென்பதையறிந்து, பிரமஸ்ரீ கிருஷ்ணையர் சுகியிடம் சந்தோஷத்

தையும் துக்கியிடம் இரக்கத்தையும் தாழ்ந்தவரிடம் கருணையையும் செல்வத்தில் பற்று உள்ளம் இல்லாமையையும் உடையவராய் வாழ்ந்து வந்தார்.

‘முதிதா கருணா மைத்ரீ
உபேக்ஷா ச ஸந்தோஷயஃ ।’ (வரா)

இ-ள் ‘ஸந்தோஷம், தயவு, சிநேகம், உதாஸீநம் என்னும் இந்நான்கும்’

அவரிடம் மேற்சொன்னவாறு பொருந்தி யிருந்தன. அதனால் இக்குணங்களை விரும்பத்தக்கவை. ஒவ்வொரு மனிதனும் இப்படி இருப்பானாகில் உலகசமாதானம் என்பது நிலைத்துவிடுமன்றோ? அதனால் இதுவே விவேகத்தின் பயனும். விவேகமற்றவன் வித்தைக்கு அதிகாரியாவதில்லை. அவர் வித்தைக்கு அதிகாரியாய் இருந்தார். இன்னும் நான் என்ன சொல்லவேண்டி யிருக்கிறதென்னவென்றால்;

‘யஜ் ஜ்ஞாத்வா நேஹ பூயோ’ந்யஜ்
ஜ்ஞாதவ்யமவசிஷ்யதே ।’ (7-2)

இ-ள் எதனை அறிந்தபின்பு இங்கே மீண்டும் அறியவேண்டியது வேறொன்றும் மிஞ்சியிராதோ’

என்று கூறப்பட்ட பிரம்மதத்வத்தை அறிந்த பிரம்மநிஷ்டர்களைப் போல, சுகதுக்கங்களில் உதாசீனபுத்தியுடன் தன் தேகத்தில் நேரிடும் வியாதியாதி அவஸ்தைகளிலும் லக்ஷ்யமில்லாமல் சதாகாலமும் பெரியதோர் நோக்கமே கொண்டு உலகத்திலே வாழ்ந்த சாந்தசீலராகிய

பிரமஸ்ரீ கிருஷ்ணையர் அவர்களுடைய தினசரியையைப் பார்த்துப் பழகியவர்கள் வாஸ்தவஞானிகளின் பிரம்மாநுபவ நிலை எப்படியிருக்குமென்று ஊகித்துக் கொள்ளக்கூடும். ஆகையால் இந்த மஹானது சாரித்திரத்தை அறிந்தவர்கள் பிரம்மநிஷ்டர்களைப் பார்த்து அறியவேண்டியதற்குரியதாய் ஒன்றுமில்லையென்பது எனது கருத்து. பார்த்து அறிய வேண்டிய ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில், இவர் உப்பில்லாத உணவை உட்கொண்டே பன்னிரண்டு வருஷங்கள் வாழ்ந்தார். பகலில் ஒருவேளை உணவை உட்கொண்டே அநேக வருஷங்கள் வாழ்ந்தார். இப்படி உலகத்தில் சஞ்சரிக்கும்போதே கிரககிருத்திய சம்பந்தமான அநேக அவஸ்தைகளுக்கிடையில் நிச்சல சித்தத்தோடு வாழ்ந்து வருவது என்பது எளிதன்று. 'செய்தற்கருமையானவற்றை செய்பவரே பெரியவர்.'

ஏழாவது அத்தியாயம்.

ஞானம்.

—0—

ஞானம் என்பது என்ன? ஒருவனுக்கு எதை அறிந்த பிற்பாடு தான் அறிய வேண்டியதாக வேறொன்றும மிஞ்சி நிற்பதில்லையென்று தோன்றுகிறதோ அதுவே ஏனென்றால் ஞானம் குறைபாடின்றிப் பூரண மானது. ஆத்மா ஞானரூபமானவன் என்பது சாஸ்திரசித்தாந்தம். அவன் பூர்ணன், பரப்பிரம்மம்.

‘ஸ்தூத: ஸம்பூர்ண: பரமாத்மா
ப்ரஹ்மேத்யபிதீயதே |’ (சுகர)

இ—ள் (இந்த தேகத்தில்) இவ்விடத்தில்தானே பூரணமாயிருக்கிற பரமாத்மாவானவன் பிரம்மம் என்ற பெயரால் வர்ணிக்கப்படுகிறான். ஞானியே ஆத்மஸ்வரூபி யாகிறான்.

‘ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் |’ (7–18)

இ—ள் ஞானியோ, எனது ஆத்மாதான் என்பது எனது கொள்கை. அதனால் ஆத்மாவை அறிந்தமேல் அறிய வேண்டியதொன்றும் மிஞ்சிநிற்பதில்லை.

'நாதஃ வரஉஷ்தி' (ப்ரச்ந)

இ—ள் இதற்குமேல் அறியவேண்டிய பிரகிருஷ்டதரமான வஸ்து வேறொன்றுமில்லை. ஆகையால் இதற்கு மேல் அறிவு ஒன்றும் இல்லையென்றும். ஏனென்றால், ஆத்மாவையறிந்தவன் எல்லாவற்றையும் அறிந்தவனாகிறான்.

'ஆத்மநி வஉரெ விஜ்ஞாதெ
இஉம் ஸவஉம் விதிதம் ஹவதி !' (பிரகத்)

இ—ள் ஆத்மா அறியப்பட்டால் எல்லாம் அறியப்பட்டதாம். இவ்விதம் அறிந்தும் ஒருவனுக்கு மேலும் தான் அறியவேண்டியது ஏதாவது மிஞ்சிநிற்பதாக எண்ணம் உண்டாகுமாகில் மோகம் மிஞ்சியிருப்பதாகக் கொள்ள வேண்டும். அதனால் அது ஞானமாகாது. ஏனென்றால், ஆத்மாவையறிந்தவனுக்கு மோகம் இருப்பதில்லை.

'நெநாம் ஹ்ராவ்ய விஉஹ்யதி' (2–72)

இ—ள் இந்த ஸ்திதியையடைந்து ஒருவனும் மயங்க மாட்டான். ஞானி இன்னும் எவ்விதம் இருப்பான் என்றால், அநாதிகாலம்முதல் பார்க்காத ஒரு அதிசய வஸ்து தோற்றினாலும் அதைப் பார்ப்பதற்கு அவனுக்கு இச்சை யிராது. ஏனென்றால் அவனுக்கு ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் ஆச்சரியவஸ்து வேறொன்றும் இல்லை யென்ற எண்ணம் இருக்கிறது.

'ஸஹஉதாத்மாஹழ' (ஆத்ம)

இ-ள் நான் ஆச்சரியமான ஸ்வரூபம் உடையவன்.

இத்தகையஞானியும் ஆச்சரியப்படக்கூடிய வஸ்து உண்டோ வென்றால் உண்டு. எப்படியெனில், மாயையால் அபூர்வ ஆச்சரிய சிருஷ்டியும் ஸம்பாவிதமேயாம் "மாயைக்கு யாதும் அஸம்பாவிதமில்லை. யாவும்கூடும்" (ஐ-பா)

அதனால் அது விஷயத்தில் ஆச்சரியம் நிலையற்றது என்றும் கொள்ளலாம். ஞானி தன் சொரூபானந்தத்திலேயே நிலைத்து அதில் திருப்தியடைந்தவனாயிருப்பதால் வேறு ஆச்சரியவஸ்துவை பார்க்க விருப்பம் கொள்வதில்லை.

'ஆத்மந்யேவாத்மநா துஷ்ட:' (2–55)

இ-ள் (தானாக) ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷித்திருப்பவன்.

'ஆத்ம த்ருப்தஸ்ச மாநவ: ।' (3–17)

இ-ள் அவன் ஆத்மாவிலேயே திருப்தி பெற்றவன்.

ஞானிதான் ஞானியென்பதை உலகத்திற்கு தெரிவிக்க எண்ணம் கொள்கிறவனுமன்று. அவன் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று கூறிக்காட்டமுடியாதவன்.

'அவ்யக்தலிங்கோऽவ்யக்தார்த:' (நாரத)

இ-ள் குறிப்பான அடையாளமில்லாதவனாய்த் தன்னுடைய தாத்பர்யம் இன்னதென்பது பிறரால் அறியப்படாதவனாய் இருப்பன்.

இவ்விதம் ஞானி அடையாளமில்லாதவனாய் இருப்பதேன்? அவ்விதம் ஆகும் தன்மையே மோக்ஷமாம.

'ஷிம்மாஹாவாத்ரு கைவல்யம்
ஊதி ஸ்ரூஹாநூயாஸநழு॥' (நாரத)

இ-ள் அடையாளமில்லாததே கைவல்யம் என்பது வேதத்தின் விதி.

ஆத்மா ஏன் அடையாளமுடையதன்று? அடையாள முடையதாயின் எல்லையுடையதாம். அப்பொழுது குறிப்பிடத்தக்கதாம். அதுவோ அவ்விதமில்லை.

'அக்ஷரஉநிஜெ-மயூம்' (12-3)

இ-ள் குறிப்பிட்டுக் காட்ட (உணர்த்த) முடியாத அக்ஷரம். தவிர, குறிப்பிட்டுக் காட்டப்படுவதாய் இருக்கின் அவயவமுடையதாய் இருக்கவேண்டும். அவயவமுடையதாயின் ஸர்வவியாபகவஸ்துவாய் இருக்கவியலாது. ஏனெனில் கால் இருக்குமிடம் தலையும் தலையிருக்குமிடம் காலும் இருப்பதில்லை. இதனால் அவயவமுடைய பொருள் கண்டிதமான இடத்திலேயே இருக்கக்கூடியதாம் என்பது விளங்கும். அகண்டமான ஆத்மா இத்தன்மை யுடையதன்று என்பது, இது இன்னது என்று குறிப்பிடப்படாமையால் தெளியப்படுகிறது. அன்றியும் அது குறிப்பிடக்கூடிய பொருளாயின் அதற்கு அந்யமானபொருள் வேறொன்று இருக்க நேரிடும். ஆகையாலும் ஆத்மாவின் நிலை குறிப்பிடப்படாமையென்பது வெளியாம்.

'ஸ்ரூஹைவ கைவல்யம் யாஜம்
விசூதெ தக்ஷுஜுயாஜெந ।' (ஆத்மோ)

இ-ள் தத்வதர்சனத்திஞல் சுத்தபிரம்மம் மாத்திரமே மிஞ்சுகிறது.

இதனுலும் ஞானி அடையாளமில்லாதவனே. ஞானிக்கு இன்னதென்று குறிப்பிட்ட அடையாளம் ஒன்றுமில்லாததால் அவன் எந்த ஆசிரமத்திலும் இருக்கக்கூடும் என்று ஏற்படுகிறது.

‚ஜடீ ஊ௦ஙீ ஶிவீ வாவி ஊஅ௱தெ' (வரா)

இ-ள் 'ஜடையையுடையவனுகிலும் மொட்டைத்தலையனுகிலும் குடுமியுடையவனுகிலும் மோக்ஷத்தை அடைகிருன்.

'வாநப்ரஸ்தனுகிலும், ஸந்யாஸியாகிலும், கிருஹஸ்தனுகிலும் மோக்ஷத்திற்குரியவனேயாவன்.'

இதனுல் ஞானமொன்றே மோக்ஷஹேதுவாம் என்பதும் மற்றவை ஹேதுவாகமாட்டாவென்பதும் விளங்கும்.

ஷி௦மெ ஷதூவி வஙூஷிரு
ஜ்ஞாநமேவ ஹி காரணழ‌ ।' (நாரத)

இ-ள் 'இந்த அடையாளங்கள் இருந்தபோதிலும் மோக்ஷத்தின் பொருட்டு உபயோகமற்றவை. மோக்ஷத்திற்கு காரணம் ஞானமே.

எட்டாம் அத்தியாயம்.

ஞானத்தை அறியுமாறு.

மேலே கூறிய விஷயங்களால், ஞானம் அடையாளம் உள்ளது எனக்கொள்ளப்படின் அதுவும் மோக்ஷவிஷயத்தில் மயக்கமேயாம் என்று விசதமாம். ஏனெனில்,

> ‘ந நிரோதோ ந சோத்பத்தி:
> ந பத்தோ ந ச ஸாதக: ।
> ந முமுக்ஷுர் ந வை முக்த:
> இத்யேஷா பரமார்த்ததா ॥’ (ஆத்மோ)

இ-ள் பிரளயமுமில்லை, உற்பத்தியுமில்லை, பத்தனுமில்லை, சாதனை செய்கிறவனுமில்லை, முமுக்ஷுவுமில்லை, முக்தனுமில்லை. இதுதான் வாஸ்தவமானது' என்பது பிரமாணம்.

இதன் கருத்து என்னவெனில் அந்தக்கரண ப்ரகாசத்திற்கு வெளிச்சின்னங்கள் அத்தாட்சி ஆகவேண்டியதில்லை என்பதாம்.

இக்கருத்தை அறிந்தே பிரமஸ்ரீ கிருஷ்ணையர் அவர்கள் ‘ஞானம் அடைந்தபிறகு ஒருவன் எவ்விதவிருத்தியிலும், சாமான்யர் இருப்பது போலவே இருக்கலாம்.’ என்று கூறுவதுண்டு.

ஒருவனுடைய வெளிச்சின்னங்கள் விரதங்கள் முதலியவை எவ்வளவு கடினமானவைகளாகவே யிருக்கினும், அவைகள் அந்தக்கரணப் பிரகாசத்துக்கு அத்தாட்சியாய் இருக்கவேண்டுமென்ற நியமம் இல்லை. அவ்விதசின்னங்களால் அந்தக்கரணப்பிரகாசம் அறியப்படின், ஞானம் ஒரு வஸ்துவில் ஒட்டியிருப்பது என்று கொள்ளநேரிடும். அது ஞானத்திற்கே கண்ணாடியில் அழுக்குப் போல விகாரம் கற்பிப்பதாம். ஞானத்தின் இயல்பே ஒன்றிலும் ஒட்டாமல் இருப்பதாதலால் இவ்விகாரம் பொருந்தாதாம்.

சாஸ்திரபாரங்கதர்களாகிய பண்டிதர்களுக்கும் இவ்விஷயத்தில் மயக்கம் உண்டாம் என்பதும் அது தோன்றலாகாதென்பதும் பின் வரும் வாக்யங்களால் விளங்கும்.

'பிராரப்தகர்மம் நாநாவா யிருப்பதால் ஞானிகளின் நடையும் வேறு வேறு விதமாக இருக்கிறது. இதனால் பண்டிதர்கள் திடஞானத்தால் மோக்ஷத்தைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத்தின் அர்த்தத்தில் மயக்கமுடையவராகுதல் தகுதியன்று. (விசாரசாகரம்)

இவ்விதம் அறிவுடையோர்க்கும் மயக்கம் உண்டாம் என்பது,

'கவயொ஽வ்யத்ர மொஹிதாঃ ।' (4–16)

இ-ள் இதிலே அறிவுடையோர்களும் மயங்கிவிட்டார்கள்.'

என்ற மேற்கோளாலும் விளங்கும். அஞ்ஞானமோ ஞானத்துக்கு நேர்மாருய் இருப்பதால் விகாரமும் விபரீதத் தோற்றமும் உடையது. ஞானம் சுயம்பிரகாசமுடையது,

'தூரமேதே விபரீதே விஷூசீ
அவித்யாயாச வித்யேதி ஜ்ஞாதா !' (கே)

இ-ள் அறியாமை யெனவும் அறிவு எனவும் அறியப் பட்டவை எவையோ, அந்த இவையிரண்டும் தம்முள் மிக வும் மாறுபட்டவை, வெவ்வேறு பயனைத் தருபவை.

இதனுல் ஞானம் மிகவும் அருமைத்தன்மை உள்ளது என்று சொல்லலாம். அது அவ்விதமே சாஸ்திரங்களுக்கும் அப்பால் இருப்பது என்று சொல்லப்படுகிறது.

'ஸ்வாத்ம ப்ரகாசரூபம் தத்
கிம் சாஸ்த்ரேண ப்ரகாச்யதே !' (யோக)

இ-ள் 'ஸ்வாத்மப்பிரகாசமான வஸ்துவை ஸ்வாத்மப்பி ரகாசத்தால் அறியவேண்டியதே தவிர சாஸ்திரத்தால் அறி யவேண்டியதில்லை,

இவ்வாறு கூறியதால், ஞானசம்பாதனம் மிகவும் கடு மையாய்த் தோற்றலாம், ஆகிலும் அது முற்றிலும் அவ்வி தமேயென்று கருதக்கூடாது. இவ்வண்ணம் கூறியிருப்பது அதன் அருமைத்தன்மையை விளக்குவதற்கே சொல்லிய தாய்க் கிரகிக்கவேண்டும். ஏனெனில்,

'கஸ்சிந்மாம் வேத்தி தத்வத:।' (7-3)

இ-ள் 'யாரோ ஒருவன் என்னை உண்மையாய் அறிகிறான்.

இதனால் அரியபொருள்களுட்சிறந்த அரும்பெரும்பொருளாயினும் ஆத்மவஸ்துவின் ஞானம் அடையக்கூடியதே என்பது விளங்கும். மேலும் ஒருவர் வெளிச்சின்னங்கள் எவ்விதம் இருந்தபோதிலும் அது அவர் அந்தக்கரணப்ரகாசத்தை அறிவிக்கும் குறியாகமாட்டாது என்பதும் விளங்கும். அவ்விதம் விகாரம் இருப்பதாய்க்கொள்ளப்படின் தத்வபாவனையில் அவ்வறிவு மயக்கவறிவு என்று மதிக்கப்படும்.

ஏனெனில்,

'ஞானரூபமான விஷயத்தில் விதிகள் புருஷனைப் பிரவர்த்திக்கும்படி செய்யச்சக்தியற்றனவாகின்றன.'

(பிரம்மஸூத்ரபாஷ்யம்)

'மாறுபாடில்லாத ஆகாசம் போல் எங்குமுள்ள உருவமற்ற ஆத்மாவிற்கு ஒன்றோடு கூடுதலும் பிரிதலும் பொருந்தாது.' (கீ-பா)

'ந லிங்கம் வா விவஸ்சித:।' (நாரத)

'ஞானிக்கு அடையாளமும் இல்லை.' என்பது பிரமாணம்

இதனாலே ஆத்மா மனோவாக்குக்கெட்டாதவன் என்று சொல்லப்படுகிறான்.

'யதொ வாசொ நிவத௯ந்தெ
அப்ராப்ய மநஸா ஸஹ !' (தைத்ரீய)

இ—ன் வாக்கானது எதற்கு லக்ஷணம் சொல்ல மாட்டாமல் மனதுடன் பின்னிடைகிறதோ (அது ஆத்மா)

"ஒருவிதமான தன்மையும் இல்லாததாய்ச் சொல்லிற்கும் மனத்துக்கும் எட்டாததாய் உள்ளதோர் பொருளைக் காணவில்லை" என்ற பிரமாணமும் இங்கு பொருந்தும்.

இப்பிரமாணத்தால் ஆத்மா அறியப்படாதவன் என்று தோன்றலாம். ஆனால் அறியப்படாமை என்பது முற்றிலும் அவ்விதம் அன்று. எதுபோலெனில், பல குழந்தைகள் பேசி விளையாடுகையில் அவர்கள் சப்தமாத்திரம் கேட்கும் தூரத்தில் இருக்கும் ஒருவன் பல குழந்தைகளின் குரலினிடையில் தன் குழந்தையின் சப்தத்தைப் பிரத்தியேகமாய் அறியக்கூடியவனா யிருக்கிறான். ஆகிலும் இதை அவன் மனத்தால் கிரகித்தவனன்று. கிரகித்திருப்பானாகில் அது இன்ன விதமென்று சொல்ல வல்லவனாயிருப்பான். அவனோ தன் வாக்காற் சொல்வதற்கு சக்தியற்றவனா யிருக்கிறான். இதனால் அவன் தன் குழந்தையின் பேச்சை மனதால் அறிந்து வாயாற் பேசக்கூடாமல் இருப்பினும் அது தன் குழந்தையின் ஒலியே என்பதை உணர்ந்தவனாகவே யிருக்கிறான் என்று கொள்ளப்படுவது போல, மனோ வாக்குக் கெட்டாத ஆத்ம வஸ்து ஸ்வரூபத் தியானமும் அவாங்மானஸ கோசரமாயினும் ஞானியால் அறிந்தனுபவிக்கப்படுவதே என்பதாம். இதுபற்றியே,

'ஜ்ஞாநமயம்' (13–17)

இ—ள். 'அறிவினால் அடையப்படுவது' என்றும் சொல்லப் படுகிறது.

மேலே பலவாறு விவரிக்கப்பட்டபடி, வெளிச்சின்னங்களாலே ஞானம் அறியப்பட இயல்வதன்று அவ்வாறு அறியப்படுவதாயின் விகாரமுடையதாம், என்று அறியப்பட்டது.

ஞானி, விகாரமற்றவனாதலால் அவன் பூத தேகம் அழியினும் ஞானம் அவிகாரியாம் தன்மை அறியத் தக்கதாக வேண்டும். ஞானி தானே ஆத்ம ஸ்வரூபம் என்பதையும் ஆத்மாவில் ஜனன மரணங்கள் இல்லையென்பதையும் அறிந்தவனாதலால் தேகம் அழிந்தாலும் முன்போலவே ஞானமயமாய் விளங்குகிறான்.

'ந ஜாயதே ம்ரியதே வா விபஸ்சித்' (கடம்)

(இ—ள்) மேதாவியாயுள்ளவன் ஜனிப்பதுமில்லை மரிப்பதுமில்லை

இதனால் ஜீவிதத்திலும் மரணத்திலும் ஆத்மா ஒரே வண்ணமாய் இருக்கிறான் என்பதும் ஆத்மாவில் இவ்வித அபேதத்தைப் பார்ப்பவன் ஞானியாவன் என்பதும் ஜனன மரணம் தேகத்துக்குள்ள விகாரம் என்பதும் தேகம் அழிந்த பிறகும் ஆத்மா இருப்பதாதலால், ஆத்மா அவிகாரி என்பதும் நித்யன் என்பதும் விளங்கும். இதனை அறிகின்றவன் மரணத்தைப் பார்த்து மனோவிகாரம் அடைவது தகுதியன்று. ஏனென்றால் ஆத்மாவில் ஜனன மரண விகாரங்கள் சித்திப்பதில்லை. நித்ய வஸ்துவே ஸத்யம்.

'ப்ரஹ்ம ஸத்யம்' (நிரா)

இ—ள் 'பிரம்மம் சத்யம்.'

மரணத்தால் தேகம் அழிந்த பிறகும் ஆத்மா இருப்பதாய் அறியப்படுவதால் அது தேகமன்று. ஆத்மா ஜனன மரணம் அடைவதில்லை.

'நாஹம் தேஹோ
ஜந்ம ம்ருத்யூ குதோ மே ।' (ஸர்வ)

இ—ள். நான் தேகமில்லை. ஜனன மரணங்கள் எனக்கு எங்கிருந்து வரும்'—

தேகம் விகாரப்படுவதாலும் தேகம் ஜடம் என்று அறியப்படுகிறது.

'ரதவிவாசேதநமிதம் ரரீரம்' (மைத்ரா)

இ—ள். இச்சரீரம் வண்டியைப்போல் ஜடமானது.

தேகம் ஜடம்; ஆகவே ஆத்மா அதின் வேறு என்றும் அறியலாயிற்று. தேகம் ஜடமானதால் அது தானே தன் உற்பத்தி நாசங்களை அறிய வியலாது. இதனால் அவற்றை அறிபவன் ஆத்மா, என்றும் தெளிவு ஏற்பட்டது.

'வடவவிவிதாகாரம்
விஷ்வாநம் வாநம் வாநம் ।
தஸ்மை அ ந ஜாநாதி
ஸ ஜாநாதி அ நித்யய: ॥' (அமிர்)

இ—ள். குடத்தைப் போல் தேகமானது பலவித ஆகாரங்களையுடையது. மறுபடி மறுபடி நாசத்தை அடைகிறது. தேகமானது தன்னுடைய நாசத்தின் அறிவை யுடையதன்று. அவன் (ஆத்மா) எப்போதும் அறிகிறான்"

இதனால் அறிவின் உருவமே ஆத்மாவின் உருவம் என்பதும் அக்காரணத்தாலேயே எல்லாவற்றையும் எப்போதும் அவன் அறிய வல்லவனாயிருக்கிறான் என்பதும் ஞானரூபன என்பதும் தெளிவாகும். 'ஞானமானது அநித்யமாய் இருந்தாலன்றோ ஒரு சமயம் அறிகின்றதென்றும் ஒரு சமயம் அறியவில்லை யென்றும் ஏற்படுவது பற்றி அஸர்வஞ்ஞனாகவுமாகக்கூடும்? இந்த தோஷம் ஞானத்தை நித்யமாய்ச் சொல்லும்போது வருவதற்கு இடமில்லை.' (ஸ-ஓ-பா)

இக்கருத்தைப் பற்றியே,

'ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாமஹம்' (10-38)

இ-ள் 'ஞாநிகளுக்கு ஞானமாகவும் இருக்கிறேன்' என்ற பிரமாணமும் வழங்குகிறது.'

உண்மையில் மரணத்தை அறிவது என்றால் என்ன? மரணசந்தர்ப்பத்தில் ஆத்மாவுக்கு விகாரம் ஏற்படுவதில்லை என்று அறிவதே. அவ்வாறு அறியும் அறிவே மோக்ஷ அறிவு. மரணத்தை அறிகிறவன் அனந்தனல்லவா? ஏன்! அதினும் அருமையான அறிவு வேறொன்றுமில்லை.

'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' (தைத்)

இ-ள் 'பிரம்மம் மெய்ப்பொருளாயும் அறிவாயும் முடிவில்லாததாயும் உள்ளது.'

ஜடப்பொருள்களே விகாரம் உடையவை. புத்தி விகாரம் உடையதால் அதுவும் அவ்விதமே ஜடம் எனப்படுகிறது. அதனால் அது ஆத்மசேதனமின்றித் தானாகப் பிரகாசிப்பதன்று. கண்ணாடி பிரகாசிப்பதாயினும் அது இருளிற்பிரகாசிப்பதன்று. அது போலவே. இதனால் ஆத்மப்பிரகாசமின்றி மாயாப்பிரபஞ்சம் தோற்றுவதில்லை என்று அறியலாயிற்று.

ஒன்பதாம் அத்தியாயம்.

ஞானியின் இயல்பு.

ஒருவன் தான் செய்யவேண்டியது ஏதாவது மிஞ்சுகிற்பதாக எண்ணம் கொண்டாலும் ஞானியாவதில்லை.

‘ஜ்ஞாநாம்ருததருப்தஸ்ய யோகிநோ ந கிஞ்சித் கர்தவ்யமஸ்தி ததஸ்தி சேந் ந ஸ தத்த்வவித் ।।’ (பைங்)

இ—ள் ஞானமிருதத்தினல் திருப்தியடைந்த யோகிக்குச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஏதாவது செய்யவேண்டியது இருக்குமாயின் அவன் தத்வத்தை அறிந்தவனாகான்,

இதனல் ஆத்மாவை அறியாதவனுக்கு செய்யத்தக்கவற்றைச் செய்தவன் என்பதற்கேற்பக் கிருத கிருத்யன் என்ற எண்ணம் உண்டாவதில்லை என்பதும் விளங்கும்.

‘ஏதத் புத்த்வா புத்திமாந் ஸ்யாத்
க்ருதக்ருத்யஶ்ச பாரத ।’ (14.20)

இ-ள் இதனை அறிந்து அறிந்தவனாகவும் செய்யவேண்டியதைச்செய்தவனாகவும் ஆவன்.

வேதாந்தத்தில் நூதனகிரந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதில் தான் அறியாதவிஷயம் ஏதாவது ஒன்று இருக்கக்கூடும். அதைப்பார்த்து அறியவேண்டும் என்று எண்ணுகிறவனும் ஞானியாவதில்லை. ஏனென்றால் ஆத்மா ஸகலவேதாந்தத்தாலும் திருப்தியடைந்தவன்.

‘ஸர்வவேதாந்த த்ருப்தோஸ்மி’ (மைத்)

இ—ள் சகலவேதாந்தங்களாலும் திருப்தியடைந்தவனாயிருக்கிறேன்.

இதனால் ஞானியே, ஆத்மாவானதாலும், ஆத்மா வேதாந்ததிருப்தன் என்று சொல்லப்படுவதாலும் திருப்தியடைந்தமேல் அறியவேண்டியதொன்றும் இராமையால் ஞானிக்கு நூதன விஷயத்திற் செல்லும் மனம் இல்லை என்பதாயிற்று.

மனஸ்தாபம் என்பதும் ஞானிக்கில்லை. ஏனெனில் அது கர்த்தவ்ய புத்தியால் ஆவது. ஞானியோ ஆத்மாவை அகர்த்தாவாகக் காண்கிறான் என்பது பிரமாணம்,

‘அகர்த்தாரம் ஸ பச்யதி’ (13.29)

இ—ள் ஆத்மாவை அவன் அகர்த்தாவாகக் காண்கிறான்.

அதனால் ஞானியின் சித்தத்தில் சந்தாபம் ஏற்படுவதன்று என்று விளங்கும். ஆகிலும் அகஸ்மாத்தாக நேரிடும் பரஹிம்சாவிஷயத்தில் அது ஏற்படுவதாம்.

‘ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி’ (யஜுர்வேதம்)

இ—ள் ஸர்வப்ராணிகளையும் எப்பொழுதும் ஹிம்சை செய்யக்கூடாது.

என்ற விதியை அநுஸரித்து நடப்பவனானதால் ஞானிக்கும் உலகத்திற்கும் பரஸ்பரபயம் ஏற்படுகிறதில்லை.

'யஸ்மாந்நோத்விஜதே லோக:
லோகாந்நோத்விஜதே ச ய: ।' (12-15)

இ—ள் உலகம் எவனிடத்தினின்றும் வருந்துவதில்லையோ, அன்றியும் எவன் உலகத்தினின்றும் வருந்துவதில்லையோ. (அவன் ஞானி)

சிலர் தங்களுக்கு ஞானம் இருப்பதாகவும் ஆனால் அந்த ஞானம் தனியாகவே முற்றிலும் மோக்ஷஹேதுவாகாமற் போய்விடுமோ என்று சந்தேகித்து அதற்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆகிலும், 'ஸ்நாநம் ஆசமநம் யஞ்ஞோபவீததாரணம் இவை முதலியவற்றால் நான் சுத்தன்; ஸம்ஸ்காரத்தை அடைந்தவன் என்ற எண்ணமானது எவனிடத்திலுண்டாகிறதோ அவன் ஸம்ஸ்காரம் பெற்றவன் ஆகிறான். அவனே தேகவகுப்பிற் சேர்ந்தவனேயாவன்.' (ஸூ—பா) இதனால் இவன் ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவனில்லையென்பதும் இவன் செய்யும் கர்மங்கள் ஞானசாதனங்களாவதில்லையென்பதும் விளங்கும்.

இதுவே வித்யாஸஹிதகர்மம் என்பது இது மோக்ஷத்திற்குசாதனமன்று. ஏனென்றால்,

'மோக்ஷமடைய ஞானம் காரணமேயன்றி ஞானம் கருமம் இரண்டும் காரணம் அல்ல' (கீ—பா)

இதனால்,

'மோக்ஷபலனிற்கூட இச்சையை' வைத்து கர்மம் செய்யக்கூடாது என்பது உபதேசிக்கப்படுகிறது.

ஒருவன் தனக்கு ஞானம் இருப்பதாக நினைத்து ஆனால் அதை ரக்ஷிக்கும்பொருட்டு விருக்ஷத்துக்குத் தண்ணீரால் ரக்ஷை (ஏற்படுவது) போல் ஞானத்தை ரக்ஷிக்கக் கர்மம் செய்கிறான். அது ஞானமன்று. ஏனென்றால்,

'திடஞானம் உள்ளவனுக்குச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஒருதடவை உண்டாகிய சம்சயம் இல்லாத அந்தக்கரணத்தின் விருத்திரூபஞானமே அவித்தையை நாசம் செய்துவிடுகிறது.' (விசாரசாகரம்)

வித்யாசஹிதகர்மத்தாலும் மோக்ஷம் கிட்டாது' ஞானமே தனியாக மோக்ஷத்தைத்தருகிறபடியால் வித்யாசஹித கர்மம் என்று ஒன்று வேண்டுவதில்லையென்றாயிற்று. தானே மோக்ஷத்தைத்தரும் ஞானத்துக்கு ஸஹாயம் வேண்டுமோ ?

'ஊதஶ்ச தவொ நிரவெக்ஷஜ்ஞாநநிஷ்டா ஊத்யஸ்ய ஶிம் ௨ம் ஜ்ஞாநதவஸா ஊதி விஶெஷணம்' (கீ—பா)

இ—ள் ஞானநிஷ்டையானது தனியே மோக்ஷத்தைக் கொடுக்கும் விஷயத்தில் தனக்கு உதவியாக இதரதபஸ்ஸுகளை அபேக்ஷியாது நிற்பதைக் குறிப்பிடுவதற்காக ஞானமா

கிய தபஸிணுல் என்னும் விசேஷணம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதனுல் வித்யாஸஹிதகர்மத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று எண்ணுகிறவர்கள் ஞாநிகளல்லர் என்று விளக்கப்பட்டிருக்கிறது.

'யெ து ப்ரத்யவாய பரிஹாராய கர்ம குர்வந்தி ப்ரஹ்மவிதொபி, தெஷாம் நாத்மைவ ஸர்வம் ஹவதி ப்ரத்யவாயஸ்ய ஜிஹாஸிதவ்யஸ்ய ஆத்மநொந்யஸ்ய கல்பிதத்வாத் ।' (பிரகத் பாஷ்ய)

இ-ள் எவர்கள் பிரத்யவாயம் வரும் என்று நினைத்துக் கர்மங்களைச் செய்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் ஆத்மாவாகத் தோற்றம் இல்லை; அவர்கள் பிரம்மவித்துக்களல்லர். ஆத்மாவுக்கு அந்யமாகப் பிரத்யவாயம் என்று ஒன்று இருக்கிறது என்ற பாவம் உண்டாகிறபடியால் இவர்கள் பிரம்மவித்துக்களாகமாட்டார்கள்.

இதனுல் அநேகவிஷயங்கள் தெரிந்தும் ஏதேனும் ஒரு விஷயத்திலாவது சந்தேகத்தை அடைகிறவனும் அஞ்ஞானியாவன். ஞானியாகமாட்டான் என்பதாம்.

'ஜ்ஞாநஸம்சிந்நஸம்ஶயம் ।' (4–41)

இ-ள் ஞானத்தால் சம்சயம் அறப்பெற்று.

இதனுல் அநேகவிஷயங்கள் தெரிந்தும் இவ்வுயர்ந்த விஷயத்தை அறியாதவன் அஞ்ஞானியாகிறுன் என்பதும்

அஞ்ஞானியும் அநேகவிஷயங்கள் அறிந்திருக்கிறான் என்பது தும் தெரியவரும்.

தவிர, ஞானத்தால் சித்திக்கும் மோக்ஷம் கர்மத்தால் எட்டக்கூடியதாகில், அது கர்மபலம் போல் அநித்யம் ஆகிவிடும். எவ்விதம் என்றால், கர்மபலமாகிய ஒரு கிரகம் அநித்யமாவதுபோலவே. இத்தன்மையைக்கீழ்வரும் பிரயாணமும் தெரிவிக்கும்.

'பௌவயிஸிதஃநிதஃழ' (கடம்)

இ-ள் கர்மபலமான நிதி அநித்யம்.

இவ்வாறு கூறப்பட்டதால், ஆத்மத்தியானம் சிரேஷ்டம் என்று ஆகிறது.

ஞானியாயுள்ள ஒருவன் கருமம் செய்வானே யெனில் 'அவ்விதமாக உண்மையைக் காண்பவனால் செய்யப்படும் கர்மங்கள் எல்லாம் ஸங்கல்பங்கள் அற்ற வெறும் செய்கைகளாகச் சும்மா அநுஷ்டிக்கப்படுகின்றன. அவன் பிரவிருத்தி மார்க்கத்தில் இருப்பவனாயின், லோகசங்கிரகத்துக்காக அக்கர்மங்களைச் செய்கிறான். (கீ-பா)

ஏனெனில்,

'அபேதபாவனையுள்ள அக்ஷரோபாசகனான ஞானிவிஷயமாகக் கருமயோக முபயோகப்பட மாட்டாது. ஏன்? அக்ஷரோபாஸகரான அபேததர்சனமுள்ளவர்கள் அக்ஷரஸ்வரூபமே.' (கீ-பா)

:o·

பத்தாம் அத்தியாயம்.

ஞானிகர்மிதாரதம்யம்.

'யொகிநாமபி ஸவெ-ஷாம்
மத்கதெநாந்தராத்மநா ।
ஶ்ரத்தாவாந் ஹஜதெ யொ மாம்
ஸ மெ யுக்ததமொ மதஃ ॥' (6–47)

இ-ள் சகலயோகிகளுள்ளும் எவன நம்பிக்கையுடைய வனுய் என்னிடம் சென்ற அந்தக்கரணத்தோடு என்னைத் தொழுகிருனே, அவன் (தியானத்தால்) கூடியவரையிலும் மேலானவன் என்பது என் கருத்து.

ஒருவன் தான் செய்யவேண்டிய புண்யகர்மாக்களில் ஒன்றும் எஞ்சிநிற்பதில்லை, அதனுல் தனக்கு மோக்ஷம் சித்தம் என்று எண்ணுவதும் யுக்தமன்று. ஏனென்ருல் புண்யகர்மாவின் பலனும் அநித்யமே, அநித்யவஸ்துவால் நித்ய வஸ்துவை அடையவியலாது. மோக்ஷமானது நித்யமான ஆத்மஸ்வரூபம்.

'யதிஹ வா அவ்யெவம்வித் மஹத்புண்யம் கமெ- கரொதி தஸ்யாஹ்ய அந்ததஃ க்ஷீயத ஏவ ॥' (பிரகத்)

இ-ள் ஆதலால் ஆத்மாவை அறியாதவன் எவ்வித மஹத்தான புண்யகர்மத்தைச் செய்தாலும் அது பலாநுபோகமுடிவில் நசித்துவிடும். இதனால் கர்மத்தின் பலம் சித்தசுத்தியென்பதேயாம். இதுவே அதன் தத்வம்.

'யொமஜாதவிபாஸயெ' (6–12)

இ-ள் புத்தி திருந்துவதற்காகவே யோகத்தைக் கூட வேண்டும்.

அவ்வறிவு கர்மம் செய்தே வாழ்பவனுக்குக் கர்மபலவிச்சையால் மூடப்பட்டிருக்கிறது.

'யதூஇணொ ந வுரவெஉயஷி ஙாமாக ।' (முண்ட)

இ-ள் கர்மிகள் காமபலப் பற்றுதலினால் தத்வத்தை அறிவதில்லை.

கர்மபலப்பற்றில் புத்தி நிலைக்குமாகில், அது சிதறிப் போவதாகிறது. ஏனென்றால், கர்மங்களும் அவற்றால் வரும் பலன்களும் பலவாக இருக்கின்றன. அதனாலே தான் புத்தி சிதறுவதாகிறது.

'வஹுஶாவாஹ்யநநாஶ்ச
வுஃஸயொஉவ்யவஸாயிநாழ ।' (2-41)

இ-ள் உறுதியற்றவர்களுக்குப் புத்திகளோ அளவில்லாதனவாய்ப் பல கிளைகளையுடையனவாம்.

ஆனால் ஆத்மவிசாரம் செய்பவனுக்கு இவ்விதம் அன்று.

ஏனென்றால், ஞானியின் புத்திக்கு ஆத்மா ஒன்றே விஷயம் ஆகிறது. அதனால் அவ்விஷயத்தில் புத்தி நிலைத்து விடுகிறது. அதனால் ஞானி சிரேஷ்டனாகிறான்.

'தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த
ஏகபக்திர்விசிஷ்யதே ।' (7.17)

இ-ள் ஒன்றிலேயே பக்தியுடையவனும் எப்பொழுதும் ஒரு நிலைப்பட்ட ஞானியானவன் அவர்களுள் மேற்படுகிறான்.

இதனால் கர்மி இகழத்தக்கவனாவதுமில்லை. எப்படியெனில்,

'ராதிர்தாது: பராயணம்
திஷ்டமாநஸ்ய தத்வித: ।' (பிரகத்)

இ-ள் 'கர்மிக்கும் ஆத்மவித்துக்கும் பராகதியாய் இருக்கும் ஆத்மா ஒன்றுதான்.'

இதனால் அபேதமாய் பார்ப்பதே ஞானமாம்.

'அபேததர்சநம் ஜ்ஞாநம்' (மைத்)

இ-ள் அபேதமாய்ப் பார்ப்பதே ஞானமாம்.

இவ்விதத்தால் கர்மமும் தள்ளத் தக்கதன்று என்று கொள்ளவேண்டும்.

'கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண:' (3-8)

இ—ள் செயல் செய்யாமையினும் மேலானது.

ஆனால் அது எவ்விதம் செய்யப்படவேண்டும்?

'முக்தஸங்க: ஸமாசர' (3-9)

இ-ள் பற்றை விட்டவனாய்க் (கர்மாக்களை) நன்கு செய்க.

அதாவது உலகநன்மையே நாட்டமாய்க் கொண்டு இஹ பரப் பிரயோஜனத்தை எதிர் பாராது கர்மம் செய்வதாம்.

'ஏவம் ஸர்வைச்வர்யஸம்பன்னோऽபி ஸந் ஹ்ருதய ஏவ பரமாத்மஜ்ஞாநேந விநா க்ருதார்த்த ஏவ நாஸ !' (பிரகத்-பாஷ்ய)

இ-ள் ஒருவன் சகல ஐசுவரியவானாய் இருந்தபோதிலும் பயமத்தியில் இருந்துகொண்டு கிருதார்த்தனாகமாட்டான்.

இதனால் நிரம்பிய போகத்தில் தூக்கமில்லாமல் இருக்கிறவொருவன் தனக்குத் துக்கம் இருப்பதில்லை யென்றும் தான் அறியவேண்டியது ஒன்றுமில்லை யென்றும் எண்ணம் உடையவனாயிருக்கிறான்.

'ஈச்வரோऽஹமஹம் போகீ
ஸித்தோऽஹம் பலவாந் ஸுகீ !' (16-14)

இ—ள் நான் ஆள்பவன், நான் அனுபவிப்பவன்

அடையப்பெற்றவன், நான் வலிமையுள்ளவன், இன்பமுடையவன்.”

இவ்வித எண்ணமுடையவனும் ஞானியாவதில்லை. ஏனெனில் செல்வம் முதலிய நிலையற்ற சாதனங்களால் ஏற்படுவதும் ஒரு நிமித்தத்தைத் தனக்குத் தோன்றுமிடமாய்க் கொண்டிருப்பதும் அந்நிமித்தம் நீங்கவே நீங்கிவிடுவதும் ஆகிய இந்த ஞானம் பிரமைஞானமே (மயக்கவுணர்வே) என்று அறியலாம். இது விகாரமுடையது. ஞானமோ முன்னே கூறியபடி விகாரமற்றது.

‘ந ஹி த்ரஷ்டுர் த்ருஷ்டேர் விபரிலோபோ வித்யதே ।
அவிநாஶித்வாத் ॥’ (பிரகத்)

(இ-ள்) காண்பவனுடைய காட்சிக்கு நாசம் வாராது. அழியாமை இருப்பதால்.

பதினோராம் அத்தியாயம்.

உதாஸீந பாவம்.

—:o:—

ஒருவன் தான் சகலத்துக்கும் வசப்பட்டவனாகவே இருந்தபோதிலும் சகலத்திலும் தனக்கு உதாஸீனபாவம் இருப்பதாக அறிவானாகில் அவனும் ஞானியாவன்.

'ஸர்வவஸ்துஷ்வுதாஸீந
பாவமாஸநமுத்தமம் ।' (திரிசிகி)

இ-ள் எல்லா வஸ்துக்களிலும் உதாஸீநபாவம் உத்தமமான ஆஸனமாம். அத்தகையவனைக் கர்மபந்தம் பற்ற வலியற்றதாம்.

'ந ச மாம் தாநி கர்மாணி
நிபத்நந்தி தநஞ்ஜய ।
உதாஸீநவதாஸீநம்
அஸக்தம் தேஷு கர்மஸு ॥' (9–9)

இ-ள் தனஞ்சய! இனி அந்தக் கர்மங்கள் உதாஸீநன் போல இருப்பவனாய் அக்கர்மங்களின் மேற்பற்றில்லாத என்னைக் கட்டமாட்டா.

அதனால் உதாஸீநபாவமாய் இருக்கிற பகவானைக் கர்மம்

கட்டுப் படுத்துவதில்லை. ஆகவே அவ்வித உதாஸீநபாவம் உள்ள ஞானாத்மாவுக்குக் கர்மபந்தம் ஏற்படுவதன்று என்று கொள்ளவேண்டியதாகிறது.

'ந மாம் கர்மாணி லிம்பந்தி
ந மே கர்மபலே ஸ்ப்ருஹா ।
இதி மாம் யோऽபிஜாநாதி
கர்மபிர்ந ஸ பத்யதே ॥' (4–14)

இ—ள் கர்மங்கள் என்னைப் பற்ற, கர்மப் பயனில் எனக்கு அவாவில்லை என, எவன் என்னைத் தெரிந்துகொள்கிறானோ அவன் கர்மங்களாற் கட்டப் படான்.

"நான் கர்த்தா, கர்த்தா அல்லேன் ; எனக்குக் கர்மத்தின் பலனில் ஆசையில்லை" என, இவ்வாறாக அறிகிறவன் வேறு எவனானபோதிலும் அவனும் கர்மங்களாற் கட்டுப் படுவதில்லை. (கீ-பா)

ஆத்மாவை அறியாமல் உதாஸீநபாவம் ஏற்படுவதில்லை. ஏனென்றால்,

'நிஶ்சயஞ்ச பரித்யஜ்ய
அஹம் ப்ரஹ்மேதி நிஶ்சயம் ।
ஆநந்தபரிதஸ்வாந்த:
வைதேஹீ ஜீவந்முக்த ஏவ ஸ: ॥' (தேஜோ)

இ-ள் (பிரமமே நான் என்ற) நிச்சயத்தையும் நான்

பிரம்மமாய் இருக்கிறேன் என்ற நிச்சயத்தையும் விட்டுப் பூரணானந்தமாய் இருக்கிறவன் விதேகமுக்தன்.

இதில் 'ஆத்மாவை அறிகிறோம்' என்ற உணர்ச்சியும் இல்லாமலே, ஆனந்தத்தில் இருக்கிறவன் முக்தன் என்று சொல்லப் படுகிற போதிலும் ஆத்மாவை அறியாமல் இந்த ஆனந்தம் நிலைகொள்வதில்லையாகையால் ஆத்மஞானிக்கே இத்தகைய ஆனந்தம் உண்டாகும் என்று கொள்ளவேண்டும். இதனால் உதாஸீன பாவத்துக்கும் ஆத்மானந்தத்துக்கும் உள்ள மகிமை விளங்கும். இவ்வண்ணமே ஆனந்தாநுபவம் வந்தபிறகே உதாஸீநபாவம் ஏற்படும் என்று அறிய வேண்டும்.

இவ்விதம் உதாஸீநபாவத்துடன் ஆனந்தாநுபவியாய் இருப்பவன் பார்ப்பவர்க்கு எப்படித் தோன்றுவான்?

ஒரு மலையின் சுற்றுப் புறங்களில் கடுமையான மேகங்கள் திரண்டு மழை பொழிகையில் அதன் சிகரத்திலே அந்த மேகக்கூட்டங்களாற் பாதிக்கப் படாது சூரியப் பிரகாசம் விளங்குவது போல இவன் சித்தசுத்தியிலே தோன்றிய ஆத்மஸ்வரூபப்ரகாசம் உடையவனாய் இருப்பான். இது சாத்தியமா? சாத்தியமே. எப்படியென்றால்,

'ஸர்வேஷு காலேஷு

மாமநுஸ்மர யுத்ய ச' (8-7)

இ-ள் நீ எக்காலங்களிலும் என்னைச் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். அன்றியும் போர் புரிய வேண்டும்.

என்று சொல்லப்பட்டபடி ஒருவன் தன் வர்ணத்துக்குரிய தருமத்தை அநுஸரித்தும் அதே காலத்தில் ஈச்வர விசாரம் செய்தும் கடைத்தேற முயற்சிப்பது சாத்தியம் என்றாகிறது. இதனால் மேற்சொல்லிய உதாஸீனபாவம் நல்ல பயன் பெறுதல் உண்டு என்பது விளங்கும்.

‘ ஊஜெவெஷ்யஸ்யஸம்ஶய: ’ (8-7)

இ-ள் என்னையே யடைவாய் சம்சயமில்லை.

இவ்வாறு வாழ்பவன் ஆத்மாநாத்மவிவேகத்தால் ஜகத் வியாபாரத்திலே தோற்றும் விகாரங்களால் விகாரப்படாமல் இருக்கிறான்,

’ ஸுநாத்ருதாம் வஶிதஸ்ஜஸ்

நிவிகாரொ ஜமதிதெள ।’ (வரா)

இ-ள் தேகமே ஆத்மா என்பதை விட்டு ஜகத் வியவகாரத்தில் விகாரமற்றவனாய் (வாழ்பவன்)

அவனுக்குப் பற்றுதல் இன்மையால் எப்பொழுதும் பூரணன் என்கிற எண்ணத்துடன் இருக்கிறான். அதனாலும் சித்த விகாரம் இல்லை.

‘ நித்யஉணுஉ-வ: ஸஆ:

வபாஞாத்ரா ஸ வணெய: ।’ (நாரத)

இ-ள் நித்யம் உள்நோக்கம் உள்ளவனும் சுத்தமான

வனும் மனதை அடக்கினவனும் தான் பூர்ணன் என்கிற புத்தியையுடையவனும் (இருப்பவன்)

அதனால் 'ஆத்மாவை உள்ளபடி அறியும் ஞானியாவனோ, அவன் எக்கர்மத்திலும் பயனைக்காணாதவனாய் இருக்கிறான்.' (கீ-பா)

இக்காரணத்தால் உத்தமசித்தனாகிறான். அதுவே முக்தி, அவனே முக்தன்.

'உ¯க்த்து ணவொத்த்ஊாஶய꞉' (முக்தி)

இ—ள் உத்தமமான சித்தத்தையுடைய அவன் முக்தனே.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

சரித்திரத் தொடர்ச்சி.

மேலே பலவிதமாய் எடுத்துக் காட்டிய ஞானியின் லக்ஷணம் பிரமஸ்ரீ கிருஷ்ணையரவர்களிடம் எவ்வளவில் அமைந்திருந்தன என்பதை கவனிப்போம். இந்த மஹான் இளம்பருவத்திலேயே மனைவியையிழந்து அநேக வருஷகாலம் விதுரராகவே வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் அவர் மனவுறுதி எவரும் பாராட்டத்தக்கதாகவே இருந்தது. சித்தூர் என்ற இந்நகரத்தில் பெரியதோர் ஆங்கில பாடசாலையும் அமைத்தார். தாமே நேரில் இருந்து வேலைக்காரர்களோடு சிரமப்பட்டுப் பெரியதோர் கட்டிடம் கட்டிமுடித்து அக்கட்டிடத்தில் பல வருஷங்கள் பாடசாலையை நடத்தினர். பிறகு அதை ராஜாங்க அதிகாரிகள், தாம் வகிப்பதாய் முன்வந்து கேட்க அவர்களிடம் ஒப்பித்தார், தாமே சிரமப்பட்டு ஸ்தாபித்த ஒரு வித்யாசாலையை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் தமக்கு விசேஷ அபிமானம் இருக்கவேண்டுமாயினும் அதிலும் அவ்வளவு பற்றுக் கொள்ளாமல் உதாஸீனபுத்தி காட்டி ராஜாங்கத்தாரிடம் ஒப்பித்தது பெருமையல்லவா? தம் ஊரிலேயே வேதசாஸ்திரபாடசாலை ஸ்தாபித்து எந்த நாட்டிலும் காணமுடியாத அழகான கட்டிடம் ஒன்று அமைத்து அதை நன்றாய் நடத்திவந்தார். அதிலும் தமக்குக் கீர்த்திவருவதை அவர் தம் நோக்கமாய்க் கொள்ள

வில்லை. பின் வரும் வாக்கியம் அவர் வாக்காலேயே பலமுறையும் சொன்னதுண்டு. 'இந்தப்பாடசாலையில் அத்யயனம் செய்யும் வித்யார்த்திகளில் யாரேனும் ஒருவனாவது முமுக்ஷு ஆகக் கூடுமாயின் அதுவே என்னைக் கிருதார்த்தனாக்கும்' இந்த வாக்யம் நன்கு கவனிக்கத்தக்கது. லக்ஷரூபாய் வரையிலும் அதற்கெனத் திரவியவிநியோகம் செய்து நடத்தும் ஒரு பாடசாலைத் தர்மத்தால் அவர் தமக்கு வரவேண்டியதாய் எண்ணிய பலன் என்ன? ஸ்வப்ரயோஜனமாக ஒன்றும் இல்லையே. ஒரு வித்யார்த்தி முமுக்ஷுவாவதே தம்மைக் கிருதார்த்தனாக்கும் என்று அவர் எண்ணியது பொதுவாக உலகில் அவர்க்குள்ள நோக்கத்தையும், மநுஷ்ய ஜன்மம் எடுத்ததின் பலன் இன்னது என அவர் உணர்ந்திருந்ததையும் நன்கு தெரிவிக்கப் போதுமான ஸாக்ஷ்யமாம்: இவ்விஷயமாய் அவர் கைப்பட எழுதிய ஒரு அறிக்கைப்பத்திரமும் சாக்ஷி பகரும். அதில் இக்கருத்துப்பட அவர் எழுதியவை பின்வருமாறு:—

'இப்பாடசாலையில் வித்யாப்யாஸம் செய்து பிரியும் வித்யார்த்திகள் எல்லாம் உலகத்திற் கேவலம் உபஜீவனத்தினை வேண்டி யதேஷ்டமாகிய தனார்ஜனத்திற்குத் தக்கவையாகிய பிரவர்த்திகளைச் செய்வதில் குசலர்களாய் ஆகவேண்டும் என்பது பிரதானமான உத்தேசமில்லை. தர்மார்த்தகாமமோக்ஷம் என்ற புருஷார்த்தசதுஷ்டயங்களில் அத்யந்தம் பரமசிரேயோரூபமாகிய மோக்ஷம் என்ற கைவல்யப்பிராப்திக்கு அருகர்களாய் ஆகவேண்டும் என்பதே முக்கிய உத்தேசம்.' இதனால் அவரது உயர்ந்த நோக்கம் தெளிவாய் விளங்குகிறது.

அன்றியும் 'உலகில் விவேகம் சம்பாதித்தற்குரிய மனிதன் எவ்விதம் வாழவேண்டும்' எனில், 'என்னைப் பாருங்கள்' என்று அவர் கூறுவது வழக்கம். இதன் கருத்து என்னவெனில் அவர் வாழ்க்கையின் தினசரியை என்றும் ஒரே மாதிரியாய் ஏற்றத் தாழ்வின்றியிருந்ததே. கோயம்புத்தூரில் சாதாரணநிலையில் இருந்தபோது எப்படி வெளிப்படையான நடத்தையுடையவராய் இருந்தாரோ அதில் அணுவளவேனும் வித்யாஸம் ஏற்படாமல் இவ்வூரில் வந்து லக்ஷாதிபதியானபிறகும் வாழ்ந்து வந்தார். சர்வசாதாரணமான உண்டி உடைகளும் டம்பமற்ற பிரயாணசாதனங்களை உபயோகிப்பதும் நித்யகர்மாக்களுக்கு இடையூறு நேரிடாவண்ணம் பிரயாணாதிகளைச் செய்வதும் வழக்கமாய்க் கொண்டிருந்தார். ஜீவிதகாலமுழுவதும் ஒரே விதமான வேஷ்டி தரித்துவந்ததால் அற்பவிஷயத்திலும் பிரமம் இல்லாமலிருந்தார் என்பது வெளியாம். அநுஷ்டானவிஷயத்தில் ஜீவிதகாலமுழுவதும் எவ்வளவு அசக்தமாயிருந்த போதிலும் இடைவிடாது சிரத்தையோடு செய்துவந்தார். வைதிககாரியங்களிலும் ரித்விக்கைப் போல் தற்பரராய் இருந்தார். மரணசமயத்தில் இரண்டு நாட்களே அனுஷ்டானத்துக்கு தடையேற்பட்டது. இவ்வண்ணம் கூறியவை யெல்லாம் அவருடைய மனவுறுதியை விளக்கும்.

அவர் உடம்பிலே அடிக்கடி தோன்றிய பலவித நோய்களும் உபத்திரவமும் அவர் மனத்தை ஒருபோதும் வருத்தவில்லை. உடம்பிலே தோன்றிய எவ்வித உபத்திரவமும்

அவரது நிச்சல சித்தத்தைக் குலைக்கக் கூடியதாய் இருக்க வில்லை. இது மட்டுமா? இந்த சாந்தசீலரை விஷஜந்துக்களும் உபத்ரவிப்பதில்லை. இதனைப் பின் வரும் வரலாற்றால் அறியலாம்.

இப்பெரியார் ஒரு நாள் இரவிலே தம் அறையில் படுத்திருக்கையில் தமது படுக்கையில் மூன்று மணி சுமாருக்கு ஜில் என்று ஏதோ ஒன்று தம்உடம்பிற் படுவதாய்க்கண்டார். ஏதோ பூச்சியாய் இருக்கும் என்று அதைக் கவனிக்காமலே புரண்டு படுத்துத் தூங்கிவிட்டார். படுக்கையும் சுற்றி வைத்துவிடப்பட்டது. காலையில் வெளியே போய் வேண்டிய காரியங்களை யெல்லாம் பார்த்துவிட்டு அன்று இரவு ஒன்பது மணிக்குத் தம் அறைக்குள் வந்தபோது மேஜையின் மேல் உள்ள பல காகிதங்களுக்கிடையில் சிறிய கட்டு வீரியன் பாம்பு ஒன்று தலை தூக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். அதை அங்கே பார்த்தபிறகே தம் படுக்கையில் முதல் நாள் இரவு கிடந்தது பாம்பு என்ற உணர்ச்சி அவர்க்கு உண்டாயிற்று. அதனால் ஒரு சிறிதும் பதற்றம் அடையாமல் வெளியே வந்து சிலரிடம் சொல்லி அதனை அப்புறப்படுத்தச் செய்து முன் போலவே தம் வேலையை அதே இடத்தில் மனநிம்மதியோடு பார்ப்பாராயினர். இப்படியுள்ள வரலாறுகள் நெருங்கிப் பழகியவர்களுக்கு அநேகம் தெரியும்.

பாரத தேசம் முழுவதும் இரண்டு மூன்றுமுறை யாத்

திரை செய்து செல்லும் இடங்களிலெல்லாம் வேதசாஸ்திர பாடசாலைகளைப் பார்ப்பதும் வித்வத்ஸபைகளை நடத்தி சாஸ்திரபாரங்கதர்களுடைய வாக்யங்களைக் கேட்பதும் சிந்தித்து இன்புறுவதும் அவர் இயல்பு. இப்படிப் பலவகையாலும் தம்மைக் கண்டோர் இவர் ஓர் மஹாபுருஷர் என்று எண்ணுமாறு அவர் வாழ்ந்து வந்தது கூடவே யிருந்து பழகும் பாக்கியம் பெற்ற என்னைப் போன்றவர்களுக்கு நன்கு தெரிந்ததே. யதிகளை வரவேற்றுப் பூஜிப்பதில் இப்பெரியவரைப் போல் சிரத்தையுடையவரைக் காண்பதரிது.

பதின்மூன்றும் அத்தியாயம்.

பிரம்மநிஷ்டர் இயல்பு.

'விஶேஷப்ரதிஷேதேநைவ நிர்திஶ்யதே'

இ-ள் விசேஷங்களை விலக்குவதனாலேயே பிரம்மம் நிரூபித்துக் காட்டப்படுகிறது.

என்ற பிரமாணத்திற்கிணங்க ஞானம் அநேகமாய் விசேஷங்களை விலக்கியே சொல்லப்பட்டது. இதனால் ஞானம் பாவரூபம் உடையதன்று என்று சொல்லப் படுகிறது. பாவரூபம் என்பது என்ன? ஒருவனுக்குத் தான் மனிதன் என்று உண்டாகும் எண்ணமே பாவரூபமாம்.

'பௌருஷம் ந்ருஷு' (7-8)

இ-ள் மனிதர்களுள் மானிடத் தன்மையாய்.

இவ்விதமே ஒவ்வொரு பிராணியிலும் அவ்வவத்தன்மையாய்த் தோன்றும் எண்ணமே பாவரூபமாம்.

இத்தகைய நிலை ஆத்மாவுக்கு தேகாபிமானத்தால் ஆவது. அதனால், அதுவே ஜீவபாவம் ஆகிறது.

'ஶரீராஹிஶாநெந ஜீவகவழ' (நாரத)

இ-ள் தேகத்தில் அபிமானத்தோடு இருக்கும் போது ஜீவனென்று சொல்லப் படுகிறது.

இதனால் ஆத்மாவும் ஜீவனும் ஒன்றானாலும், தேகாபிமானபாவத்தினால் ஜீவன் வேறு போல் தோற்றுகிறான். ஆகையால் பாவரூபம் மோக்ஷத்திற்கு அனுகுணமாவதில்லை

இதனால் ஆத்மா 'பாவவிகாரம் இல்லாதவன் எனவும் ஒருவனாகவே யுள்ளவன் எனவும்' விளங்கும்.

'ஹாவநாஉவிமுா○ தத்ஸ்கா
யஜிஷ○ தநூயொ ஹவ ।' (மைத்)

இ-ள் சகலபாவனையையும் தள்ளி மிச்சமானது எதுவோ அதுவாக ஆகக் கடவாய்...... அதனால் ஞானம் ஒன்றே.

'ஸொகமெவாகிதீயம ஬ூஹ' (சாந்தோ)

இ-ள் பிரம்மம் ஒன்றே இரண்டாவதில்லை.

இதனால் அந்தக்கரணபேதத்தால் ஞானம் பேதப்படுவதன்று. அது பசுக்களின் நிறம் பலவாக இருந்த போதிலும் பால் ஒரே நிறமாய் இருப்பது போலவாம். இக்கருத்துப் பற்றியே பின் வரும் பிரமாணம் வழங்குவது.

'மவாஂஜெநகவணாநாஂ
க்ஷீரஸ்யாவெ்யகவணதா ।
க்ஷீரவத்பஶ்யதெ ஜ்ஞாநஂ
லிஂகிநஸ்து மவாஂ யயா ॥' (அமிர்)

இ-ள் 'பசுக்கள் பல நிறமுள்ளவையாய் இருந்த போதிலும் பால் ஒரே நிறமாய் இருப்பது போல ஞானம் ஒரே ஸ்வரூபமுள்ளது. லிங்கிகள் பலபேதமுள்ளவர்கள்,'

பல ஆகாரமுடைய கண்ணாடிகளால் மூடப்பட்ட ஒரு தீபமானது எதன் வழியும் ஒரே மாதிரியாய்த் தோற்றுவது போலவே பல ஜீவாத்மாக்களிலும் உள்ள ஞானத்தின் ஸ்வரூபம் ஒன்றாகும்.

முன்னே மோக்ஷம் பாவரூபமன்றென்று சொன்னோமாயினும் அது பாவரூபமாயும் இருக்கக் கூடும், அவ்விதம் ஆகும்போது ஸர்வபாவமாகும்.

'க்ஷவெவ ஸ்வஹாவொஂஸி' (தேஜோ)

இ-ள் ஸகலவஸ்துவும் நீயேயாய் இருக்கிறாய்.

இவ்வித பாவனையுடையவன் எவ்விதமா யிருப்பான்? அவன் தனக்கு அந்யமாக ஒன்றையும் பார்ப்பதில்லை.

'நெவ பஶ்யதி ஸ்வாத்மநः பரமகஂ' (வரா)

இ-ள் தனக்கு அந்யமாகப் பார்க்கிறதில்லை.

இதனால் அவன் துவேஷம் அற்றவன் ஆகிறான். தன்னுடைய ஆத்மாவும் தனக்கு அந்யமாகத் தோற்றுகிற வஸ்துக்களுடைய ஆத்மாவும் ஒன்றேயென்று அவன் அறிவதால் இந்த நிலையடைகிறான்.

'ஸர்வபூதாத்மபூதாத்மா' (5-7)

இ-ள் ஸகல பொருள்களுடைய ஆத்மாவாகக் கொண்டவன்.

தவிர, விசேஷத்தை விலக்குவதனாலேயே ஆத்மா சுலபமாகக் கிரகிக்கப் படுகிறான். அதனாலே தான்

'ஸர்வவிசேஷம் நேதி நேதீதி விஹாய யதவசிஷ்யதே தத்அத்வயம் ப்ரஹ்ம' (அத்வய)

இ-ள் ஸகல விசேஷத்தையும் இதல்ல இதல்ல என்று விலக்கி எது மிஞ்சுகிறதோ, அது அத்வயப்பிரம்மம்.

அது எவ்விதம் அமையும்? பசுவுக்குக் கொம்பிருக்கிறது. குதிரைக்குக் கொம்பில்லை. பசுவுக்கு உள்ள லக்ஷணத்தை அறிந்ததன்மேல் அதனை அறிந்தவனுக்குக் குதிரையின் லக்ஷணம் சொல்கையில் அதற்குக் கொம்பில்லை என்ற விசேஷத்தை விலக்கிச் சொல்வதாம். அது சுலபமாக கிரகிக்கப்படுவது போல் ஆத்மா அவ்விதம் சொல்லப்படில் சுலபமாக கிரகிக்கப் படுகிறான்.

'ஸர்வதா ஸர்வபாவோஸ்ம்யஹம்' (மைத்)

இ-ள் நான் எப்போதும் சுலபனாயிருக்கிறேன்.

இது காறும் கூறிய பல விஷயங்களால் பிரம்மநிஷ்டர் இயல்பு ஒருவாறு விளங்கியது. இனி, இதையொட்டியசில விஷயங்களைக் கவனிப்போம். முன்னே ஞானி, எந்த ஆச்ரமத்திலும் இருக்கக்கூடும் எனப் பட்டது. ஆகிலும் அவனுக்குக் கருமவொழிவு அவசியம் என்றறிய வேண்டும். ஏனென்றால் கருமத்திற் செல்லும் சிந்தை பேதபுத்தியைத் தாங்கிநிற்கிறது. எவ்விதமெனில், உபாஸிக்கிறவன் உபாஸிக்கப் படும் பொருள் என்ற பேதம், இப்பேதபுத்தியைத் தரும்.

'காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா:
ப்ரபத்யந்தே(அ)ந்யதேவதா: |
தம் தம் நியமமாஸ்தாய
ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ||' (7–20)

இ-ள் அந்தந்த ஆசையால் அறிவு அபகரிக்கப்பட்டவர்கள். அந்தந்த நியமத்தைக் கைப்பற்றித் தம்முடைய இயற்கையினாலே நியமிக்கப் பட்டவராய் வேறு தெய்வங்களை அடைகிறார்கள்.'

'புத்திரன், பசு, ஸ்வர்க்கம் முதலியவற்றைப் பற்றிய அந்தந்த ஆசையால் அபகரிக்கப்பட்ட விவேக சக்தியையுடையவர்கள் வேறு தெய்வங்களை ஆராதிப்பதற்கு வேண்டிய நியமங்களைக் கைக்கொண்டு தமது ஸ்வபாவத்தினாலே அதாவது முன் ஜன்மத்திலே ஸம்பாதித்து வைத்த ஸம்ஸ்காரவிசேஷங்களாலே அடக்கியாளப் பட்டவர்களாய் ஆத்மாவாகிய வாஸுதேவனைக் காட்டிலும் வேறாய்த் தெய்வங்களைத் தொழுகிறார்கள்.' (கீ-பா)

இதில் தத்வம் என்னவெனில், காமத்தால் ஈச்வரன் உளனாகிறான் என்பதே. அதாவது (ஜீவ) ஸ்வபாவத்தால் உளனாகிறான்.

ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே' (5-14)

இ-ள் ஸ்வபாவம் என்பது செல்லுகிறது.

அது ஸர்வகாம நிவர்த்தி மோக்ஷமாகும் என்று சொல்லப்படுவதாலும் விளங்கும்.

'ப்ரஜஹாதி யதா காமாந்
ஸர்வாந்........மநோகதாந்!' (2-55)

இ-ள் மனத்திலுள்ள சகல ஆசைகளையும் எப்பொழுது தள்ளி விடுகின்றானோ.

அதனால் ஞானம் ஒன்றே ஈச்வர விஷயத்திலும் உதாஸீனபாவம் தரக் கூடியதாம். வேறுவிதயாம் என்று எண்ணுவதும் சொல்வதும் பேச்சு மாத்திரமே.

'வாசாரம்பணம்' (சாந்தோ)

இ-ள் பேச்சு மாத்திரமே.

ஏனென்றால்;

'பரீரேண ஜிதா: ஸர்வே'

இ-ள் எல்லாரும் சரீரத்தால் அவசர்களே.

அதனால் மிகவும் கடினமான மனோதேக துக்கத்தில் ஈச்வரன் இல்லை யென்பவனும் 'ஈச்வரா' என்று கூவிவிடு

வான். அதனால் ஈச்வரனும் தானும் ஒன்றே என்ற அறிவே இந்த பேதப்ரமத்தை நிவர்த்திக்கக் கூடியதாம்' ஏனென்றால் இகபரங்களில் இன்பம் பெறவேண்டும் என்ற ஆசை அதைத்தரற்குரிய ஒரு பொருளை, அதாவது, தனக்கு வேறாகிய ஒரு ஈச்வரனைக் கற்பிக்கிறது. இவ்விதமே ஈச்வரன் உளனாகிறான். ஐஹிகாமுஷ்மிக இஷ்டபலப்பிராப்திக்காகவே மனிதன் பலவித தேகக்கிரமங்களுடன் தபஸ்ஸும் செய்கிறான். ஆகிலும் அது தன்னலங்கருதும் ஆசையாகிய பற்றினால் உண்டாவதால் ஆத்மாவை அடைவிப்பதன்று.

'ந தவொஹிரு ெமுஃ' (11-48)

இ-ள் உக்ரதபஸ்ஸுகளாலும் ஆவதில்லை.

இதனால் கர்மி ஆத்மா தேகத்திற்கு அந்யன் என்றமட்டில் திருப்தியடைந்து விடுகிறான்.

ஆத்மாவுக்குப் பரலோக சம்பந்தம் இருப்பதை அறியாமல் கர்மாவில் பிரவர்த்திக்கமாட்டான் என ஒருவாறு சொல்லக் கூடும். (பிரம்மஸூத்ரபாஷ்யம்)

ஆனால் ஆத்மா போக்குவரவுடையவனல்லன் என்பதை அறிவதில்லை.

'மெ௦தவ௱ ஷெபஹீநொ௨ஷி
மஉநாஷிவிவஜி-உதஃ ।' (மைத்)

இ—ள் போக வேண்டிய தேசமற்றவன் போகுதல் முதலியன இல்லாதவன்.

இவ்விதமாகிய ஆத்மாவைப்பற்றிய உண்மையறிவே மோக்ஷஹேதுவாகிறது. இதனால் கர்மம் மோக்ஷஹேதுவாவதில்லை யென்றும் தெளிவாய் விளங்குகிறது. ஆனால் ஆத்மாவை அறிவது எவ்விதம்? ஆத்மா அன்னியமாகாத பக்தியால் எளிதில் அறியப்படுகிறான்.

'அநந்யசேதா: ஸததம்
யோ மாம் ஸ்மரதி நித்யச: ।
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த
நித்யயுக்தஸ்ய யோகின:' (8–14)

இ-ள் பார்த்தா! எவன் வேறொன்றிலே மனமில்லாதவனாய், என்னை எப்பொழுதும். நீடித்து நினைக்கிறானோ, அந்த எப்பொழுதும் ஒருநிலைப்பட்ட யோகிக்கு நான் எளியதாய் அடையத்தக்கவன்.

பக்தி என்பது தொடர்ச்சியான விசாரமே என்பது இதனால் விளங்கும். காமத்தால் ஈச்வரன் உளனாகிறான் என்று சொல்லப் பட்டது காமம் மாயையின் ஸ்வரூபம்.

'ரஜோ ராகாத்மகம்' (14-7)

இ-ள் ரஜோகுணம் ராகவடிவுள்ளதாம்.

அதனால் ஜீவனைப் போல் ஈச்வரனும் மாயாஸ்வரூபியே.

'ஜீவேச்வரௌ மாயிகௌ' (அத்வய)

இ-ள் ஜீவேச்வரர்கள் மாயாஸ்வரூபிகள்.

மாங்களால் ஆக்கப் பட்ட ரதம் மரத்தின் ஸ்வரூபம் ஆவது போலவே இவை கருதத் தக்கன. இவ்விதம் ஜீவேச்வரர் மாயிகர் ஆயினும் அவர்களுள் பேதம் உண்டு. ஈச்வரன் ஸத்வத்தில் நிலைத்தவன்.

'ஸாக்ஷிகோசஹ்ஞ' (மைத்)

இ-ள் ஈசன் ஸாத்வி குணமுடையோன்.

அதனால் பிரவிருத்தியற்றவர். ஜீவன் ஸாத்விகத்தோடு ரஜோதமோ குணங்களையும் தழுவுபவன் ஆனதால் பிரவிருத்தி மோகங்களுக்கு உட்பட்டவனாகிறான். இவையே குணங்களின் தர்மம் எனப் படுகின்றன.

'ப்ரகாசஞ்ச ப்ரவ்ருத்திஞ்ச மோஹமேவ ச' (14.22)

இ-ள் பிரகாசம், பிரவிர்த்தி, மோகம் என்பன (குணங்களின் தர்மங்களாம்) 'குணங்கள் என்பன மாயையின் விகாரம்.'

'விகாராம்ஸ்ச குணாம்ஸ்சைவ
வித்தி ப்ரக்ருதிஸம்பவாந்' (13.19)

இ-ள் விகாரங்களையும் குணங்களையும் பிரகிருதியினின்று பிறந்தவையாய்த் தெரிந்துகொள்க.

'குணங்கள் பிரகிருதியினின்று தோன்றியவை யாகையால் பிரகிருதி ஸ்வரூபமே.' அதாவது குணங்களின் சேர்க்கையாகிய மாயை. (கீ-பா) இது பின்வருமாறு விளக்கப்படும்

ஜலத்தில் மூன்று அவஸ்தைகள் பார்க்கிறோம். ஸ்வபாவமான குளிர்ந்த நிலையும் சிறிது உஷ்ணமேறியதும் உள்ள சூடான நிலைமையும் அதிக உஷ்ணமேறியதும் கொதிக்கும் நிலையும் என்ற இம்மூன்றும் ஜலத்தில் காணப்படுகின்றன. ஜலம் ஒன்றேயாயினும் இம்மூன்று நிலை காணப்படுவதால் ஸ்வபாவமாய்க் குளிர்ந்துள்ள தண்ணீர் ஸத்வ குணத்துக்கு சமானமாகுமானால், சூடான வெந்நீர் ரஜோகுணசமானமாம். கொதிக்கும் வெந்நீர் தமோ குண சமானமாம். ஜலம் போல் மாயையும் ஒன்றே. குணங்கள் அதன் விகாரங்கள் ஆகின்றன. ஜலத்திற்கு மூன்று நிலை உண்டாயினும் மூன்றும் வெவ்வேறு காலத்தில் இருக்குமேயன்றி ஏக காலத்தில் இராது. குணங்களும் இப்படியே.

'ஒவ்வொரு பிராணிகளிடத்திலும் ஸத்வரஜஸ்தமோ குணங்கள் மூன்றும் உண்டு. அவைகளில் எந்தக்குணம் எந்தக் காலத்தில் மேலிடுகிறதோ, அப்போது அந்தக் குணமானது மற்ற இரண்டு குணங்களையும் அடக்கிவிட்டுத் தன் காரியங்களையே அதிகமாய்ச் செய்விக்கும். (ஸ்ரீ—பா)

'இம்மூன்றும் பிரகிருதியின் குணங்களே.

'அந்தப் பிரகிருதியின் குணங்கள் என்றால் விகாரங்கள் அதாவது சரீரமாகவும் இந்திரியங்களாகவும் தோன்றுதல்.
(கீ—பா

இவ்வித விகாரம் மாயையின் ஜடத் தன்மையைக் காட்டுகிறது. அதனால் ஆத்மசேதனமின்றி ஜடமாகிய மாயாப் பிரபஞ்சம் தோற்றுவதன்று என்று இதனால் அறியலாம். மாயையின் விகாரம் என்பது என்னவெனில் ஒன்றேயாகி

புள்ள ஆத்மாவைப் பலவிதமாய்க் கிரகிப்பதாம். சந்தேக மற்ற தன்மை விகாரமற்றதாம்.

'ஜ்ஞ ந கம்பதே' (ப்ரச்ந)

இ-ள் அறிந்தவன் அசைவதில்லை.

மேலே கூறிய விஷயங்களால், ஸாத்விகம் மிகவுடைய வனுகையால் ஸாத்விக ரூபியாய் இருப்பவனே ஈச்வரன் என்பதும், மூன்று குணங்களும் கலக்கப் பெற்றிருப்பவன் ஜீவன் என்பதும் விளங்கும்.

'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநச்நந்நந்யோ அபிசாகசீதி ॥' (முண்ட)

இ-ள் இரண்டு பக்ஷிகள், (ஜீவாத்மா, பரமாத்மா) எப்பொழுதும் விட்டுப் பிரியாதவை. ஸமானக்கியாதியுள்ளவை ஒரே விருக்ஷத்தை (சரீரத்தை) அடைந்திருக்கின்றன அவைகளில் ஒன்று (ஜீவன்) புண்யபாவபலத்தை ருசியோடு புசிக்கிறது. மற்றொன்று அப்படிப் புசிக்காமல் தனிப்பட்டு விளங்குகிறது.

இதனால் ஞானி கர்மத்தினை முற்றிலும் தள்ளுவதே தகுதியாம். ஆத்மாவை இச்சிக்கிறவர்கள் கர்மத்தை விட்டு விடத்தான் வேண்டும், (பிரகத்—பாஷ்யம்)

இக்காரணத்தால் ஞானி எவ்வித கர்மத்தையும் தள்ளிவிடவேண்டுமென்பதன்று. அவன் தன்னை எவ்விதகர்மமும்

பற்றுவதில்லையென்றறிந்தும் விநோதத்தின் பொருட்டுச் செய்கிறான். அது ஒவ்வாதேயாயினும் அவன் செய்யத் தக்கதேயாம். விநோதத்தின் பொருட்டுக் கர்மம் செய்வது ஸர்வசாதாரணம். ஜாலவித்தை பொய்யென்றும் அதைப் பார்ப்பது பயனற்றதென்றும் தெரிந்தும் அது விநோதத்தின் பொருட்டுப் பார்க்கப் படுகிறது. விநோதத்தின் பொருட்டே பாலர்கள் உபசரிக்கப்படுகிறார்கள். இவ்விதத்தால் விநோதகர்மங்கள் உலகத்திற்சாதாரணமாய் உள்ளன. இதனால் ஞானியும் பற்பல தானக்கிரியைகளைச் செய்பவனாகிறான்.

‘ தாநக்ரியாஶ்ச விவிதா:
க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி:, ।’ (17–25)

இ-ள் பலவகையான தானம் என்னும் கர்மங்களும் பயனை அதில் நோக்காது செய்யப் படுகின்றன.

இதன் கருத்து என்னவெனில், ஒவ்வொரு மனிதனும் இயன்றவரையில் தானக்கிரியைகள் செய்ய வேண்டும் என்பதே. அவ்விதம் செய்துவந்தால் காலக்கிரமத்தில் ஞானம் ஏற்பட்டு அதில் விநோதத்தின் பொருட்டு இவை செய்யப் பட நேரும், அவ்விநோதம் கைக்கொள்ளத் தக்கதேயாம். இப்படிக் கிரியை செய்பவர்களாயினும் இவர்கள்.

‘ தேऽபி கர்மபி: ந பத்யந்தே ’ (3-3)

இ–ள் அவர்களும் கர்மங்களால் விடப் படுகிறார்கள்.

என்பதற்கிணங்கக் கர்மப் பற்று இன்றியே இருப்பர்.

பதினான்காம் அத்தியாயம்.

பிம்பப்பிரதிபிம்பபாவம்.

பிரம ஸ்ரீ கிருஷ்ணையர் அவர்களுடைய இயல்பை அறிந்தவர்களுக்கு பிரம்மானந்தானுபவிவிஷயமாய் அறியத்தக்க நூதனவிஷயம் ஒன்றும் இல்லையென்று முன்னே சொல்லியதால், 'நான் அவரைத் தெரிந்துகொண்டவன், அதனால் எனக்கு இனிமேல் தெரிந்துகொள்ளவேண்டிய தத்வம் வேறொன்றுமில்லையென்று நான் கூறுவது போல் தோற்றலாம். ஆனால் அது அவ்விதமன்று. பின் எவ்விதம் ஆகுமென்றால்,

'கர்மணைவ ஹி ஸம்ஸித்திம்
ஆஸ்திதா ஜநகாதய: ।
லோகஸங்க்ரஹமேவாபி
ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி ॥

யத்யதாசரதி ஶ்ரேஷ்ட:
தத்ததேவேதரோ ஜந: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே
லோகஸ்ததநுவர்ததே ॥

ந மே பார்தாஸ்தி கர்தவ்யம்
த்ரிஷு லோகேஷு கிஞ்சந ।

𑌨𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂
𑌵𑌰𑍍𑌤 𑌏𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥

𑌯𑌦𑌿 𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂
𑌜𑌾𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥'

(3—20, 21, 22, 23)

இ-ள் ஜநகர் முதலானோர்கள் கர்மத்தினாலேயே சித்தி பெற்றார்கள். நீ உலகத்தை நல்வழியில் நடக்கச் செய்தலை நன்கு ஆலோசித்தும் (கர்மத்தைச்) செய்யத் தகுந்தவனேயாகிறாய். மேலானவன் எவற்றைச் செய்கிறானோ, அவற்றையே மற்றைய ஜனங்கள் (செய்கிறார்கள்). அவன் எதனைப் பிரமாணமாகக்கொள்கிறானோ அதனை உலகம் அனுசரிக்கிறது. பார்த்த! மூன்றுலகங்களிலும் எனக்குச் செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. (இனி நான்) அடையவேண்டியதாய் (இப்பொழுது) அடையாதிருப்பது (ஒன்றும்) இல்லை. ஆயினும் கர்மத்தில் இருக்கவே யிருக்கிறேன். எனெனில் நான் சோம்பல் இல்லாதவனாய் எப்பொழுதாயினும் கர்மத்தில் இராவிட்டால், பார்த்த! மனிதர்கள் எவ்வகையிலும் என் வழியை அநுசரிப்பார்கள்.

சிரேஷ்டர்களுடைய வழியை உலகம் அநுஸரிக்கும் என்றும் அதற்கிணங்க ஜனகர் முதலானவர் கர்மஞ்செய்து வந்ததாயும் சொல்லித் தமக்கு அபேக்ஷையென்பதேயொன்றும் இல்லாமலிருந்தபோதிலும் தாமும் கர்மத்தில் இருப்பதாகவும் அஃது எதற்கெனில் தம்மையே உலகம் அநுசரிக்

கும் எனவும் சிரேஷ்டர் கர்மம் செய்யாதொழியில் சாமான்யருக்குக் கர்மத்தில் சிரத்தை குறையுமெனவும் அவர்கள் அந்நிலையையடைந்தால் சித்தசுத்தி ஏற்பட்டு ஞானத்தைப் பெற இயலாதெனவும் ஆகையால் தாம் கர்மம் செய்ய அவசியம் நேரிட்டதெனவும் பகவான் தம்மையே சிரேஷ்டன் என ஆத்மஸ்துதி பண்ணிக் கொண்டதாகிறது. அஃது அகங்காரமானதால் பகவானிடம் அகங்காரம் உண்டோ என்று சந்தேகிக்க இடமுண்டாகும். ஆனால், இவ்விதம் பகவான் சொல்லியது அகங்காரத்தோடு சம்பந்தித்ததாகாது.

ஏனெனில், அகங்காரம் அல்லது கர்த்ருத்வ புத்தியின் காரணம் குணங்கள்.

'ஜ்ஞானம் கர்ம ச கர்த்தா ச
த்ரிதைவ குணபேதத: ।' (18-19)

இ—ள் ஞானமும் கர்மமும் கர்த்தாவும் குணங்களுடைய பேதத்தால் மூன்று விதமாகவே (இருக்கின்றன)

'இந்த சுலோகத்திலுள்ள 'ஏவ' என்கிற பதத்தால் கர்த்ருத்வம் குணங்களுடைய சம்பந்தத்தாலே என்றும் ஆத்மாவுக்கு ஸ்வபாவமாகக் கர்த்ருத்வம் இல்லையென்றும் சொல்லப்பட்டது. (ஸ்ரீதர)

இதனால் பகவானிடத்தில் அகங்காரம் இருக்குமானால் அதன் காரணமாகிய குணங்களும் அவரிடம் இருப்பதாகக் கொள்ள நேரிடும். பகவானே,

'ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம்' (14-27)

இ—ள் யான் பிரம்மத்திற்கிருப்பிடம்.

என்பதற்கிணங்கப் பிரம்மமாயிருக்கிறார். நான் பிரம்மத்துக்குப் பிரதிமையாய் இருக்கிறேன் என்றால் பிரம்மமே நான் என்பது தாத்பர்யம். (ஸ்ரீதரர்)

இதனால் பகவான் பரமாத்மாவுக்குப் பிரதிபிம்பம் என்று சொல்லப் படவேண்டும். பிம்பப்பிரதிபிம்பங்களுக்குள் பேதமென்பதில்லை. ஏனென்றால் ஒரு கண்ணாடியில் நம் முகத்தைப் பார்க்கும் போது முகத்தில் திலகம் இல்லை என்றால் கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பத்திலும் காணப் படாது. பிறகு அணிந்துகொண்டு பார்த்தால் பிம்பத்தில் உள்ளது பிரதிபிம்பத்தில் தோன்றும். இதனால் பிம்பப்பிரதிபிம்பங்களுக்கு வேற்றுமை இல்லை என்பது வெளியாம்.

'஬ிம்஬வ்ரதி஬ிம்஬ஆ஦ஶந஡ந ஷஹஆ ஹ்ரஷஶா நிவர்த்தஃ।' (அங்கபூர்ண)

இ—ள் பிம்பப்பிரதிபிம்ப தர்சனத்தினால் பேதபிரமம் நிவர்த்தியாயிற்று. பகவான் பரமாத்மாவுக்குப் பிரதிபிம்பம் ஆகையால் பரமாத்மாவுக்கும் பகவானுக்கும் பேதமில்லை என்பதை இதனால் அறியலாம். பரமாத்மஸ்வரூபம்,

'நிமஂ ணொஉஹ்ஹி' (மைத்)

இ—ள் குணமற்றவனாயிருக்கிறேன்.

என்றபடி குணமற்றதாகையால் பகவானிடத்தில் குணங்கள் இல்லை என்றாகும்.

இவ்வாறு கூறுவதன் கருத்து என்னவெனில், அந்த குணங்கள் பகவானிடம் சுவாதீனத்தில் இருக்கின்றனவென்பதாம்.

'ப்ரக்ருதிம் ஸ்வாமவிஷ்டாய' (4-6)

இ—ள் தன் மாயையை வசப்படுத்திக் கொண்டு (இருக்கிறேன்).

நம் ஸ்வாதீனத்தில் இருக்கும் வஸ்துக்களை நாம் இஷ்டம் போல் அடக்கியாண்டு அழிக்கலாம். அதுபோல் பகவானும் மாயையைத் தன்னிச்சைப் படி அடக்கி யாண்டு அழிக்கவல்லவன் என்பதாம். இதனால் குணங்களை அகங்காரகாரணங்கள் என்றும் பகவானுக்குக் குணங்கள் இல்லாமையால் அகங்காரம் இல்லையென்றும் வெளியாகிறது. ஆயின் அந்தப் பிரயோகத்தின் பயன் என்னவெனில்; பகவான் தாம் சொல்லப் புகுந்த விஷயத்தைக் கேட்போன் மனத்திற்பதியும்படி வேறுவிதமாய் விளக்கக்கூடாமையால் தமக்கு அகங்காரம் இருப்பதாய்த் தோன்றும்படி இவ்விதம் கூறினார் என்று அறியவேண்டும்.

அது பேலவே, நான் பிரம்மஸ்ரீ கிருஷ்ணையரை அறிந்தவன் அறியாதவன் என்பவை இவ்விடத்தில் விஷயமல்ல. இத்தன்மையுள்ள ஒரு மஹாபுருஷன், இந்த ஊரில் வசித்து வந்தார் என்பதை நான் எவ்விதம் உலகத்துக்குத் தெரிவிக்கலாம்? உலகம் அதனை அறியவேண்டிய அவசியம் என்ன? இப்படியிருந்தவோர் மஹானின் சரித்திரத்தை அனுசந்திப்

பதால் ஏதாவது நன்மை விளையக் கூடுமாயின் அது விளைக என்பதே. பெரியோர்களுடைய சரித்திரம் உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணக்கூடியதல்லவா ?

'ஸ்தானே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா
ஜகத் ப்ரஹ்ருஷ்யத்யநுரஜ்யதே ச |' (11-36).

இ—ள் உம்மைப்புகழ்வதினால் உலகம் மகிழ்கின்றது ப்ரீதியையும் அடைகின்றது.

உலகமகிழ்ச்சி ஒவ்வொருவரும் விரும்பத்தக்கதே.

பிம்பப்பிரதிபிம்பப்ரஸ்தாபத்தில் ஜீவனை விசாரிப்பதும் யுக்தமே. ஜீவன் யார் ?

'ப்ரஹ்ம சைதந்யம் தேஷு ப்ரதிபிம்பிதம் பவதி |
ப்ரதிபிம்பா ஏவ ஜீவா இதி கத்யந்தே |' (மஹாநா)

இ—ள் பிரம்மசைதந்யமானது அவைகளில் பிரதிபிம்பிக்கின்றது. பிரதிபிம்பங்களே ஜீவர்கள் என்று சொல்லப் படுகின்றன.

இதனால் ஜீவன் பரமாத்மாவுக்கு ப்ரதிபிம்பம் ஆகிறான். பிம்பப்ரதிபிம்பங்களுக்கோ பேதமில்லை என்று முன்னே காட்டப் பட்டது, அது உளதாகில் பிரதித்வனிசங்கீதம் அந்யம் என்று ஏற்படும். தவிர மோக்ஷாவஸ்தையில் பேதம் இருக்குமாகில் பயம் ஏற்படுவதாகிறது,

‘உதரமந்தரம் குருதே ।
அத தஸ்ய பயம் பவதி ।’ (தைத்)

இ–ள் எப்பொழுது ஒருவனுக்குத் தான் வேறு ஆத்மா வேறு என்ற பேதபுத்தி உண்டாகிறதோ, அப்பொழுது அவனுக்குப் பயம் உண்டாகிறது.

அதனால் ஜீவாத்மபரமாத்மபேதம் பயத்துக்கு ஹேதுவாம்.

‘ஸூக்ஷ்மமப்யந்தரம் க்ருத்வா
ஜீவாத்மபரமாத்மனோ: ।
யஸ்திஷ்டதி ஸ மூடாத்மா
பயம் தஸ்யாபி பாஷிதம் ॥’ (யோக)

இ–ள் ஜீவாத்ம பரமாத்மாக்களுக்குள்ளே அற்பமாவது எவன் பேதத்தை நினைத்திருக்கிறானோ, அந்த மூடாத்மாவுக்கே பயம் உண்டு என்று சொல்லப்படுகிறது.

அதனால் பயம் இருப்பது மோக்ஷாவஸ்தை ஆவதில்லை என்றாகும்.

‘விகதேச்சா பயக்ரோதோ
யஸ்ஸதா முக்த ஏவ ஸ: ।’ (5–28)

இ–ள் ‘ஆசை பயம் கோபம் இவைகளை விட்டவன் எவனோ அவன் எப்போதும் முக்தன்.

பயம் எவ்வாறு ஏற்படுவதாம்? நமக்குக் கீழானவை

ஸமமானவை, உயர்வானவை என்ற இம்மூன்று வஸ்துக்களும் இருப்பதாய்த் தோன்றும் போதே, பயம் ஏற்படுவதாகிறது. எறும்பும் முள்ளும் நமக்கு எவ்வளவோ கீழான அற்பப் பொருள்கள் அல்லவா? இவற்றாலும் நமக்குத் துன்பமும் பயமும் உண்டாவதால் சமமும் உயர்வுமான பொருள்களிலிருந்து நமக்கு உண்டாகும் பயத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? தசரதருக்கும் கைகேயிக்கும் இருந்த நேசம் உடலிரண்டும் உயிர் ஒன்றும் போன்றிருந்ததாயினும் அவ்விருவர்க்கும் பரஸ்பரபயம் ஏற்படவில்லையா? இதனால் துவைத ஞானம் மோக்ஷஹேதுவாவதில்லை என்று வெளியாகிறது.

'யாநி த்வைதஜ்ஞாநாநி ஸம்ஸாரமோக்ஷஹேதவே ந ஹவந்தி।' (கீ-பா)

இ-ள் துவைத அறிவு மோக்ஷ ஹேதுவாவதில்லை.

அத்வைத அறிவே மோக்ஷஹேதுவாம். இக்கருத்தை விளக்கும்.

'அயமாத்மா ப்ரஹ்ம' (பிரகத்)

இ-ள் இந்த ஆத்மாவே பிரம்மம்.

என்ற பிரமாணமும் இங்கு கவனிக்கத்தக்கது.

இதுகாறும் சொல்லிய விஷயங்களால் துவைதஞானம் மோக்ஷஹேது வாவதில்லையென்று தோன்றும். ஆயினும்

அது உபதேசிக்கப்படுவது ஏனெனில், "ஈசுவரனே தான் என்கிற ஞானம் உடைய ஒருவன் மற்றொருவனுக்கு பேத ஞானத்தை உபதேசிப்பது விரோதமல்லவா? அர்ஜுனன் அப்படிப்பட்ட ஞானியாகவில்லையாகையால், அவனுக்கு பேதஞானோபதேசமே தகுந்தது. இதனாலும், கபிலரால் செய்யப்பட்டிருக்கிற சாங்கிய சாஸ்திரமானது ஜீவேசுவரா பேதவிஷயத்தில் விருத்தமானாலும் குணங்களுடையவும் அதனால் உண்டான காரியங்களுடையவும் நிரூபண விஷயத்தில் பிரமாணம் என்பதாகப் பிரகிருதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. (கீ-பா)

என்றதனாலும் துவைதஞானத்துக்கு உரியமதிப்பு பகவான் கொடுத்திருந்ததாய் வெளியாம்.

பதினைந்தாம் அத்தியாயம்.

சரித்திரத்தொடர்ச்சி.

———:o:———

நான் முப்பத்தைந்து வருஷகாலமாகப் பிரமஸ்ரீ கிருஷ்ணையரவர்களுடன் இருந்து வந்தேன். அவர்க்கு ஸ்வபாவமாகவே விஷயங்களிற் பற்று இல்லை. இதனை அவரது நீண்டகாலப் பிரம்மசரியமே தெரிவிக்கும். ஆனால் அவர் எவ்விதம் இருந்து வந்தார்?

‘அஸக்தபுத்தி: ஸர்வத்ர’ (18-49)

இ—ள் எவ்விடத்தும் புத்தி பற்றாதவன்.

என்பதற்கிணங்க, அவர் சகலத்திலும் சம்பந்தப்பட்டிருந்தபோதிலும் ஒன்றிலும் ஒட்டாமலிருந்துவந்தார். அவர் செல்வத்தில் ஸாமாந்ய ஜனங்களைப்போன்ற பற்றுடையவரல்லர் என்பது பின்வரும் செய்தியால் விளங்கும். அவர் ஆரம்பம் செய்து நடத்தி வந்ததும் இப்பொழுது என்னால் நடத்திவரப் படுவதுமான ‘சிந்தூர் பாங்க்’ என்று வழங்கும் நிதிக்கு அவர் ‘தர்மோபகாரதனார்ஜனநிதி’ என்று பெயர் கொடுத்திருந்தார். அது அவ்விதமே சிலகாலம் வழங்கிவந்தது. இதனால் தனம் சம்பாதிப்பதிலும் லோ

கோபகார எண்ணமே கொண்டிருந்தார் என்பது விளங்கும்.

அதனால் ஆனது என்ன ?

'அஸக்தோ ஹ்யாசரந் கர்ம
பரமாப்நோதி பூருஷ: ।' (3-19)

இ—ள் பற்றற்றவனாய்க் கர்மஞ்செய்த புருஷன் மேலானதைப் பெறுகிறான்.

அஸக்தம் என்பது எவ்விதம் அமையும்? ஒருவன் தன்னுடைய திரவியத்தை விருத்தி செய்து ரக்ஷித்தும் அது போய் விடுகிறது. அதனால் அவன் சித்தத்தில் கிலேசம் என்ற விகாரம் ஏற்படுவதில்லை. ஏனெனில் உயிருடனிருந்தால் என்றோ ஒரு நாளில் திரும்பவும் தனம் பெற்றுத் தனிகன் ஆகலாம் என்று எண்ணவும் நம்பிக் கொள்ளவும் இடம் உண்டு.

தஸ்மாத்ஸர்வஸ்வமபி ஸம்ஹ்ருதம் ஜீவத புருஷஸ்ய புநர்ஜீவதி பஶ்யதி நாமாகம் । (பிரகத்)

இ—ள் எல்லாச் சொத்துக்களும் குறைவானாலும் ஒருவன் சரீரத்துடன் உயிருடன் இருப்பானாகில் சொத்துடன் மறுபடியும் சேர்வான்.

இவ்வாறு லாபநஷ்டத்தினால் விகாரம் அடையாமல் லோகயாத்திரையில் இருந்து வரும் புத்தியே அஸக்தபுத்தியென்பதாம் என்று விளக்கப் பட்டது.

அவருக்குக் கீர்த்தி சம்பாதிப்பதிலும் ஆசையில்லை. அதற்காக அவர் ஒன்றும் செய்யவில்லை. ஆயினும் கர்மாநுசாரமாய் ஏற்பட்ட கீர்த்தியை ஸ்வீகரித்துக்கொண்டார். கீர்த்தியில் ஆசையில்லாத ஒருவர், அதை ஸ்வீகரிக்காமல் தள்ளிவிடவேண்டுமே என்று கேட்கக்கூடும். அவ்விதமன்று. ஏனெனில், கீர்த்தியுள்ள ஒருவன் அதை நிமித்தமாய் வைத்துக்கொண்டு கீர்த்தியில்லாத ஒருவன் உலகத்துக்குச் செய்யக்கூடிய உபகாரத்தைக்காட்டிலும் ஜாஸ்தியாகவே செய்யக்கூடும். கீர்த்தி ஸம்பாதிப்பதன் தத்வம் இதுவே. அதனால் கர்மானுசாரமாக வந்த கீர்த்தியை அவர் ஸ்வீகரித்துக்கொண்டார். இப்படிச் சிலகாலம் சென்றபின் அகீர்த்தி வந்து விடுமோ என்று சந்தேகம் உண்டாயிற்று. கீர்த்திமான் அகீர்த்தியைத் தன்னிடம் அணுகாமல் தடுக்கவேண்டியது அவசியமல்லவா?

ஸம்பாவிதஸ்ய சாகீர்த்தி:
மரணாததிரிச்யதே । (2-34)

மதிப்பைப் பெற்றவனுக்கு அகீர்த்தி மரணத்திலும் அதிகமாம்.

ஆகிலும் அவர்க்கு ஒன்றும் சம்பவிக்கவில்லை. தற்சமயம் யுக்தம் எனத்தோன்றியபடியால் அவருடைய பாரத்தை என்னிடம் ஒப்பித்தார் வேறொன்றும் செய்யக்கூடவில்லை. அவருடைய பாரத்தை அவ்விதம் ஒப்பித்ததும் அஸக்த புத்தியே ஆகிறது. அதனால் அகீர்த்தி தடுக்கப்படவேண்டியும் அவருடைய கீர்த்தி ரக்ஷிக்கப் படவேண்டியும் அதே நோக்கத்தோடு அவருடைய பாரத்தை வகிக்க நான் எவ்விதத்தி

னும் சக்தி யற்றவனா யிருந்தும், ஆனால் ஒரு மாடு தான் சுமக்கும் வஸ்துவின் தன்மையறியாமலே அதைச் சொற்ப காலம் சுமந்திறக்குவதுபோலவும் என் பிறவிக்கு முந்தியே அவருடைய பாரம் என்னாற் சொற்பகாலம் அவ்விதமே சுமந்திறக்கப் படவேண்டும் என்ற ஈச்வர இச்சை இருக்குமோ என்ற எண்ணத்துடனும் ஸந்தர்ப்பத்தைப் பார்த்து,

(மநஸ்ஸமாதாய = மனதைச் சமாதானித்து. (17–11)

என்றபடி மனதை அமைதியோடு திடப் படுத்திக் கொண்டு, அதற்கு நான் தலைப்பட்டேன். ஆகையால் அவரைப் போல் அகிர்த்தியின்றியே அவருடைய பாரம் என்னிடமிருந்து ஒழிவதனையே பந்தம் விலகி மோக்ஷம் வருவதற்குத் துல்யமாய் மதிக்கிறேன். விதேகமுக்தராகிய பிரமஸ்ரீ கிருஷ்ணையர் விஷயத்தில் இனிமேல் நாம் என்ன செய்யலாம்? அவரை மறவாதிருக்கும் வழிகளை ஆராய்ந்து செய்து அவர் வழியைப் பின்பற்றி நடப்பதேயாம்.

பதினாறாம் அத்தியாயம்.

ஈச்வர தத்வம்.

நாம் கோவிலில் என்ன பார்க்கிறோம்? சிலா ரூபத்தைப் பார்க்கிறோம். ஈசுவரன் ஸர்வவியாபியாகையால், சிலாரூபத்தில் மட்டும் இருக்கிறான் என்று சொல்வதற்கில்லை. ஈச்வரன் ஒருவனேயென்பதும் ஒன்றுக்கு மேற்பட்ட ஈச்வரர் இருக்கவியலாது என்பதும் எவ்விதத்திலும் பொருத்தமே. ஜீவேச்வர அபேதம் ஞானமாகையாற் பொருத்தமே. பேததிருஷ்டியிலும் ஈச்வரனுக்கு ஒருமையே பொருத்தமானது. நம்முடைய குழந்தைகள் நம்மை ஒருமையாக அழைப்பதிலே சந்தோஷம் அடைகிறோம் அல்லவா? ஈச்வரனும் நமக்கு அத்தகைய அன்புக்கும் பக்திக்கும் உரிமைக்கும் உரிய ஒருவனேயாகையாலும் இது பொருந்தும்.

'ந த்வத்ஸமோஸ்தி' (11-43)

இ-ள் உனக்கு ஒப்பானவன் இல்லை.

என்று சொல்லப்படுவதும் கேட்கிறோம்

இரண்டு ஈச்வரர்கள் இருந்தால் என்ன? அது சாத்தியமில்லை.

ஈச்வரன்

நபஸ்ஸ்ப்ருஶம் = ஆகாயத்தை அளாவியிருப்பவன். (11.24)

என ஸர்வவ்யாபியென்று கூறப் படுவதால் இரண்டாவது ஈச்வரனுக்கு வியாபிக்க இடமில்லை. ஒரு ஈச்வரன் வியாபிக்காமல் சேஷமாகிய இடம் இருந்தாலன்றோ இரண்டாவது ஈச்வான் வியாபிக்கக்கூடும்? அப்படி இயலாதாகையால் இரண்டாவது ஈச்வரன் இல்லை.

இந்தப் பிரபஞ்சம் ஈச்வரனிடத்தில் இருக்கிறது.

'தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம்
ப்ரவிபக்தமநேகதா ।
அபஶ்யத்தேவதேவஸ்ய
ஶரீரே பாண்டவஸ்ததா ॥' (13-17)

இ—ள் அங்கே தேவதேவரான அவருடைய சரீரத்திலே பலவகையாய்ப் பிரிந்திருப்பதும் ஒன்றிலே நிற்பதுமான பிரபஞ்சம் முழுவதையும் அப்பொழுது பார்த்தான்.

இதனால் என்ன விளங்குமெனில், இரண்டாவது ஈச்வரன் இருப்பானாகில் வேறொரு பிரபஞ்சம் இருக்க வேண்டுமே யென்ற சந்தேகம் ஏற்படும். அஃதில்லையாகையால் ஈச்வரன் ஒருவனேயென்பதும் இரண்டு ஈச்வரர்கள் இருந்தால் அவர்களுக்குள் வித்தியாஸம் ஏற்பட்டு ஒரு காரியமும் நிலையாக நடைபெறாது.

ஒரு ஈச்வரனைக் காட்டிலும் அதிகமான ஈச்வரர்கள் இருந்தால் உலகவிவகாரம் ஒழுங்காய் நடைபெறாது. (கீ-பா)

ஆகையால் ஈச்வரன் ஒருவனே என்பதும் ஈச்வரன் ஸர்வஞ்ஞனும் ஸர்வ சக்தனும் ஆகையால் இருவராயிருக்க இடமில்லையே யென அறிவதால் அவன் ஒருவனே எனவும் தீர்மானிக்கவேண்டும்.

இவ்வாறு ஈச்வரனும் ஆத்மாவும் ஒன்று எனறிவதால் விளையும் பயன் யாது?

பிரமாணங்களால் ஆத்மாவை ஈச்வரனாக அறிந்தபின்பு, ஒருவன் வேறொருவனுக்குக் கீழ்ப்படிதல் அடையவிரும்ப மாட்டான். (கீ-பா)

'வெதாஹம் ஸமதீதாநி
வத்ரொநாநி சாஜுந ।
ஹவிஷ்யாணி ச ஹூதாநி' (7-26)

இ-ள் சென்று போயினவையும் நிகழ்கின்றவையும் (வருபவை) வரப்போகின்றவையுமாகிய பொருள்களை அறிகிறேன்.

இக்கருத்துக்குறிக்கவே பின் வரும் பிரமாணமும் உண்டு.

'அநந்தவீய்யாமிதவிக்ரமஸ்த்வ' (14-40)

இ-ள் அளவில்லா வீரியத்தையும் அளவிறந்த பராக்கிரமத்தையும் உடையவன் நீ.

ஸர்வஜ்ஞனானால் இரண்டு ஈச்வரர்களுக்கு அவசியம் என்ன? அவ்விதம் அவசியம் ஏற்படுமானால் ஈச்வரன் ஸர்வஜ்ஞனாகமாட்டான். ஈச்வரனுக்கு வேறொரு ஈச்வரன் ஸஹாயம் வேண்டுமானால் ஈச்வரனுடைய பூர்ணத்வம் பாதிக்கப்படுகிறது. அவ்விதமானால் அந்த ஸஹாய ஈச்வரன் பிரதான ஈச்வரனுக்குச் சீடனாகிறான். ஆகையாலும் ஈச்வரன் ஒருவனே இருக்கக் கூடும்.

ஈச்வரன் எத்தன்மையன் என்பதை விசாரித்தாலும் ஒருவனே என்பது வெளியாம். அவன் எத்தன்மையனென்னில்,

'𑌸𑌮𑍋𑌽𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁' (9-29)

இ—ள் யான் சகலப் பிராணிகளிடத்திலும் சமமாயிருக்கிறேன்.

இதனால் ஈச்வரன் பூர்ணமாயிருக்கிறான் என்பது விளங்கும்,

𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌮𑌾𑌂 = பூரணமாயிருக்கும் என்னை. (7-1)

என்ற வாக்கியத்தால் இது உறுதியாம்.

இவ்விதம் ஈச்வரன் சகலத்திலும் சமமாகவும் பூர்ணனாகவும் இருப்பதால் ஒருவனே ஈச்வரன் என்று துணியலாமல்லவா?

எப்படி சமமாயிருக்கக்கூடும்?

காமம் என்ற தோஷம் இன்மையால்.

‘காமாதிரஹிதோऽஸ்ம்யஹம்’ (மைத்)

இ—ள் காமாதிகள் அற்றவனாயிருக்கிறேன்.

அதனாலே மோகமற்றவன் ஈச்வரன். ஜீவனே மோக முடையவன்.

‘அநீஶயா ஶோசதி முஹ்யமாந:’ (முண்ட)

இ—ள் அநீசத்தன்மையால் மோகித்துக்கொண்டு துக்கிக்கிறான்.

இவ்விதம் பலவாறு ஆராயப் பட்டு ஈச்வரன் ஒருவனே என்பது தெளிவாகிறது. உண்மையில் அவ்விதமிருந்தும் இவ்விஷயத்தில் உலகம் மோகம் அடைந்துவிடுகிறதே. அது எதனால்?

‘தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி
மோஹநம் ஸர்வதேஹிநாம்’ (16–8)

இ—ள் தமோகுணமோ அஞ்ஞானத்தினின்றும் பிறப்பதாகவும் எல்லாத் தேகிகளையும் மயக்குவதாகவும் தெரிந்துகொள்.

இதனால் மோகம் தமோ குணத்துக்கு இடங்கொடுப்பதால் ஆவதே. அதனால் விளைவது என்ன?

‘அதோ கச்சந்தி தாமஸா:’ (14–18)

இ—ள் தாமஸர்கள் கீழே செல்லுகிறார்கள்.

அதோகதி என்பது இது விஷயமாய் உலகத்தில் ஏற்படும் சமாதானக் குறைவேயாகிறது. அசமாதானம் ஸத்யத்தை அறியும் சக்தியைக் குறைத்து விடுகிறது.

ஒருவன் தான் அறிந்த ஸத்யத்தை உலகத்துக்குப்போதிக்கவும் உலகசமாதானம் வேண்டுமன்றோ? அஃது இல்லையாயின் போதகனும் போதனையும் பயன் படுவதில்லையே.

'ஜிதாத்மந: ப்ரசாந்தஸ்ய
பரமாத்மா ஸமாஹித: |' (6–8)

இ—ள் தன்னடக்கம் கொண்டு சாந்தமாயிருப்பவனுடைய பரமாத்ம ஸ்வரூபமானது ஒரு நிலைப்பட்டு நிற்கிறது.

அந்த அமைதிக்கு விரோதமாகிய அசமாதானத்தால் உலகக்ஷேமத்துக்குக் குறைவுண்டாகிறது.

'அசாந்தஸ்ய குத: ஸுகம்' (2–66)

இ—ள் ஒழிவு (அமைதி) அற்றவனுக்குச் சுகமேது?

எதுவும் விருத்தி அடைவதற்கு உலகசமாதானமே முதற்காரணம் அல்லவா? ஆகையால் அது இல்லாமற் போவது உலகத்துக்கு அதோகதியாகிறது. இதை எவ்விதம் பரிகரிப்பது?

'நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா
த்வத்ப்ரஸாதான்மயாச்யுத |' (18–73)

இ—ள் மயக்கம் தீர்ந்து விட்டது. அச்சுத! உமது அருளினால் நினைவு கூருதலும் என்னால் அடையப் பட்டது.

இதனால் பரமாத்மப்ரகாசத்தைச் சம்பாதிக்க யத்னம் செய்வதே மோகநிவர்த்தியாகிறது.

அப்பிரசாதம் எவ்விதம் ஏற்படுவதாம்.

'பக்த்யா லப்யஸ்த்வநந்யயா' (8-22)

இ—ள் வேறு பற்றில்லாத பக்தியினாலே அடையத் தக்கவன்.

பதினேழாம் அத்தியாயம்.

ஜீவபரமாத்மைக்யம்.

ஈச்வரோபாஸனை பேததிருஷ்டியோடு தொடங்கப்படுவதாயினும் இஷ்டபலப்ராப்திக்கேதுவாயிருப்பதால் நிஷ்பலமாக முடிவதில்லை.

‘ பஹவொ ஜ்ஞாநதபஸா
பூதா மத்³பா⁴வமாக³தா: ।’ (4–10)

இ–ள் ஞானமாகிய தபஸினால் பரிசுத்தராகிய அநேகர் என் தன்மையை அடையலானார்கள்.

இதனால், தன்னை விடச் சிருஷ்டிக்கு வேறு கர்த்தா இருப்பதாகக் காணாதவன் தன்னையும் ஈச்வரனையும் ஒன்றாய்ப் பார்க்கிறான் என்று விளங்குகிறது.

ஆக³தா: = அடைந்தார்கள். என்றதால் மோக்ஷம் சாத்தியம் என்று தெளிவாகிறது.

‘ நைஷ மோக்ஷமார்க³: இதா³நீம் ஸம்வ்ருத்த: கிம் தர்ஹி பூர்வமபி ’ (கீ–பா)

இ–ள் இந்த மோக்ஷமார்க்கமானது இக்காலத்தில்

எற்பட்டதன்று. அது ஆதிகாலத்திலுங்கூட (இப்படியே இருந்தது).

இதனால் மோக்ஷமார்க்கத்தைப் பற்றிய அறிவு இக்காலத்திலே புதியதாய்த் தோன்றியதில்லையென்பதும் புராதனமாகவே உண்டு என்பதும் உரைலாம். 'ஈஶ்வரபாவம்' என்றால் ஈச்வரபாவம். ஈச்வரன் ஒருவனானதால் தன்னைத் தவிர வேறு ஈச்வரன் இல்லையென்று அறிவது. அவ்விதம் அறிவு எற்படுமாகில் சிருஷ்டிகர்த்தா தானேயாகவேண்டும்.

'ஸ்வயம் ப்ரஹ்மா = தானே சிருஷ்டிகர்த்தா. (அத்யா)

அது எவ்விதம் அமையும்? ஸ்வப்நத்தில் தோன்றும் பொருள்கள் ஒன்றும் வாஸ்தவமில்லையாயினும் பல பலவிதமாய் எல்லாம் தோற்றுகின்றன.

இராத்திரியில் காணும் ஸ்வப்நத்தில் பகல் தோற்றுகிறது. ஆனால் அது வாஸ்தவத்தில் இல்லை. அதனாலே தான் ஸ்வப்நத்தில் எல்லாவற்றையும் ஒருவன் தானே சிருஷ்டித்துக் கொள்கிறான் என்று கொள்ளவேண்டும்.

'அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே' (பிரகத்)

இ—ள் ஸ்வப்நத்தில் ரதங்களையும் குதிரைகளையும் மார்க்கங்களையும் ஆத்மா சிருஷ்டித்துக் கொள்கிறான்.

எந்த ஜீவன் இவ்விதம் ஸ்வப்நத்தில் நடைபெறும் சிருஷ்டியைப் போல் ஜாக்ரத்திலும் தானே சிருஷ்டி கற்பனையைச் செய்வதாய் அறிகிறானோ, அந்த ஜீவன் ஈச்வரனைச் சிருஷ்டிகர்த்தாவாக அறிவதில்லை, ஜாக்ரவஸ்தையிலும்

சிருஷ்டி செய்வதாய் எப்படி அறியக்கூடும் என்று கேட்கலாம்.

'ஜாக்ரதாதிர்விமோக்ஷாந்தः
ஸம்ஸாரோ ஜீவகல்பித: ।' (மஹோ)

இ-ள் ஜாக்ரத் முதல் மோக்ஷம் வரையுள்ள ஸம்ஸாரம் ஜீவனாலே கற்பிக்கப்பட்டன.

சிருஷ்டி தன்னாலே நிகழ்வதாய் ஒருவன் அறிந்து கொள்வது தன் ரோகத்தைத் தானே நிவர்த்திப்பது போலாம்.

'விஷ்ணுரஹந்தவம்ஸ்ருதி' (சாந்)

இ-ள் சகலப் பிரபஞ்சமும் தன்னிடத்திலிருந்துண்டானதாக எவன் காண்கிறானோ.

ஈச்வரன் சிருஷ்டி கர்த்தாவில்லையென்பது எவ்வாறு?

'விச்வரூபோ ஹ்யகர்த்தா' (ச்வே)

இ-ள் விச்வரூபராயும் அகர்த்தாவாயும் இருக்கிறவர்.

என்ற பிரமாணத்தால் இது சித்தமாம்.

ஆனால் சிருஷ்டியைத் தனக்கு அந்யமாகப் பார்க்கிற ஜீவன் தனக்கும் அதற்கும் அந்யமான கர்த்தா ஈச்வரன் ஒருவன் இருக்கவேண்டும் என்று அறிகிறான்.

'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:' (10-28)

இ-ள் யான் சகலத்துக்கும் உற்பத்தி.

இங்கு ஈச்வரன் சிருஷ்டிக்குக் கர்த்தாவாவன் என்று சொல்லப்படுவது கவனிக்கத்தக்கது. இதையே சிருஷ்டியை அந்யமாய்ப் பார்க்கும் ஜீவன் ஈசுவரனை உணர்ந்து ஈச்வர உபாஸனை செய்கிறான்.

இதனால் ஆத்மாவை அறியவேண்டுமாயின், ஜீவன் ஜகத் ஈச்வரன் என்ற இம்மூன்றும் அறியப் படவேண்டும் என்பதாயிற்று.

'த்ரயம் யதா விந்ததே ப்ரஹ்மமேதத்' (சுவே)

இ—ள் வன் ஜகத் ஈச்வரன் இம்மூன்றும் அறியப்படின் பிரம்மம் அறியப்படும்.

அதாவது இம்மூன்று விகாரத் தோற்றத்துக்கும் விகாரமற்ற ஆத்மாவே காரணம் என்று அறிதல். இதனால் ஆத்மாவுக்கு மாயாசம்பந்தத்தால் ஜீவபாவமும் அதனால் சிருஷ்டியும் அதற்கு மேல் ஈச்வரனும் தோன்றின என்று அறியலாம். இவையே இம்மூன்று பொருள்களின் தத்வமாம் சிருஷ்டியைத் தனக்கு அந்யமாய்ப் பார்க்கிற ஜீவன் அதன் தத்வத்தை விசாரிக்கத் தலைப்படுகிறான்.

'யஸ்யைதாநஸ்ய ஸர்வஸ்ய
ஜகதஸ்தத்வமீர்யதே।' (சுக)

இ-ள் காணப் படுகிற சகல ஜகத்துக்கும் தத்வம் சொல்லப் படுகிறது.

இதனால் சாஸ்திரங்களில் சிருஷ்டிக் கிரமம் சொல்லப் பட்டது, அவற்றைப் பற்றிய தத்வத்தையுணர்ந்து லயசிந்தனை அடைவதன் பொருட்டேயாம். லயசிந்தனையென்பது காரியத்தைக் காரணவடிவமென்றறிந்து சிந்தித்தலாம். அது இதில் விளங்கும்;

ஸூவாவஸொய,நவ,திவதூய-ஃ ரொகவஷாவதா யிகா வ்,வணஃ । (ஐ-பா)

இ-ள் இந்த ஜகத்தின் லக்ஷணத்தை எளிதிற் போதிக்கும் நிமித்தம் உலகவிவகாரம் போல் ஒரு கட்டுக்கதையாகக் கூறப் பட்டது.

இவ்விதமாகத்தன்னுடைய கற்பனையே சிருஷ்டியென்று அறிகிற ஜீவன் என்னவாகிறான்? தானே சிருஷ்டிகர்த்தா என்று அறிகிறான்.

'ஸ விஶ்வக்ருத் ஸ ஹி விஶ்வஸ்ய கர்த்தா' (பிரகத்)

இ-ள் அவன் தான் ஸர்வத்தையும் சிருஷ்டித்தவன் ஜகத்தை உண்டாக்கினவன்.

இவ்விதம் அறியும் ஜீவன் ஆத்மாவுடன் ஒன்றாகிறான்

அது எவ்விதம் ஆகிறான்? அநேகபாத்திரங்களில் உள்ள ஜலத்தில் வெவ்வேறாய் ஒவ்வொன்றிலும் தோன்றும் ஸூரிய பிரதிபிம்பம் ஜலம் இல்லாமற்போகும் பாத்திரத்தில் தோன்றாமல் பிம்பத்துடன் லயித்து விடுகிறது, அது போல எந்த ஜீவனுடைய ஜீவபாவத்துக்கு ஏதுவான அந்தக்கரண

உபாதி, ஞானத்தினால் ஜலம் போல் இல்லாமற் போகிறதோ, அந்த ஜீவன் ஆத்மாவோடு ஒன்றாகிறான். ஜீவர்களுக்கு அந்தக்கரண உபாதி வெவ்வேறும் என்பதை விளக்க.

'அந்தஃகரணோபாதிகாஃ ஸர்வே ஜீவாஃ'

இ-ள் எல்லா ஜீவர்களும் அந்தக்கரணத்தை உபாதியாய் உடையவர்களே.

என்ற பிரமாணம் உளது.

இவ்விதம் பிம்பப் பிரதிபிம்ப பேதம் தோற்றமேயன்றி வாஸ்தவத்தில் இல்லாதவாறு போல, ஜீவாத்மபரமாத்மபேதமும் தோற்றமே; வாஸ்தவமில்லை : யென்று சொல்லப்படுகிறது,

'த்வம் ப்ரஹ்மாஸி அஹம் ப்ரஹ்மாஸ்மி ஆவயோரந்தரம் ந வித்யதே ॥' (மஹா)

இ-ள் நீ பிரம்மமாய் இருக்கிறாய். நான் பிரம்மமாய் இருக்கிறேன். நம் இருவருக்குள் பேதம் இல்லை.

இவ்விதமே,

'ஜீவாத்மநோரநந்யத்வம்
அபேதேந ப்ரஶஸ்யதே ।' (மாண்)

இ-ள் ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய அநந்யத்வம் அபேதத்தால் புகழப் படுகிறது.

:O:

பதினெட்டாம் அத்தியாயம்.

மோக்ஷப் பிராப்தி.

சிருஷ்டியை அறிகிறவன் ஜீவன். அவன் பிரதிபிம்ப ரூபன். பிம்பப்பிரதிபிம்பங்களுக்குள் பேதமில்லையென்பது காட்டப்பட்டது. இதனால் சிருஷ்டியை அறிகிற ஜீவன் ஆத்மாவுக்கு அந்யனல்லன் என்று ஆகிறது. இவ்விதம் சிருஷ்டி ஆத்மஸ்வரூபமானதால் ஞானிகள் தீமையைத் தம்மிடத்தில் உணருகிறார்கள். அவர்கள் ஏன் அவ்வாறு உணருகிறார்கள்? சிருஷ்டியைப் பார்க்கிறவன் ஜீவன். அவன் பிரதிபிம்பத்தால் ஆனவன். அதாவது மாயோபாதியால் மாயையின் சேர்க்கையால் ஆனவன். சேர்க்கை யெனபது தோஷமுடையதே. எவ்விதம் எனில், உப்பும் சர்க்கரையும் தனித்தனி உபயோகமாயினும் இரண்டும் சேர்ந்தால் உபயோகமாவதற்கில்லை. இதனால் விசாரமின்றி ஏற்படும் சேர்க்கை துக்க ஹேதுவாகிறது. இவ்விஷயத்தைப் பின் வரும் திருஷ்டாந்தத்தால் அறியலாம்.

ஒரு கிராமத்தை அடுத்ததோர் வயலில் பசுவொன்று காவற்காரர் அறியாமல் பயிரை மேயும் வழக்கமுடையதாயிருந்தது. சுற்றிலும் உள்ள வேலியில் இப்பசு தான் நுழையத்தக்க சிறியதோர் வழியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. பல நாளும் போய்ப் பழக்கப் பட்டதால், இந்த வழி

யாலே வயலில் நுழைந்து வயிறு கொண்டமட்டும் பயிரை மேய்ந்து திரும்பிவிட இதற்கு எளிதாய் இருந்தது. ஒரு நாள் இதைக் கண்டதோர் புதுப்பசு, தானும் இப்படிச் செய்யவெண்ணி இப்பசுவைப் பின்றொடர்ந்து இது நுழையும் சிறுவழியால் வயலுக்குள் நுழைந்தது. பல நாளாகப் பயிர் நஷ்டப் பட்ட வயற்குரியவன் அன்று இரண்டு பசுக்களையும் கண்டு அவற்றைப் பிடிப்பதற்குத்துரத்தினான். சிறு வழியால் நுழைந்து வந்து போய்ப் பழக்கப்பட்ட பசு முன்னே ஓடி எளிதாய் வெளியேறித் தப்பிப் பிழைத்தது. புதுப் பசுவோ அந்த வழியால் அவ்வளவு எளிதாய் வெளியேற அறியாமல் சிக்கிக்கொண்டு அவஸ்தைப் பட்டது. இயற்கையிலே சாதுவாகிய பசு துஷ்டப் பசுவோடு சேர்ந்து பெரிதும் கஷ்டப் பட்டது. இது போலவே சகவாசதோஷத்தால் தீமை நேரிடும்.

இதனால் பிரதிபிம்பனாகிய ஜீவன் மாயோபாதியாகிய தோஷத்தால் ஆவதாலும் சிருஷ்டியைப் பார்க்கிறவன் ஆனதாலும் ஞானி தீமையைத் தன்னிடத்திலே பார்க்கிறவன் ஆகிறான். ஆகினும் துவேஷிப்பதில்லை.

'ததொ ந விஜுகுப்ஸதெ' (ஈச)

இ-ள் அதனால் ஒன்றையும் நிந்திப்பதில்லை.

ஞானி தீமையைத் தன்னிடத்தில் உணர்வதாகச் சொல்லப்பட்டது.

'த்யூதம் ச்சலயதாமஸ்மி' (10-36)

(இ-ள்) யான் வஞ்சகருள் சூதாட்டமாய் இருக்கிறேன்.

இதனால் ஞானி த்வேஷமின்றியே தீமையை விலக்கும் முயற்சியில் இருப்பவன் ஆகிறான்.

'ப்ரகாஶம் ச ப்ரவ்ருத்திம் ச
மோஹமேவ ச பாண்டவ ।
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி
ந நிவ்ருத்தானி காங்க்ஷதி ॥' (14-22)

இ-ள் பாண்டவ! விளக்கமென்ன, முயற்சியென்ன, மயக்கமென்ன, வந்தவற்றை வெறுப்பதில்லை; போனவற்றை விரும்புவதில்லை.

தமோகுணகாரியமான மோகத்தினால் மோகம் அடைந்தேன் என்றும் அஞ்ஞானத்தினால் அவிவேகம் அடைந்தேனென்றும் ரஜோகுணகார்யமான கர்மப் பிரவிருத்தியால் ஸ்வரூப நிஷ்டைக்கும் பாதகமுண்டாகும்படி கர்மங்களைச் செய்துகொண்டிருக்கிறேன் என்றும் ஸத்வகுணகாரியமாகிய பிரகாசம் முதலியவைகளால் ஸ்வரூப நிஷ்டைக்குப் பாதகமாய் விஷயசுகத்திற் பற்றுதல் உண்டாகிறபடியால் அதுவும் பந்த ஸ்வரூபமாய் இருக்கிறது என்றும் எண்ணி அவைகளைத் துவேஷிப்பதில்லை. (கீ-பா)

பின் வரும் பிரமாணத்தாலும் ஞானி தீமையைத்துவேஷிப்பதில்லையென்பது விளங்கும்.

'ஸாதுஷ்வபி ச பாபேஷு
ஸமபுத்திர்விஶிஷ்யதே ।' (6-9)

இ-ள் நல்லோரிடத்தும் தீயோரிடத்தும் சமமான பார்வையுள்ளவன் மேலாகிறான்.

ஞானி இவ்விதம் தோஷமற்றவன் ஆகிறான். ஆனால் அவன் தன்னிடத்தில் தீங்கையுணர்வது மோக்ஷத்துக்குப் பாதகமாவதில்லையா? ஒருகாலுமில்லை. ஏன்?

‘𑌅𑌪𑌿 𑌚𑍇𑌦𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃
𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵
𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥’ (4–36)

இ-ள் நீ பாபம் செய்தவர் எல்லாரையும் பார்க்கிலும் அதிகம் பாபம் செய்தவனானாலும் ஞானமாகிய தெப்பத்தினாலேயே சகலபாபங்களையும் கடந்து விடுவாய்.

இவ்வாறு ஞானி எவர்க்கும் மேம்பட்ட சிறப்பு வாய்ந்தவனாய் இருப்பதனாலே தான் பிறர் எவராலும் வணங்கத் தக்கவன் ஆகிறான்.

இக் கருத்துப் பற்றியே

‘𑌧𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌵𑌯𑍋𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌯
𑌕𑌿𑌂𑌕𑌰𑌾𑌃 𑌶𑌿𑌷𑍍𑌯𑌕𑌿𑌂𑌕𑌰𑌾𑌃 ॥’ (மைத்)

இ-ள் பணத்தாற் பெரியவன் வயதாற் பெரியவன் புத்தியாற் பெரியவன் என்னும் இவர்கள் ஞானத்தினாற் பெரியவன் எவனோ அவனுக்கு வேலைக்காரர்களாயும் அவனுடைய சிஷ்யர்களுக்கு வேலைக்காரர்களாயும் இருககிறார்கள்.

இதனாலும் ஞானியின் உண்மைப் பெருமை விளங்கும்.

ஞானத்தால் சகல தோஷங்களும் நிவர்த்தியாவது எவ்வண்ணம்?

'𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍
𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿
𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ॥' (4-37)

(இ-ள்) ஜ்வலிக்கிற தழலானது விறகுகளை எவ்விதம் நீறாகச் செய்கிறதோ அவ்விதமே ஞானமென்றும் தழலானது சர்வ கர்மங்களையும் நீறாகச் செய்கிறது.

இதனால் ஞானத்தால் ஏற்படும் மோக்ஷத்துக்கு ஹானி இல்லையென்று சித்தமாகிறது.

ஈச்வரன் ஸர்வ வியாபியானதால் சிலா ரூபத்தில் மட்டும் இருக்கிறான் என்று சொல்வதற்கில்லை என்று முன்னே கூறப்பட்டது.

ஆனால் கோயிலுக்குப் போவது உபயோகமில்லையா?

தடையின்றி உபயோகமுள்ளதே.

என்ன உபயோகம்?

சிலாரூபம் ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்பதை ஞாபகப் படுத்துகிறது.

அதுபோலவே இந்தப் பாடசாலையில் பிரம்மஸ்ரீ கிருஷ்ணையருடைய உருவப்படம் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போதெல்லாம் அவருடைய ஞாபகம் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் அவர் இருக்கவே இருக்கிறார் என்கிற எண்ணத்துடன் நாம் எல்லோரும் அவரவர் காரியங்களை நடத்திவந்தால் சகல க்ஷேமங்களும் ஏற்படும்.

இந்த வூர் மஹாஜனங்கள் பிரம்மஸ்ரீ கிருஷ்ணையர் மோக்ஷமடைந்து விட்டார் என்று சொல்கிறார்கள். வெகுஜன வாக்யம் ஈச்வரவாக்யமே. அதனால் நாம் அதை நம்பலாம். மோக்ஷம் அடைவது என்றால் என்ன? தேகேந்திரியாதியான மாயாஸ்வரூபத்தை நினையாமல் மறந்து தன் ஸ்வரூபத்திலேயே நிலைப்பதாம். அதாவது சித்தத்துக்குச் சலனம் ஏற்படாமல் செய்து கொள்வது.

'சித்தே சலதி ஸம்ஸாரோ
நிச்சலம் மோக்ஷ உச்யதே' (யோகசிகா)

இ—ள் சித்தம் சலிக்கையில் ஸம்ஸாரம் என்றும் சலிக்காமல் இருக்கையில் மோக்ஷம் என்றும் சொல்லப்படுகிறது.

ஸ்வரூபம் எப்படிப்பட்டது? எங்கும் உள்ளது. இந்த மாயாப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமானது. அதனால் அதற்கு அந்யமானது. அது பிராணிகளிடத்தில் வெவ்வேறாய்த் தோற்றின போதிலும் ஒன்றாகவே யிருக்கிறது.

'அவிபக்தம் ச பூதேஷு
விபக்தமிவ ச ஸ்திதம்' (13-16)

இ-ள் அந்த அறியவேண்டிய பொருள் வேறாக வகுக்கப் படாதது. ஆயினும் பூதங்கள் நிமித்தமாய் வேறாக வகுக்கப் பட்டது போல் உள்ளது.

ஞானி என்பவன் ஆத்மாவை அறிந்து அநுபவிப்பவனே. ஆயின் அவன் எவ்விதம் அநுபவிப்பான்?

‘ஸ்வாநுபூத்யா ஸ்வயம் ஜ்ஞாத்வா
ஸ்வாத்மாநமகண்டிதம் ।’ (அத்யா)

இ-ள் ஸ்வாநுபவத்தினாலே அகண்டிதமான தன் ஆத்மாவைத் தானாகவே அறிந்து அந்த சித்தனானவன் தன்னிடத்தில் விகாரமற்ற ஆத்மாவாகச் சுகமாய் இருக்கிறான்.

அத்தகைய அநுபவ ஞானியே ஆத்மவஸ்துஸ்வரூபத்தைப் பற்றி வெளியிட்டுச் சொல்ல வல்லவனாவன். வேறொருவனும் ஆவதில்லை.

‘உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம்
ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்சிந: ।’ (4—34)

உண்மையைக் கண்டுணர்ந்த ஞானிகள் ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள்.

என்பது இதற்குப் பிரமாணமாம்.

அதனால் அவ்விதமல்லாத என்னைப் போன்ற ஒருவன் சொல்வது தகுதியன்று.

ஆகிலும் அது முற்றிலும் அவ்வண்ணமே கொள்ளப்

படாமல் வேறு விதமும் கருதப் படுவதுண்டு. எவ்விதமெனில், ராஜபோகத்தை வர்ணிக்கும் ஒரு கவி அப் போகத்தின் அநுபவமின்றியே அழகாகவும் உண்மையில் அநுபவித்தவன் போலவும் வர்ணித்து உலகத்தை ஆனந்திக்கச் செய்வதுண்டன்றோ? அது போலவே ஞானவிஷயத்தில் இது வரை நான் சொல்லிய விஷயங்களும் கிரகிக்கத்தக்கன.

இவ்விதமே, முதலில் வித்தையில் பாலன் நான் எனத் தொடங்கினேன்: முடிவிலும் பாலனே! ஆனால் உலகிலே ஒருவரும் பால்யாவஸ்தையிலேயே நிலைத்து விட விரும்புவதில்லையே. ஆகிலும் அது அவ்விதமன்று. ஏனெனில், அந்த பால்யாவஸ்தையிலும் உயர்ந்த அவஸ்தை ஒன்றும் இருப்பதில்லை. ஒரு மனிதனுடைய பலவித அவஸ்தைகளிற் கவலையற்ற பால்யாவஸ்தையே மேன்மையாக மதிக்கத் தக்கதாமல்லவா? ஆகிலும் தத்வத்தில் அது எவ்விதம் அமைவதாகிறது? முதலிலும் பாலன்: முடிவிலும் பாலன்! என்பதே விகாரமற்ற தன்மையாகிறது.

அதனால் அந்த அவஸ்தையொன்றே தழுவத்தக்கதாம்.

'தஸ்மாத் பால்யேந திஷ்டாஸேத்' (பிரகத்)

இ-ள் ஆகையால் பால்யத்தோடே இருக்க விருப்பம் கொள்ள வேண்டும்.

இவ்விதம் ஞானமார்க்கானுகுணமாக ஒரு ஜீவன் மோக்ஷப் பிராப்தி பெறும் மார்க்கம் பலவழிகளாலும் தெளிவாகவும் சுருக்கமாகவும் ஒருவாறு கூறப் பட்டது.

———:o:———

பின்னுரை.

இது விஷயம் வெளியிடுவதில் உத்தேசம் ஒன்றே. அது உலக நன்மை என்பதாம், அது யாதெனில், ஒவ்வொருமனிதனும் நன்மை அடைவதே உலக நன்மை எனத் தக்கது. அவ்வண்ணம் உலக சமாதானம் உளதாகில் மட்டுமே ஒவ்வொருவனுக்கும் சமாதானம் ஏற்படுவதாகிறது. அதனால் ஒவ்வொருவனும் தன் சமாதானத்தைக் கோருவது தன் நினைப்பின்றியே உலக சமாதானத்தைக் கோருவதாம். இதனாலே தான் பகவானது விச்வரூபத்தை தரிசித்தவுடன் மஹரிஷிகள் முதலானவர்கள் 'மங்களமுண்டாகுக' என்று பிரார்த்தித்தார்கள். ஆகையால் அதே பிரார்த்தனையுடன் இவ் வுபந்யாஸம் முடிவு பெறுகிறது.

'ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா:
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி: ।'

(11-21)

இ-ள் மஹரிஷிகள் சித்தர்கள் இவர்களது கூட்டங்கள் 'வாழி' எனக் கூறி நிரம்பிய துதிகளால் உம்மைத் துதிக்கிறார்கள்.

மேற்கோள் விளக்கம்.

	ஸம்ஸ்கிருதம்.	தமிழ்.	சுருக்கப்பெயர்.
1	அக்ஷ்யுபநிஷத்	அட்சியுபநிஷத்து	அக்ஷி.
2	அத்வயதாரகோபநிஷத்	அத்துவயதாரகோபநிஷத்து	அத்துவய
3	அத்யாத்மோபநிஷத்	அத்தியாத்மோபநிஷத்து	அத்தியா
4	அந்நபூர்ணோபநிஷத்	அந்நபூர்ணோபநிஷத்து	அந்ந
5	அம்ருதபிந்தூபநிஷத்	அமிர்தபிந்தூபநிஷத்து	அமிர்
6	ஆத்மபோதோபநிஷத்	ஆத்மபோதோபநிஷத்து	ஆத்ம
7	ஆத்மோபநிஷத்	ஆத்மோபநிஷத்து	ஆத்மோ
8	ஈசாவாஸ்யோபநிஷத்	ஈசாவாஸ்யோபநிஷத்து	ஈசா
9	ஐதரேயோபநிஷத்	ஐதரேயோபநிஷத்து	ஐதரே
10	கடோபநிஷத்	கடோபநிஷத்து	கடம்
11	கேநோபநிஷத்	கேநோபநிஷத்து	கேந
12	சாந்தோக்யோபநிஷத்	சாந்தோக்யோபநிஷத்து	சாந்தோ
13	த்ரிசிகிப்ராஹ்மணோபநிஷத்	திரிசிகிப்பிராம்மணோபநிஷத்து	திரிசிகி

14	𑌤𑍈𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	தைத்திரீயோபநிஷத்து	தைத்
15	𑌨𑌾𑌦𑌬𑌿𑌨𑍍𑌦𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	நாதபிந்தூபநிஷத்து	நாத
16	𑌨𑌿𑌰𑌾𑌲𑌂𑌬𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	நிராலம்போபநிஷத்து	நிரா
17	𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	பிரச்நோபநிஷத்து	பிரச்ந
18	𑌪𑍈𑌂𑌗𑌲𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	பைங்கலோபநிஷத்து	பைங்
19	𑌬𑍃𑌹𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	பிரகதாரண்யகோபநிஷத்து	பிரகத்
20	𑌮𑌹𑌾𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	மஹாநாராயணோபநிஷத்து	மஹா
21	𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	மஹோபநிஷத்து	மஹோ
22	𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	முக்திகோபநிஷத்து	முக்தி
23	𑌮𑍁𑌂𑌡𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	முண்டகோபநிஷத்து	முண்ட
24	𑌮𑍈𑌤𑍍𑌰𑌾𑌯𑌣𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	மைத்ராயண்யுபநிஷத்து	மைத்ராய
25	𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	மைத்ரேயோபநிஷத்து	மைத்
26	𑌯𑍋𑌗𑌶𑌿𑌖𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	யோகசிகோபநிஷத்து	யோக
27	𑌰𑍁𑌦𑍍𑌰𑌹𑍃𑌦𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	ருத்ரஹ்ருதயோபநிஷத்து	ருத்ர
28	𑌵𑌰𑌾𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	வராகோபநிஷத்து	வரா
29	𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌶𑍍𑌵𑌤𑌰𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	சுவேதாச்வதரோபநிஷத்து	சுவே
30	𑌶𑍁𑌕𑌰𑌹𑌸𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	சுகரஹஸ்யோபநிஷத்து	சுகர
31	𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌰𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍	ஸர்வஸாரோபநிஷத்து	ஸர்வ

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
iii	11	நிருக	மிருக
3	22	16—16	15—16
4	2	மாயை ‥ ய	மாயையை
5	8	புத்திபில்	புத்தியில்
8	10	அத்மாவும்	ஆத்மாவும்
17	7	ஆனால்	அதனால்
19	5	முள்லவனாயி	முள்ளவனாயி
21	6–7	அங்ஙனமெ ஆத்மாவை மறுப்பதும்	ஆத்மாவை மறுப்பதும் அங்ஙனமே.
24	5	கொண்டறிா	கொண்டறிய
29	11	சர்வச்க்தியும்	சர்வசக்தியும்
ஷை	21	ஒன்றுமில்லை	ஒன்றுமில்லை
		ஏஎனன்றால்	ஏனென்றால்,
30	15	பிரகந்நாரதபுராணம்	பிரகந்நாரதீயபுராணம்
31	12	யென்றே	யென்றே
ஷை	25	கால்த்திற்	காலத்திற்
40	19	அருமைமெய	அருமையே
42	15	என்ன சொல்ல	சொல்ல
44	5	அதுவே	அதுவே.
53	8	காணவில்லை”	காணவில்லை” (கீ—பா)
78	8	யன்கு	நன்கு
80	18	பசுக்கனின்	பசுக்களின்
83	2	விஷயங்ஙளால்	விஷயங்களால்
85	5	அதைதரற்க்குரிய	அதைத்தரற்குரிய

88	12	இருக்குமெயன்றி	இருக்குமேயன்றி
89	3	விகாரமற்றதாம்	விகாரமற்றதாம்
95	11	இதனுல	இதனுல்
ஷை	18	பேலவே	போலவே
96	3	ஏன்பதெ	என்பதெ
ஷை	11	யுக்த்மே	யுக்தமே
103	11	அகிர்த்தி	அகீர்த்தி
106	8	எனறிவதால்	என அறிவதால்
ஷை	12	மாட்டான்	மாட்டான்
107	22	சமமாபிருக்க	சமமாயிருக்க
110	4	பிரகாசத்தை	பிரசாதத்தை
112	17	ஏன்று	என்று
ஷை	22	சிருஷடி	சிருஷ்டி

அடியில் காட்டப்பட்ட சுலோகங்களுக்கு குறிப்புகள் விட்டுப்போனபடியால் அவைகளை இங்கு காட்டப்பட்டிருக்கின்றன.

பக்கம்	சுலோகத்தின் எண்ணிக்கை		அவற்றின் குறிப்பு
11	இரண்டாவது சுலோகம்		(14—19)
13	முதல்	ஷை	(2—61)
84	4-வது	ஷை	(யோக)